கல்கி

KALKI
27.7.97
ரூ. 4.00



எல்லா
படங்களிலும்
க்குநர்களுடன்
ஏன் தகராறு?

கமல் ஸ்பெஷல் பேட்டி!



SunLine
Super - Refined 100% Sunflower Oil
ஹா! ஹா! மெழுத்தன்மையிலிருந்து
எனக்கு முற்றிலும் விடுதலை!
Free from solvent extracts • Vitamin 'E' enriched • Anti-Cholesterol
SSD Oil Mills Co. Ltd., Chennai - 600 056.

"கேப்டன் பதவி போனால் போகட்டும்!"

— டெண்டுல்கர் ஆவேசப் பேட்டி!

■ சிம்மம்



ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளுக்காக இலங்கை கிளம்புமுன் பெங்களூர் விமான நிலையத்தில் சச்சின் டெண்டுல்கரைச் சந்தித்தோம். பேட்டி என்றதும் தயங்காதது மட்டுமல்ல; ரொம்பவும் வெளிப்படையாக, அதிரடியாகப் பேசினார் கேப்டன். தேர்வுக் குழுவின்மேல் தம் அதிருப்தியை இத்தனை வெளிப்படையாக இதுவரை எந்த கேப்டனும் வெளிப்படுத்தியதில்லை! சுடச்சுடப் படியுங்கள்!

கல்கி : இலங்கை சுற்றுப் பயணத்துக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள வீரர்கள் குறித்து உங்களுக்கு அத்தனை திருப்தி இல்லையாமே?

சச்சின் : இந்திய அணி, கேப்டனை கலந்து பேசி அவரது விருப்பத்திற்கு ஏற்ப, தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. தேர்வாளர்கள் ஒவ்வொருவரும் தங்களின் பிராந்தியத்தைச் சார்ந்த (ZONES) வீரர்கள் இடம்பெற வேண்டும் என்பதில் குறியாக இருந்தார்களே தவிர, நல்ல தரம்வாய்ந்த அணியை எனக்கு அவர்கள் தரவில்லை. வலுவான பேட்டிங் வரிசை, நல்ல பந்துவீச்சு ஆகியவை உள்ள பாகிஸ்தான், இலங்கையைச் சந்திக்கப் போதுமானதாக, நமது அணி இல்லை என்பது

படித்ததில் பிடித்தது ■ ஆர்.பி. சாரதி

பாரதி நூற்றாண்டு விழாவின்போது கூட்டு முயற்சியில் வெளிவந்திருக்க வேண்டிய பாரதி வரலாறு, சீனி விசுவநாதனின் தளரா உழைப்பினால் இப்போது வெளிவந்துள்ளது. கவிஞரின் தம்பி சி. விசுவநாத ஐயரை ஞானாசிரியராக ஏற்று, அவரிடமும் சில அரிய ஆவணங்களைப் பெற்று முயற்சி தொடங்கப்பட்டுள்ளது. புதுடெல்லி நேரு நினைவு அருங்காட்சியகம், டெல்லி, சென்னை ஆவணக் காப்பகங்கள் பல தனியார் நூலகங்கள், பழைய சுதேசமித்திரன் இதழ்கள் நூலாசிரியருக்குத் தேவையான விவரங்களை அளித்துள்ளன.

இந்நூல் வெறும் வாழ்க்கை வரலாறாகச் சம்பவங்களை மட்டும் பின்னிப் புனையப் படவில்லை. இந்திய விடுதலை வரலாற்றுடன் ஆங்கில ஆட்சி அவலங்களை வெளிக் கொணரும் பல பத்திரிகைக் குறிப்புகளும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. இவை ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவர்களுக்கு போனஸ். சராசரி வாசகர்களுக்குச் சுமையாகவும் தெரியலாம்!

> **பாரதிக்கு, 'பாரதி' பட்டம் கொடுத்தது யார்? சுதேசமித்தரனில் வேலை வாங்கிக் கொடுத்தது யார்?**

சின்னசாமி ஐயர் தொடங்கிய எட்டயபுரம் காட்டன் ஜின் பாக்டரியின் பேலன்ஸ் ஷீட், சக்தி தாசரான பாரதியே வெறுக்குமளவுக்குக் காசியில் கண்ட ரத்தவெள்ள பேய்க்காளி வழிபாடு, சுதேசி இயக்க விடிவெள்ளி சுப்ரமண்ய ஐயரின் சுதேசிய நிதி அமைப்பு முயற்சி முதலியவை, பல பாரதி வரலாற்று நூல்களில் பார்க்க முடியாதவை. கோகலேயிடம் பாரதி கொண்டிருந்த மதிப்பு பின்னாளில் மாறிய காரணம்; தீவிரவாத எண்ணம் கொண்ட திலகரின் சீடர் பாரதி, காந்தியின் அஹிம்சையே விடுதலைப் போருக்கேற்ற அசைக்க முடியாத ஆயுதம் என்று நம்பிய உறுதி, கஷ்டத்திலிருந்த பாரதியும் திருநெல்வேலி கஷ்ட நிவர்த்தி நிதிக்கு பத்து ரூபாய் அளித்தது, அமெரிக்காவில், ஐரிஷ் நாட்டு ஸின் ஃபின்ஸ் (Sein Feins) என்ற சுதேசக் கட்சி நடத்திய ''காயலிக் அமெரிக்கன்'' என்ற பத்திரிகை, இந்திய விடுதலைப் போருக்கு அளித்த ஆதரவு போன்றவற்றை அறியும்போது வியக்கிறோம்.

பாரதி பற்றி வழங்கும், பல புகழ் அல்லது இகழ் கூட்டும்- மண்ணில் புரண்ட, கழுதையைக் கட்டி அணைத்து முத்தமிட்ட- நிகழ்ச்சிகள் நூலில் இடம் பெறாதது சிலருக்கு ஆறுதல், சிலருக்கு வருத்தம் தரக் கூடும்.

நேஷனல் புக் ட்ரஸ்ட் சார்பில் பிரேமா நந்தகுமார் எழுதி வெளிவந்துள்ள சுப்ரமண்ய பாரதி என்ற நூலில் பாரதி நெல்லையில் மெட்ரிகுலேஷன் தேர்வுக்கான செலக்ஷன் பரீட்சையில் தேறவில்லை என்றும், அதைச் சாக்கிட்டு கேலி செய்த ஒரு நண்பனை வாதுக்கழைத்து வென்றபோது முதியவர் ஒருவர் பாரதியைப் பாராட்டி பாரதி விருது வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. விசுவநாதன், சுப்பய்யாவுக்கு சிவஞான யோகியார்தான் பாரதிவிருது அளித்ததாகக் கூறுகிறார்.

பப்ளிகேஷன் டிவிஷன் சார்பில் எஸ். விஜய பாரதி எழுதி வெளியாகியுள்ள சி. சுப்ரமண்ய

என் கருத்து.

கல்கி : நீங்கள் விரும்பிய நபர்கள் யார் யார் இடம்பெறவில்லை?

சச்சின் : இனிமேல் சொல்லி என்ன பயன்? (விரக்தியாகச் சிரிக்கிறார்) இந்திய கிரிக்கெட் தேர்வுக் குழு கொடுத்த அணியை வைத்துக் கொண்டு எத்தனை தூரம் சிறப்பாகச் செய்ய முடியுமோ அதைச் செய்வேன். அணி மோசமாக விளையாடினால் என் பெயர்தானே கெட்டுப் போகும்? தேர்வாளர்களையா மக்கள் குறைகூறுவர்? கேப்டனின் தலைதான் உருளும்! உண்மையிலேயே இதைவிட நல்ல அணியை நிச்சயம் அவர்களால் தர முடியும். ஆனால் செய்ய மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி. எங்களை இங்கு (பெங்களூரில்) பெய்யும் மழைதான் அங்கு வந்தும் காப்பாற்ற வேண்டும்.

கல்கி : ஆக, தேர்வு முறையையே மாற்ற வேண்டும் என்கிறீர்களா?

சச்சின் : (உறுதியுடன் ஆவேசமாக) நிச்சயமாக! பிராந்தியவாரியாக தேர்வாளர்கள் தேர்ந்து எடுக்கப்படுவதால் ஒவ்வொருவரும் தங்கள் பிராந்தியத்தைச் சார்ந்த ஒருவர் அல்லது இருவரை இடம்பெற வைக்க முயலுகின்றனர். இதற்காக இருக்கும் ஐந்து பேரில் அவர்கள் மினி கூட்டணி அமைத்துக் கொண்டு தங்கள் ஆட்களை அணியில் திணிக்கிறார்கள். இதனால் திறமையானவர்களின் வாய்ப்பு தட்டிப் பறிக்கப்படுகிறது. இவர்கள் தந்துள்ள 14 பேரில் 3 பேர் ஆட்டம் சற்றுத் தரம்

பாரதி என்ற ஆங்கில நூலில் பாரதி சுதேசமித்திரனில் பணி யாற்றச் சென்றமை குறித்து, மூன்று வித கருத்துக்கள் உள்ளன. 1. ஜி. சுப்ரமண்ய ஐயரே மதுரைக்கு வந்த போது அழைத்தார், 2. பாரதி எழுதிக் கேட்டதால் லக்ஷ் மண ஐயர் என்ற தூரத்து உறவினர் உதவினார். 3. அய்யாசாமி ஐயர் வழி ராஜாராம ஐயர் உதவி னார்.

விசுவநாதனின் நூல் விவேக பானு கோபாலகிருஷ்ணர் தான் பாரதிக்கு சுதேசமித்திரனில் வேலை வாங்கிக் கொடுத்தார் என்று அடித்துச் சொல்கிறது!



கழுதையைக் கட்டிப் பிடித்தாரா பாரதியார்?

பாரதியின் 3 பாடல்களை முதலில் வெளியிட்டு 15,000 பிரதிகளை பள்ளிகட்கு இலவசமாக வழங்க ஏற் பாடு செய்த வி. கிருஷ்ணசாமி ஐயரிடம் பாரதியை ஜி.ஏ. நடேசன் என்பவர் அறிமுகம் செய்து வைத்ததாக பிரேமாநந்த குமார் எழுதுகிறார். விசுவ நாதன் நூலில் பாரதி, நடேசன் - கிருஷ்ணசாமி ஐயர் சந்திப்பு விவரம் இல்லை. பலரும் அறிந்த பாரதி - பாரதிதாசன் முதல் சந்திப்பும் ஆதாரத்துடன் எழுதப்பட வில்லை.

நூலில் புதியன பல இருக்கும் போது இல்லாத சில, ஒரு பொருட் டல்லதான். அவற்றுக்கான ஆதாரம் கிடைக்காமலும் இருந்திருக்கலாம். ரசமான கட்டுக் கதைகளை தவிர்ப் பது ஆசிரியரின் நோக்கமாயிருக்க லாம்.

எப்படியும் தீவிரமான பாரதி நூல் கள் வரிசையில் இந்நூலின் இடம் அழுத்தமாகப் பதியப் போவது உறுதி.

(மகாகவி பாரதி வரலாறு/ சீனி விசுவநாதன்/ 2. மாடல் ஹவுஸ் லேன், சி.ஐ.டி. நகர், சென்னை-35/ விலை ரூ.125/-)

குறைந்து இருந்தால் எங்களால் (கேப்டன் + மானேஜர்) என்ன செய்ய முடியும்? நல்ல அணி கிடைக்கும் பட்சத்திலேயே வெல்ல முடியும்! நமது நாட்டில் அப்படி யாரும் கிடைக்க மாட்டார்களா என்ன? இதைச் சொன்னதற்காக கேப்டன் பதவி போனாலும் போகும். போகட்டுமே!

கல்கி : இந்திய அணியின் பௌலிங் தரம் வலுவானதாக இல்லையே? ஒருவேளை ஸ்ரீநாத் இடம்பெற்றால் அணி வலுவாக இருக்குமா?

சச்சின் : அணியே சரியில்லை என்கிறேன். இதில் பேட்டிங் என்ன? பௌலிங் என்ன? ஆனால் ஸ்ரீநாத் இடம்பெற்றால் அணி இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கல்கி : ஸ்ரீநாத் அணியில் எப்போது இடம்பெறுவார்? பெங்களூர் கேம்பில் காணப்பட்டாரே?

சச்சின் : ஸ்ரீநாத் முழுமையாக இன்னும் குணமடையவில்லை. இப்போது விளையாடினால் இன்னும் கஷ்டமாகி விடும். அனேகமாக வர இருக்கின்ற ஆஸ்திரேலியத் தொடரின்போது ஸ்ரீநாத் பூரண குணமடைவார் என்று நினைக்கிறேன்.

பின் குறிப்பு : சச்சின், அஸாருக்கு பதிலாக வினோத் காம்ப்ளியையும், சபாகரீமுக்கு பதிலாக மோங்கியாவையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று போராடி, அது எடுபடாமல் போனது என்கிறது பெங்களூர் பத்திரிகை வட்டாரம்.



கவிஞருக்குக் கலைஞர் வக்காலத்து!

மேடையில் கலைஞர் மட்டும் சாதாரணமான ஒற்றை நாற்காலியில். போனால் போகிறதென்று கலைஞருக்குத் 'துணை'யாகக் குளிர் காற்று வீசும் கருவி. மேடையின் இடப்புறம் பொன்மணி வைரமுத்து நின்று கொண்டு கவிதை அறிமுகம். வலப்புறம் நின்று கொண்டு வைரமுத்து கம்பீரமான குரலில் கவிதை படித்தல். இவர்கள் ஒரு மணி நேரம் முழங்கி விட்டு 'நன்றி' என்று சொன்னபோது பார்வையாளர்களுக்குச் சின்ன அதிர்ச்சி! கலைஞர் பேச வாரா மாட்டாரா என்கிற தவிப்பு. சில விநாடிகள்தாம்!

ஐம்பது நிமிடம் கலைஞரின் நூல் மதிப்புரை. இடையே ஐம்பதுகளின் தொடக்கத்திலிருந்த கலைஞர் பாணியில், சற்று அருவருப்பான ஒரு புராணக்கதை. இதை மட்டும் ஒதுக்கி விட்டால் தரமான உரை!

திருடர்கள் வட்டாரத்துக் கதை என்று கலைஞர் ஒன்று சொன்னார்: திருடர்கள் முன் கூட்டியே அப்பாயிண்ட்மெண்ட் வாங்கி காந்திஜியையும், முகம்மதலி ஜின்னாவையும், அம்பேத்காரையும் சந்திக்க ஏற்பாடு. ஆனால், எப்படியோ தாமதமாகிவிட, பாபுஜியும், ஜின்னாவும் தூங்கப் போய் விட்டார்கள். அம்பேத்கார் மட்டும் விழித்துக் கொண்டிருந்தார். திருடர்கள் கேட்டார்கள். 'ஏன், தாங்கள் மட்டும் தூங்கப் போகவில்லை?' அம்பேத்கார் சொன்னாராம்: 'காந்திஜியின் மக்களும், ஜின்னாவின் மக்களும் விழிப்போடு இருக்கிறார்கள். அதனால் தலைவர்கள் தூங்கப் போய் விட்டார்கள். என்னுடைய மக்கள் உறக்கத்திலிருக்கிறார்கள். ஆகவே நான் விழித்திருக்கிறேன்."

ஒரு சின்ன ஐயம்! பாரதம் முழுமைக்குமாகத்தானே பாபுஜி பாடுபட்டார்?

ஒரு கவிதையில் தாரகைகள் ஒளிரும் மேகங்களில்லாத வானத்தைக் கேட்கும் கவிஞர், அடுத்த வரியிலேயே மழை பொழியவும் வேண்டுகிறார். இதை 'முரண்' என்று குறிப்பிட்டு, மழை பொழிந்து விட்டதால் வானம் தெளிவாகி நட்சத்திரங்கள் தெரியும் என்று விளக்கம் தந்து, 'இப்படி நான் தம்பி வைரமுத்துவுக்கு வக்காலத்து வாங்குகிறேன்' என்றபோது அரங்கமே கல...கல...!

கவிஞர் வைரமுத்துவின் 44வது பிறந்த நாளில் அவர் எழுதி, கலைஞர் வெளியிட்டு, கலகலப்பூட்டிய நூல், 'தமிழுக்கு நிறம் உண்டு'

ஆர்.வி. சொன்ன அறிவுரை

தமிழக சட்டசபைக்குப் பவள விழா. மேலவைக்கு வைரவிழா. விழாவில் பேசிய முதல்வர், தமிழகத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள், பெரிய பெரிய பதவிகளை அலங்கரித்தவர்கள் பற்றி வரிசையாகக் குறிப்பிட்டார். ஆனால் விழா மேடையிலேயே அமர்ந்திருந்த ஆர்.வி. பற்றிக் குறிப்பிடாமல் விட்டு விட்டார்! கலைஞருக்குக் கூட ஞாபக மறதி இருக்குமா என்ன!

● விழாவில் பொன்னாடையை மறுத்து விட்ட சி.எஸ்., "பொன்னாடைகளுக்குப் பதிலாக ஏதாவது புத்தகங்கள் கொடுங்கள்; பயனுள்ளதாக இருக்கும்!" என்றார்.

● "அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்கும் மனோநிலையும் சகிப்புத் தன்மையும் இல்லா விட்டால் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியாது; தேசிய விஷயங்களில் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தமிழகத்தில் மீண்டும் வரப்போகிற மேலவையில் தகுதி வாய்ந்தவர்களே நியமிக்கப்பட வேண்டும்..." என்று ஆர்.வி. பேச ஆரம்பித்ததுதான் தாமதம், அவரது அறிவுரைகளைக் கேட்கிற மனோநிலையில் தாங்கள் இல்லை என்பதைக் கூட்டத்தினர் கைதட்டல்கள் மூலம் தெரிவித்தனர். அப்படியானால் ஆர்.வி. சொன்னது போன்ற அறிவுரைகள்படி கூட்டத்தினர் (கூட்டத்தினர் என்பது அமைச்சர்கள், எம்.எல். ஏக்கள் போன்ற மக்கள் பிரதிநிதிகள்தாம்!) நடக்க மாட்டார்கள் என்று அர்த்தமா என்ன!



• பவள விழா மேடையில்

சாமியார்களுக்கு யூனியன் வேண்டுமா?

சென்னை வீனஸ் காலனி ஆஸ்திக சமாஜம் அருகே ஏராள கார்களும் இரு சக்கர வாகனங்களும் நின்றிருந்தன. அரங்கம், ஐந்தரை மணிக்கே ஹவுஸ்ஃபுல்.

'ஜெக்கிவாசுதேவ் பேசுகிறார்' என்ற அறிவிப்புதான் ஹவுஸ்ஃபுல்லுக்குக் காரணம்.

கர்நாடகத்தைச் சேர்ந்த பி.ஏ. இலக்கியப் பட்டதாரி. சொந்தமாக கோழிப் பண்ணை நடத்தியிருக்கிறார். பின்னர் சிவில் என்ஜினியரிங் சம்பந்தப்பட்ட தொழில். திடீரென்று ஒரு சமயம், மனிதன் தன்னைத்தானே உணர்ந்து கொள்ள எப்படி உதவுவது என்பது பற்றி யோசிக்க ஆரம்பித்து, யோகாவைத் தேர்ந்தெடுத்தார். யோகா மூலம் பலவித பயிற்சிகளை ஜெக்கியால் ஒழுங்குபடுத்த முடிந்தது. விளைவாக இன்று இவர் நடத்தும் யோகா முகாம்களுக்குக் கூட்டம் அலைமோதுகிறது.

சென்னைக்கு வரும் சமயங்களில், பதின்மூன்று நாள் பயிற்சி தருகிறார். கோவைதான் தலைமையகம். 'ஈஷா' என்று இவரது அமைப்புக்குப் பெயர்.

ஜெக்கி வாசுதேவிடம் அனாவசியமான சித்து வேலைகள் இல்லை. நாவில் ஆங்கிலம் அற்புதமாக விளையாடுகிறது.

"உன்னை நீயே அறிந்து கொள்" – இதுதான் ஜெக்கியின் அடிப்படை உபதேசம்.



• ஜக்கி வாசுதேவ் (படம் : ஸ்ரீஹரி)

இதைத்தான் பல பேர் சொல்லியிருக்கிறார்களே என்றால் இது இன்னொரு முயற்சி.

மனதைப் பற்றியும், நிலையில்லாத வாழ்வு பற்றியும் குறிப்பிடும் போது வித்தியாசமான உதாரணங்களைக் காட்டுகிறார். "அக்கம் பக்கத்து வீட்டு அக்கப் போர்களை அறிந்து கொள்ள அக்கறை காட்டுகிறோமே, நம்மைப் பற்றி நாமே அறிந்து கொள்ள அக்கறை காட்டுகிறோமா?" என்று கேட்கிறார்.

"இதோ இந்த ஸ்டுபிட் ஃபோனுக்குக் கூட ஏழு வருஷத்துக்கு கியாரண்டி கார்டு தருகிறார்கள். ஆனால் நமக்கு ஏழு நாள் கியா



"உங்க அம்மாவுக்கும், உன் பொண்டாட்டிக்கும் சண்டை நடக்கும்போது நீ எந்தப் பக்கம் இருப்ப?"

"பரணுக்கு மேல ஒளிஞ்சிட்டு இருப்பேன்."

— ஜோஸஃபி ரஞ்சன்

ரண்டி கூட இல்லையே..." என்கிறார்.

அதென்னமோ இவரின் யோகப் பயிற்சி வகுப்புகளில் பங்கேற்ற பிரபலங்களில் பெரும்பாலோர் தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களாகவே இருக்கிறார்கள்!

சுபா, அனுராதா ரமணன், உஷா சுப்ரமணியம், ஜ.ஃவி. திருபர் வேல்பாண்டியன் என்று கூட்டத்தில் ஏராள எழுத்தாளர்கள்!

கூட்ட முடிவில் கேள்விகள் கேட்டார்கள். ஒருவர் எழுந்து 'ஐயா, உன்னை நீ அறிந்து கொள் என்றுதான் எல்லோரும் சொல்கிறீர்கள். பின் அதற்கு ஏன் இத்தனை பேர்? எந்த ஸ்வாமிஜியைப் பின்பற்றுவது என்று எங்களுக்கு குழப்பமாக இருக்கிறதே. ஏன் நீங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து இதே கருத்தை வலியுறுத்தக் கூடாது?" என்று கேட்டார்.

பட்டென்று ஜெக்கியின் பதில் : 'யூனியன் ஆரம்பிக்கலாம் என்கிறீர்களா? இக் கூட்டம் முடிந்தவுடன் நீங்கள் எல்லோரும் வீட்டுக்குப் போகிறீர்கள். எல்லோரும் போகும் இடம் என்னவோ வீடுதான். ஒருத்தர் ஆட்டோவில் போவார். இன்னொருத்தர் சைக்கிள். மற்றொருவர் கார். இன்னும் சிலர் பஸ். நாங்களும் அதே போல்தான். பல வாகனங்கள். உங்களுக்கு எது வசதியோ அதில் போங்களேன். பத்திரமாக வீடு போய்ச் சேர்ந்தால் சரி. இல்லையா?"

'தலை'யாய பிரச்னை!

"கட்டிலிலிருந்து தவறான கோணத்தில் கீழே விழுந்து தலையில் அடிபட்டுக் கொண்டு அடுத்த நாளே இறந்தவர்களும் உண்டு. பத்தாவது மாடியிலிருந்து கீழே விழுந்தும், அடுத்த இரண்டாவது நாளே நார்மலான வாழ்க்கைக்குத் திரும்பியவர்களும் உண்டு." – தலை காயங்களை இனம் பிரித்து, சிகிச்சை அளிப்பதில்



உள்ள சிக்கல்களை விளக்கும் போது நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். கல்யாணராமன் கூறியது இது. இடம் – கடந்த ஆறு மாதங்களாக 320, அண்ணா சாலையில் இயங்கிவரும் அப்போலோ நியூரோ மருத்துவமனை. தலை காயங்கள் பற்றி சமீபத்தில் இங்கே ஒரு கருத்தரங்கம் நடத்தினார்கள்.

"தலையில் அடி என்றாலே சி.டி. ஸ்கான் போன்ற காஸ்ட்லி பரிசோதனைகளுக்கு உட்படுத்துகிறார்கள் இந்த மருத்துவர்கள்" என்ற பரவலான குற்றச்சாட்டையும் டாக்டர் மறுத்தார்.

"நாங்கள் ஒன்றும் தேவையில்லாமல் இதைச் செய்யச் சொல்வதில்லை. நாங்களாக ஒன்றை அனுமானித்துக் கொண்டு, அதற்கு சிகிச்சை அளித்து பலனில்லாமல் போவதை விட, மூளைப் பகுதியில் எந்த இடம், எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஸ்கான் மூலம் தெளிவாகவே அறிந்து கொண்டு சிகிச்சை அளிப்பதில், நேரம், உழைப்பு, ஏன், பணம் கூட மிச்சமாகிறது என்றுதான் சொல்வேன்" என்றார்.

தினமொன்றுக்கு சுமார் இரண்டு – மூன்று மேஜர் மூளை ஆபரேஷன்களை இங்குள்ள மருத்துவர் குழு செய்ய நேர்கிறது. முக்கியக் காரணம் சாலை விபத்துகள். அதிலும் மாலை மற்றும் முன்னிரவு நேரத்தில்தான் அதிக விபத்துகள். இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள்தான் விபத்தில் அதிகமாக சிக்கிக் கொள்கிறார்களாம். 'கோல்டன் அவர்ஸ்' எனப்படும், விபத்து நேர்ந்த ஒரு மணி நேரத்துக்குள், பாதிக்கப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்து வந்து விட்டால், அவர் உயிர் பிழைக்க தொண்ணூறு சதவீதம் வாய்ப்பு இருக்கிறது. இதை மனத்தில் கொண்டு விரைவில் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தப் போகிறார்களாம் அப்போலோ மருத்துவமனையில்.

நகர எல்லைப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலைகளின் ஓரத்தில் ஆங்காங்கே சில தொடர்பு மையங்களை நிறுவப் போகிறார்கள். ஆக்ஸிஜன், சலைன் வாட்டர், ஆம்புலன்ஸ் போன்றவை இங்கிருக்குமாம். அடிபட்டவர்களை இங்கே அழைத்து வந்தால் முதலுதவியோடு, மைய மருத்துவமனைக்கு தகவல் அனுப்பி தயார் நிலையில் இருக்கச் சொல்லி விட்டு, ஆம்புலன்ஸில் ஏற்றி அங்கு அனுப்பி விடுவார்களாம்.

தலை காயம் என்றால் மூளைப் பகுதி மட்டுமல்லாமல் முகத்தின் மற்றப் பகுதிகளும் பாதிக்கப்பட்டிருக்கலாம். எனவே நியூரோ சர்ஜனோடு, ஈஎன்டி போன்ற மற்ற துறை ஸ்பெஷலிஸ்டுகளும் கூட இணைந்து அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வருமாம்.



• காஞ்சி முனிவர்



• மது தண்டவதே



• மன்மோகன்சிங்



• EMS நம்பூதிரி பாட்



• விஜயன்



• வை. பாலசுந்தரம்



• சி.எஸ்.



• சுந்தர்ஜி



• பிரணாய் ராய்



• இரா. செழியன்



• டாக்டர் ருத்ரன்

– இத்தனை பேர் சிந்தனையும் இடம் பெறும் கருவூலம்...

கல்கி சுதந்தரப் பொன்விழா மலர்

கதைகள், பாடல்கள், வண்ணப்படங்கள், ஓவியங்களும் உண்டு...
வாசகர்களே, வாங்கத் தவறினால் வருத்தப்படுவீர்கள்!

இன்றே கல்கி விற்பனையாளரிடம் சொல்லி வையுங்கள். வாராந்திர கல்கி அளவில் 320 பக்கங்கள். விலை ரூ. 30. பதிவுத் தபாலில் பெற ரூ. 13 சேர்த்து அனுப்ப வேண்டும். கடைசி தேதி : ஆகஸ்ட் 11.

நிர்வாகி, கல்கி, சென்னை - 600 097

எஸ்.ஐ.ஆர்.

மரத்தின் வளர்ச்சி மண்தொட்டியிலா அடங்குவது?



நமக்குள்ளே இருக்கிற சக்தியை நாம் உணர்ந்து கொண்டு விட்டால், நமக்கு வெளியே நம்மைச் சுற்றியிருக்கிற பிரச்னைகளெல்லாம் மிக மிக அற்பமானவையாகிவிடும்!

— எமர்சன்

மிகப் பிரபலமான விளம்பர நிறுவனமொன்றில் சங்கருக்கு வேலை. நல்ல சம்பளம். நம்மிடம் இருக்கிற திறமைக்கு நாமே ஏன் சொந்தமாக ஒரு தொழில் துவங்கக்கூடாது? திடீரென்று சங்கருக்கு இப்படியோர் எண்ணம் வந்ததுதான் தாமதம். உடனடியாக வேலையை விட்டுவிட்டான்!

வேலையை விட்டாகி விட்டது; அடுத்து என்ன செய்வது? பத்திரிகையொன்றைப் புரட்டிக் கொண்டே வந்தபோது அதில் ஒரு கட்டுரை. வேலை காரணமாக, வீட்டை விட்டு வெகு தூரம் வருபவர்கள் சரியான மதிய உணவு இல்லாமல்தான் இருக்கிறார்கள். வீட்டிலிருந்து அதிகாலையில் புறப்பட்டு வருபவர்களோ காலை உணவையும் சரியாகச் சாப்பிட முடிவதில்லை; மதிய உணவாக வீட்டிலிருந்து கையோடு கொண்டு வருவதும் முழுமையான சத்துணவாக இருப்பதில்லை...

திடீரென்று சங்கருக்குள் ஒரு யோசனை. வீட்டிலிருந்து வெகு தொலைவு வெளியே வந்து வேலை செய்பவர்கள் திருப்திப்படும் படியாக 'திருப்தியான மதிய உணவு' சப்ளை செய்தால் என்ன?

உடனடியாகச் செயலில் இறங்கினான். கையில் சிறிதளவுதான் பணம் இருந்தது. இருந்தாலும் கவலைப்படவில்லை. தான் தயாரிக்கப்போகும் 'திருப்தியான மதிய உணவு' பற்றிய விசேஷ அம்சங்களையெல்லாம் நோட்டீஸ்களாக அச்சிட்டு அலுவலகங்கள் மற்றும் தொழிலகங்களுக்கு முன்னால் நின்று கொண்டு போவோர் வருவோரிடமெல்லாம் விநியோகம் செய்தான்.

அதை வாங்கியவர்களெல்லாம் ஒருவித அலட்சிய பாவத்துடன்தான் வாங்கிச் சென்றனர். ஆனாலும் சங்கர் தளர்ந்து போய் விடவில்லை. அச்சடித்த நோட்டீஸ் களெல்லாம் தீர்ந்துபோகும் வரை விடாமல் விநியோகம் செய்தான்.

ஆயிற்று, ஒருவாரத்துக்கு மேலாயிற்று. பத்தாயிரம் நோட்டீஸ்கள் விநியோகிக்கப் பட்டதில் ஒருவர் கூட இவனது 'மதிய உணவு' கேட்டுத் தொடர்பு கொள்ளவில்லை.

இந்த நிலையில்தான் திடீரென்று ஒரு போன். பிரபலமான வாரப் பத்திரிகை யொன்றின் நிருபர் பேசினார். இவரது 'திருப்திகரமான மதிய உணவு' பற்றி பேட்டிகாண விரும்புவதாகக் கூறினார்.

பேட்டி வெளியான தினமே, இவனுக்கு ஏகப்பட்ட போன்கால்கள். நிறைய மதிய உணவுக்கான ஆர்டர்கள். அப்புறம் என்ன! 'சங்கர் வழங்கும் மதிய உணவு' பலருடைய வாழ்விலும் தவிர்க்க முடியாததாகி



விட்டது.

"ஒரு சிறு தொட்டியில் கட்டுண்டு கிடக்கிற 'போன்சாய்' மரத்தைப் போல்தான் நம்மில் பலரும் சுருண்டு கிடக்கிறோம். ஒரு மரத்தின் வளர்ச்சி ஒரு மண் தொட்டிக்குள்ளா அடங்குவது? நிச்சயமாக இல்லை. உங்களுக்குள் இருக்கும் சக்தியும் திறமையும் அளப்பரியவை; கணக்கில் அடங்காதவை. இதை உணர்ந்து கொள்ளுங்கள். எந்தவொரு செயலைச் செய்தாலும் திறமையோடு கொஞ்சம் தைரியத்தையும் கலந்து பாருங்கள்... வெற்றி நிச்சயம்!"

— இன்று சங்கரின் பேட்டிகள் பத்திரிகைகளில் மட்டும்தான் வெளியாகின்றன என்பதில்லை; சாடிலைட் டெலிவிஷன்களிலும்தான்!



■ ப்ரியன், ஜெகதீஸ்

விரக்தியில் சேர்ந்த கூட்டு?

"நாவலர் தலைமையில்தான் என் திருமணம் நடந்தது. அதனால்தான் மரியாதை நிமித்தம் அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூற வந்தேன்!" என்று ஒரு போடு போட்டார் வை.கோ.

'வந்தது ஜெயலலிதாவைச் சந்திக்கத்தான்; அதை வெளிப் படையாகச் சொல்வதற்கு அப்படியென்ன கூச்சம்!' என்று பத்திரிகையாளர் களெல்லாம் தங்களுக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டார்கள்.

வை.கோவைப் போல ஜெ. எதையும் மூடிமறைத்துப் பேசவில்லை. "நாங்கள் இருவரும் விரைவில் ஒரே மேடையில் பேசுவோம்!" என்று வெளிப்படையாகப் பேசினார்.

ஜெ. அத்தனை வெளிப்படையாகப் பேசிவிட்டதாலோ என்னவோ, அடுத்த நாள் சென்னையில் நடந்த ஊழியர் கூட்டமொன்றில் பேசிய வை.கோ "குற்றம் நிரூபிக்கப்படாமலேயே ஜெயலலிதாவைச் சிறையில் அடைக்க வேண்டிய அவசியம் என்ன? அது என்ன நியாயம்?" என்றார்.

'ஜெ. கைது செய்யப்பட்டபோது, அதை சந்தோஷமாக வரவேற்றதையும் கடந்த தேர்தலில் ம.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் உடனடியாக ஜெ. – சசி உறவினர்களின் சொத்துக்களை அரசு பறிமுதல் செய்யும்' என்று பேசியதையும் எப்படி நம்மையெல்லாம் வை.கோ. மறக்கச் சொல்கிறார்?' என்று ம.தி.மு.க. தொண்டர்கள் முணகிக் கொண்டார்கள்.


ஆனாலும் வை.கோ. அது பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. அடுத்த நாளான 14-ம் தேதி வை.கோ. என்னும் 'இளம்புயல்' லாயிட்ஸ் சாலையிலுள்ள அ.தி.மு.க. தலைமையகத்துக்குச் சென்று தஞ்சம் புகுந்தது.

அ.தி.மு.க. தலைமையகத்தின் மாடி ஹாலிலிருந்த ஜெ.வை, சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு வந்த வை.கோ., "பல்வேறு பிரச்னைகள் குறித்தும் விவாதித்தோம்; பேச்சு வார்த்தை மனதுக்கு நிறைவு தந்தது!" என்றார்.

'இத்தனை காலம் விமர்சனம் செய்துவிட்டு இப்போது கூட்டா?' என்கிற எண்ணம் மக்களுக்கு எழுந்ததே தவிர, ம.தி.மு.க.வினருக்கு எழுந்ததாகத் தெரியவில்லை. மூனு ஆதி மட்டும்தான் அதை எதிர்த்து அறிக்கை விட்டார். மற்றவர்கள் யாரும் மூச்சுக்கூட விடவில்லை. காரணம் என்ன?

"கைசுத்தமானவர்; வயதில் சிறியவர். நல்ல உணர்ச்சிபூர்வமான பேச்சாளர். இப்படிப் பல சிறப்புகள் எங்கள் தலைவருக்கு இருந்தாலும் மக்கள் ஏன் எங்களை ஜெயிக்க வைக்கவில்லை? அவர்கள் கவர்ச்சியையும், பொய்யான கோஷங்களையும், வேஷங்களையும்

நம்புகிறார்கள் என்பது புரிகிறது. எனவே எங்கள் சக்தியை வீணாக்கிக் கொண்டு இருந்தால், காலப்போக்கில் நாங்கள் நீர்த்துப் போய் காணாமலே போய் விடுவோம். இந்தக் கூட்டின் பயனாக எம்.எல்.ஏ., எம்.பி. என்று கட்சியினர் பதவி பெற்றால் அது ஒரு நீண்ட போராட்டத்துக்கான தெம்பைக் கொடுக்கும். ஆகவே எங்களது நீண்ட லட்சியப் பயணத்தில் ஒரு சுமைதாங்கியாகவே அ.தி.மு.க.வினர் கூட்டை நினைக்கிறோம். சுமைதாங்கி



• 'அம்மா'வின் கோட்டைக்கு வருகிறார் வை.கோ.

அங்கேயேதான் இருக்கும்; எங்கள் பயணம் தொடரும்" என்றார் ம.தி.மு.க.வின் இடைநிலைத் தலைவர் ஒருவர்.

"இப்போதிருக்கும் இளைஞர்களுக்கு கொஞ்சம் கூடப் பொறுமை கிடையாது. 1949-ல் கட்சியைத் துவக்கிய அண்ணா, 1967-ல்தான் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது. எம்.ஜி.ஆருக்கும் ஆட்சியைப் பிடிக்க ஐந்து வருடம் தேவைப்பட்டது. எங்கள் பொதுச் செயலாளர், அதைவிட சீக்கிரம் பதவியைப் பிடிக்கப் பார்க்கிறார். காரணம், கட்சியின் முதுகெலும்பாக இருக்கும் இளைஞர்கள் களைத்துப் போயிருக்கிறார்கள். அவர்கள் சோர்ந்து போய் வேறு கட்சிகளுக்குச் செல்வதற்கு முன்னர், அவர்களை இங்கேயே தக்கவைக்க எடுத்திருக்கும் முயற்சிகளில் ஒன்றுதான் இந்தக் கூட்டு. ஜெ.வை திராவிட இயக்க லட்சியங்களுக்காகப் பாடுபடுபவர் என்று சொல்ல முடியாது. ஆனால் இவ்வளவு ஊழல்கள் செய்தவர் என்று பட்டவர்த்தனமாகத் தெரிந்தும், மக்கள் ஆதரவு அவருக்கு இருப்பது தெரிகிறதே; இதற்கென்ன சொல்கிறீர்கள்? தவிர, கட்சியில் நூற்றுக்கு நூறு, இந்த உறவுக்குப் பச்சைக் கொடி காட்டியிருக்கிறோம் என்று சொல்ல முடியாது. அதிருப்தியாளர்களும் இருக்கிறார்கள். ஆனால் மெஜாரிட்டியினர் ஆதரிக்கிறார்களே" என்றார் மற்றொரு ம.தி.மு.க. தலைவர்.

அதிருப்தியாளர்களில் பல மூத்த தலைவர்களும் உண்டாம். தேர்தல் சமயத்தில் கட்சியை விட்டு வெளியே வந்து 'அதிர்ச்சி' கொடுப்பார்களாம் அவர்கள். வை.கோ. கூட்டும் ஊழியர் கூட்டங்களில் சில இளைஞர்கள் உணர்ச்சி பூர்வமாக, அ.தி.மு.க.வுடன் உறவு வேண்டாம் என்று சொல்கிறார்களாம்.

இந்தக் கூட்டணியால், அ.தி.மு.க.வினர் சந்தோஷப்படக் காரணம், போட்டி அ.தி.மு.க.வினர் பிரிந்து சென்றாலும், ம.தி.மு.க. கூட்டு மூலம் அதைச் சரிசெய்து விடலாம் என்பதுதான். "தேர்தலின்போது மிகவும் அற்புதமாகச் செயல்படக்கூடிய இளைஞர்கள் ம.தி.மு.க.வில் உண்டு. அது மிகப் பெரிய பிளஸ் பாயிண்ட் என்றார், 'அம்மா' கட்சிப் பிரமுகர் ஒருவர். புதுக்கோட்டை இடைத் தேர்தலில், தி.மு.க.வின் அராஜகங்களை எதிர்த்து இரு கட்சியினரும் இணைந்து பணியாற்றியதுதான் கூட்டணியின் துவக்கமாம்.

படம் : சௌந்தர்ராஜன்

உள்முகம்

"ஏல அளிசொடே... எந்திரில..."

அம்மாவின் குரல் கேட்டு, புரண்டு படுத்தான் அழிசோடை. எழுந்து கொள்ள முடியாமல் தூக்கம் அவனை அழுத்தியது.

"எலே தம்பி... எந்திரிச்சி ஓடைக்கி போய்ட்டு வாலே..." அம்மாவின் குரல் மறுபடியும் கேட்டது.

இனிமேல் தப்ப முடியாது. எழுந்து கொள்ளும் வரை குரல் வந்து கொண்டேயிருக்கும்.

ஏனென்றே தெரியவில்லை. காலை நேரத்தில் அப்படி ஒரு தூக்கம் வந்தது அழிசோடைக்கு. அய்யா எப்படித்தான் அஞ்சு மணிக்கே எழுந்து கம்மங்கஞ்சி குடித்து விட்டு ஆறு மணிக்கெல்லாம் மில்லுக்குப் போகிறாரோ...! அழிசோடைக்கு ஆச்சரியமாக இருந்தது.

எழுந்து உட்கார்ந்து பாயைச் சுருட்டிக் கொண்டிருக்கும்போதே கண்கள் செருக உறங்கி விழுந்த அவன் முதுகில் அம்மா ஒன்று வைத்த பிறகுதான் உறக்கம் லேசாகக் கலைந்தது.

எழுந்து ஓடைப் பக்கம் போனான் அழிசோடை. அரைத் தூக்கத்திலேயே குடை போல் விரிந்த ஒட்டடை மரம் தந்த மறைவில் உட்கார்ந்திருந்து விட்டு ஓடையில் காலைக் கழுவிக் கொண்டு, வீட்டுக்குத் திரும்ப நடந்தான்.

அழிசோடைக்கு ஒவ்வொரு நாளும் இப்படித்தான் புலர்வது வழக்கம்.

இந்நேரம் பெருமாள்சாமி என்ன செய்து கொண்டிருப்பான்? எழுந்து பல் விளக்கி குளித்து நெற்றியில் திருநீறு இட்டுக் கொண்டு அமைதியாக பாடங்களைப் படித்துக் கொண்டிருப்பான். ஆனால் தெருவெங்கும் ஒவ்வொரு வீட்டிலும் கேட்கும் 'தடக் தடக்' என்ற கைத்தறி சத்தத்தை சகித்துக் கொண்டு அவனால் எப்படிப் படிக்க முடி கிறது?

அழிசோடையும் பெருமாள்சாமியைப் போல் படிக்கத்தான் ஆசைப்பட்டான். ஆனால் காலை நேர அலுப்பு எல்லா ஆசைகளையும் ஓரம் கட்டி வைப்பதாயிருந்தது.

பெருமாள்சாமி அழிசோடையின் நண்பன். ரெண்டு பேரும் ஒரே கிளாஸ். ஒரே ஸ்கூல். நடராஜர் நாட்டுத் தொடக்கப் பள்ளி.

அழிசோடை இந்தப் பள்ளியில் சேர்ந்து ஒரு ஆறேழு மாதம் ஆகிறது. அதற்கு முன்னால் அஞ்சாம் வகுப்பு வரை படித்தது காந்திபுரம் ஹரிஜனப் பள்ளியில். அது அவனுடைய தெருவிலேயே இருக்கும் பள்ளி. அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து அழிசோடையும் அவனை ஒத்த ஐம்பது மாணவர்களும் விலக்கப் பட்டார்கள். காரணம் – ஒரு தேர்தல்.

காந்திபுரம் சமுதாய நாட்டாமைத் தேர்தல்.

அஞ்சு வருசத்துக்கு ஒருமுறை தேர்தல் நடத்தி நாட்டாமையைத் தேர்ந்தெடுப்பார்கள். நாட்டாமைதான் பள்ளிக்கூடத்தின் நிர்வாகியும். அதுதான் வழமை.

கடந்த அஞ்சு வருசமாக அவன் அய்யா தான் சமுதாய நாட்டாமை. ஆனால் சென்ற வருடத் தேர்தலில் அய்யா தோற்றுப் போய் விட்டார். ஜெயித்தவர் கணக்கன் அய்யனார். அய்யனார் செங்கொடிக் கட்சிக்காரர். அய்யா காங்கிரஸ் கட்சி.

ரெண்டு பேருமே ஒரே சாதிதான் என்றாலும் கட்சி வேறு வேறு ஆயிற்றே! அதுதான் பிரச்னை.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஆட்களின் பிள்ளைகள் அம்பது பேருக்கு சீட்டு கிழிக்கப் பட்டது. அதனால்தான் அவர்கள் வெளியே வந்து வேறு தொடக்கப் பள்ளியில் சேர்த்தார்கள்.

பெரிசுகள் போட்டுக் கொள்ளும் சண்டைக்காக நாம் ஏன் வேறொரு பள்ளிக் கூடத்துக்குப் போக வேண்டும் என்று அழிசோடைக்குப் புரியவில்லை.

எதையெதையோ யோசித்துக் கொண்டே கூழைக் குடித்தான் அழி

சாருநிவேதிதா

சோடை. தொட்டுக் கொள்ள மீந்து போன நேற்றைய பன்றிக் கறியை வைத்தாள் அம்மா. அதை ஒதுக்கி வைத்து விட்டான். அழிசோடைக்கு பன்றிக் கறியில் அவ்வளவு விருப்பம் இல்லை. அதிலும் நேற்று சமைத்த கறி என்றால் தொடவே மாட்டான்.

ஈராங்காயைக் கடித்துக் கொண்டு கூழைக் குடித்தான் அழிசோடை.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் தெருவில் பன்றி அடித்தார்கள். வாரம் ஒரு தடவை இது இங்கே வழக்கம். வெளித் தெரு ஆட்கள் சில பேர் கூட ரகசியமாக வந்து வாங்கிப் போவார்கள்.

நேற்று பெருமாள்சாமியின் அய்யா கூட காத்திபுரத்துக்கு வந்திருந்தார், கையில் மஞ்சள் பையுடன். அழிசோடை அவரை இங்கே அடிக்கடி பார்த்திருக்கிறான்.

அவர் எதற்காக இங்கே வருகிறார்? நிச்சயமாக கறி எடுப்பதற்காக இருக்க முடியாது.

இந்தப் பன்றிக்கறியை வைத்து பெருமாள்சாமி தன்னை எத்தனை நாள் அவமானப்படுத்தியிருக்கிறான்?

"அனிசொடெ... தள்ளி நில்லுவே.. ஓம் ஒடம்புலேர்ந்து கொச்ச வாட அடிக்கி... நீ பன்னிக்கறி சாப்டிருக்கே."

"அனிசொடெ... தள்ளி நில்லுலே...



ஓம் வாயி நாறுதுலே"

தினமும் பல் விளக்க வேண்டும், தினமும் குளிக்க வேண்டும் என்று தான் தினமும் நினைத்துக் கொள்வான் அழிசோடை. ஆனால் காலையில் எழுந்தால் எல்லாம் மறந்து போகும்.

அதோடு, அவனை யாரும் பல் விளக்கச் சொல்லி சொல்லுவதும் இல்லை. வீட்டிலும் அய்யாவைத் தவிர வேறு யாரும் பல் விளக்கு வதில்லை. எல்லாம் வாரம் ஒரு தடவை குளிக்கும்போது செய்வதோடு சரி.

தினமும் பல் விளக்கினாலாவது வாய் நாற்றத்தைப் போக்கி விடலாம். ஆனால் உடல் நாற்றத்தை? நம் ஒருத்தனுக்காக பெரிசுகள் பன்றிக் கறி சாப்பிடுவதை நிறுத்திவிடுமா?

ஜாமட்ரி பாக்சில் வைத்திருக்கும் காம்பசை எடுத்து அப்படியே பெருமான்சாமியைக் குத்த வேண்டும் போல் கோபம் கோபமாக வரும். ஆனாலும் கோபத்தை அடக்கிக் கொள்வான் அழிசோடை.

பன்றிக் கறி சாப்பிட்டால் உடம்பு நாறுமா என்பதும் அழிசோடைக்குப் புதிராகவும் சந்தேகமாகவும் இருந்தது. யாரும் இல்லாத சமயங்களில் ஒரு கையின் மேற்புறத்தை மற்றொரு கையால் சூடு பறக்கத் தேய்த்து முகர்ந்து பார்ப்பான். மலநாற்றம் வீசும்.

ஆனால் சில மேல்ஜாதிப் பையன்களோடு விளையாட்டாக இதை அவர்களையும் செய்யச் சொல்லி தங்கள் கையைத் தேய்த்து முகர்ந்து பார்த்து அவர்களும் முகம் சுளித்த போது அழிசோடைக்கு சந்தேகம் தட்டியது.

தன்னை அவமானப்படுத்துவதற்கென்றே பெருமான்சாமி பொய் சொல்கிறானோ?

ஆனால் பெருமான்சாமியின் நட்பை எதற்காகவும் விட முடியாது. பெருமான்சாமி நன்றாகப் படிப்பான். அவன் கையெழுத்தும் முத்து முத்தாக இருக்கும். அழிசோடைக்குத் தேவைப்படுகிற சமயங்களில் அவனுடைய நோட்டுப் புத்தகங்களை வாங்கித்தான் தன்னுடைய நோட்டில் எழுதிக் கொள்வான்.

இது தவிர, அழிசோடை சொல்லுகிற நூற்றுக்கணக்கான கதைகளை ஆர்வத்துடன் கேட்பதற்கும் ஒரு ஆள் அவனுக்கு வேண்டும். பெருமான்சாமியின் வீட்டைத் தாண்டித்தான் பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டும் என்பதால் தினமும் அவன் வீட்டில் போய் அவனையும் அழைத்துக் கொண்டு விதவிதமான கதைகளைச் சொல்லிக் கொண்டு போவது வழக்கமாகி விட்டது.

காந்திபுரம் சஞ்சீவி மலையின் அடிவாரத்தில் இருக்கிறது. அனுமார் லங்கையைத் தூக்கிக் கொண்டு வந்தபோது அதிலிருந்து விழுந்த ஒரு சின்ன பகுதிதான் சஞ்சீவி மலை என்பது அழிசோடை சொன்ன பிறகுதான் பெருமாள்சாமிக்குத் தெரியவந்தது. மலையில் அனுமார் உட்கார்ந்ததால் ஏற்பட்ட வால் தடம் இப்போதும் கூட இருப்பதாகச் சொல்வான் அழிசோடை.

ஒருநாள் அழைத்துக் கொண்டு போய் காண்பிப்பதாகவும் பெருமான்சாமியிடம் சொல்லியிருக்கிறான்.




''எத்தனை நாள் இப்படியே இங்கேயே இருக்கிறது? பாரு... நிலவரி கட்டணுமாம். நோட்டீஸ் வந்திருக்குது!''

– வலங்கைமான் நூர்தீன்

"மலையிலேர்ந்து நரி வரும்... நடுச்சாமத்துலெ எங்க வூட்டுப் பக்கம் மேஞ்சுகிட்டு அலையும். அத்தோட மளெ காலத்துலெ கூகெ, ஆந்தெயிலாம் கூட வரும். சமயத்திலெ நானும் பாத்திருக்கேன். அதுக்கு பகல்லெ கண்ணே தெரியாதாம். ஆத்தா சொல்லியிருக்கு. ஒரு நாராவுல நானும் பாத்தேன். ஒவ்வொரு கண்ணும் முட்டெ மாரி இருந்திச்சி. அதுக்கு உள்ளார கோலிகுண்டு மாரி கொட கொடன்னு உருண்டுகிட்டு இருந்திச்சி முளி. அது மட்டுமில்ல... அது கத்தும்போது எப்புடி இருக்கும் தெரியுமா? எந்தங்கச்சி பொறந்து கொளந்தையா இருக்கறப்போ அளுவான, அதே மாரி இருந்திச்சி... மளெ காலத்துலெ பாம்பு வந்தா... அதுவும் ஒடையம் பாம்பு வந்தா லேசா சரடு மாரி ஊறிக்கிட்டே கூரெ எறவானத்து வளியா வூட்டுக்குள்ள கூட வந்திரும்... அந்நேரம் அடிக்க பயந்துகிட்டு பக்கத்து வூட்டு கோய்ந்தனெ தான் கூப்பிடும் ஆத்தா... அவன் அதெ காலாலயே நசுக்கி கையில தூக்கி எம் மூஞ்சிக்கி நேரா ஆட்டி ஆட்டி காட்டுறப்போ நா ஒண்ணுக்கே போயிருவேன்... அதுக்கு மாத்ரம் 'ஏன்ல இப்டி பயந்து சாவுறே'ன்னு கேட்டு ஆத்தா என்னெ அடிக்கும்... ஆமா, பெருமாசாமி... நா சொல்ல சொல்ல நீ வாய பொளந்துகிட்டு கேக்றியே... வேண்ணா வந்து பாரேன். ஒங்க வூட்டுக்கெல்லாம் இதெப் போல பாம்பு நரி ஆந்தெல்லாம் வராது... ஒங்க

தெருவுலாம் மச்சு வூடு, ஓட்டு வூடுன்னு நெறஞ்சி கெடக்கு. கண்ணே கூசுற மாரி நாலு வூட்டுக்கு ஒருக்க டியூபு லைட்டு போட்டு குடுத்திருக்காங்க... அத்தோட ஓங்க தெருவே சிமெண்ட் ரோடு தானே... அங்கேலாம் இதுங்க எப்டி வரும்...?"



நிலவரி கிடக்கட்டும். நீங்க லவ்வடிக்கறதை குருவி சைட் அடிக்குது அதை கவனிங்க முதல்ல!

அழிசோடை சொல்லும் கதைகளையெல்லாம் கேட்டு விட்டு பெருமாள்சாமி தானும் வந்து அதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டபோதுதான், அவனை அழைத்துக் கொண்டு போய்க் காண்பிப்பதாகச் சொல்லியிருந்தான் அழிசோடை.

இன்றைக்கு அய்யா வந்ததும் பெருமாள்சாமி நம் வீட்டில் ஒருநாள் இரவு வந்து தங்க அனுமதி வாங்க வேண்டும்... ஆனால் அய்யாவை நேரில் பார்க்கும்போது அவரைக் கேட்க வேண்டும் என்று நினைத்து வைத்திருந்த விசயமெல்லாம் சட்டென்று மறந்து போய் விடுகிறது! இன்றைக்கு மறக்காமல் கேட்க வேண்டும் என்று திரும்பத் திரும்ப முணுமுணுத்துக் கொண்டே நடந்து போய்க் கொண்டிருந்தான் அழிசோடை.

ஒருவேளை அவர் மறுத்து விட்டால்? இந்த சாதியை எவன் கண்டுபிடிச்சது?

யோசித்துக் கொண்டே வந்ததில் கீழே கொட்டிக் கிடந்த கஞ்சியில் காலை வைத்து விட்டான்.

சாலியர் தெரு வந்து விட்டது. பாவு போட்டு தெரு முழுக்க பசையும் கஞ்சியுமாய் விரவிக் கிடந்தது.

திடீரென்று அழிசோடைக்கு போன வாரம் பெருமாள்சாமியுடன் போட்ட சண்டை ஞாபகம் வந்தது.

"டேய், ஊத்தப் பல்லு..."

"போடா, கஞ்சிக்கில்லாத பயலே"

"மொரட்டுப் பயலே."

"பசக் கஞ்சிப் பயலே"

இதைக் கேட்டதும் கண்கள் சிவக்க கோபத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டு பெருமாள்சாமி தன் கடைசி ஆயுதத்தை எடுத்து வீசினான்.

"போலே... பன்னிக் கறி சாப்டுற பயலே..."

இதற்கு அழிசோடையிடம் பதில் இருக்காது.

இந்தப் பன்றிக் கறி தவிர தனக்கும் பெருமாள்சாமிக்கும் என்ன வித்தியாசம் என்று யோசனை பண்ணினான் அழிசோடை.

பெருமாள்சாமி தன்னை விட ஏழைமையானவன்தான் என்று ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்தான் அவன்.

முன்பெல்லாம் ஒருநாள் தறியில் ஐந்தாறு சேலைகளாவது அறுக்க முடியும் என்று நினைத்திருந்தான் அழிசோடை. ஆனால் பெருமாள்சாமியிடம் கேட்ட போதுதான் தெரிந்தது. ஒருநாள் பூராவும் ஒரு தறி போட்டால் ஒரே ஒரு சேலை தான் அறுக்க முடியும் என்று. அழிசோடையால் அதை நம்பவே முடியவில்லை. ஒரு சேலை அறுத்தால் இருபத்தஞ்சு ரூபாய் கூலியாம். ஒரு நாளைக்கு ஒரு சேலைதான் அறுக்க முடியும்.

பெருமாள்சாமி வீட்டில் ஒரே ஒரு தறி தான் இருப்பதையும் கவனித்திருக்கிறான் அழிசோடை.

தன் அய்யா நிச்சயம் இதைவிட இரண்டு மூன்று மடங்கு அதிக சம்பளம் வாங்குவார் என்று நினைத்துக் கொண்டான் அவன்.

அய்யா மட்டுமல்ல. இப்போது காந்திபுரத்தில் முக்கால்வாசிப் பேர் விவசாயத்தை விட்டு விட்டு மில்லில் சேர்ந்து விட்டார்கள். ஆனால் சாலியர் தெருவில் இன்னமும் எல்லோரும் தறியை மட்டுமே நம்பியிருந்தார்கள். காலை அஞ்சு மணிக்கு மில் சங்கு ஊதும் சத்தத்துடன் தறி அடிக்கும் சத்தமும் ஆரம்பமாகி விடும்.

அழிசோடை வரும் நேரத்திற்கு பெருமாள்சாமி தயாராக வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பான்.

இன்று அப்படி அவன் நிற்கவில்லை. ஒருவேளை தன்னை விட்டு விட்டு ஸ்கூலுக்குப் போய் விட்டானோ என்ற சந்தேகத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தான்.

அழிசோடை வந்ததை வீட்டில் யாரும் கவனிக்கவில்லை.

பெருமாள் சாமி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"போடு... அவனுக்கு இன்னம் கொஞ்சம் கறி போடு. அவனே பிரியமா கேக்குறப்ப நீ ஏன் மறுமார்ற? பன்னிக்கறி குளுமென்னாலும் ஒடம்புக்கு நல்லது. நீ சாப்புடுலே நல்லா..."

பெருமாள்சாமியின் அய்யா சொல்லிக் கொண்டிருந்தார்.

தன்னை யாரும் கவனிக்காததால் மேலும் உள்ளே போகாமல் திரும்பி வெளியே வந்து ஸ்கூலுக்கு தனியே நடக்க ஆரம்பித்தான் அழிசோடை.

பெருமாள்சாமியை நினைத்து அவனுக்குப் பாவமாக இருந்தது.

உங்கள் கவனத்திற்கு

உங்களுக்கு பிரச்னையா, சரியாக கட்டப்படாத வீடு, பாதி கட்டப்படாத வீடு, பிரச்னை உள்ள வீடு, சதா வியாகூலம், சண்டை, சச்சரவுகள் உள்ள வீடு, மந்தமான திருஷ்டி ஏவல் சேஷ்டையுள்ள, வியாபாரஸ்தலம் இவைகளுக்கு உடன் பலன் அளிக்கவல்ல "அர்த்தமேரு" பெறலாம். அனைத்து ரக்ஷை, எந்ரம் சம்பந்தப்பட்ட கேட்லாக் பெற ரூ. 2 ஸ்டாம்புடன் தொடர்பு கொள்க. பிரதி பௌர்ணமியும், வெள்ளிக்கிழமைகளிலும் இலவச அருள்வாக்கு காலை 11 மணிக்கு நடை பெறும்.

அர்த்தமேரு பீடம்	ரூ. 340.00
தனாகர்ஷண எந்ரம்	ரூ. 375.00
மஹா சுதர்ஸன எந்ரம்	ரூ. 380.00
ஹனுமத் ரக்ஷை	ரூ. 25.00
குபேர தனாகர்ஷிணி மூலிகை	ரூ. 25.00
மஹா வசீகர்ண ஹனுமத் அஞ்சன	ரூ. 61.00

மற்றும் பல அபூர்வ தெய்வீக சாதனங்களைப் பற்றி அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஹனுமத் தாஸர்

* காழியூர் பாரம்பர்ய ஜோதிடர்

Prof. K.G.B. Chariar, M.M.H & SCA
No. 16, 10th Street, Shanthi Nagar,
Adambakkam, Madras - 600 088.
Phone No: 2452881

மணமக்கள் தேவை கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்து சமூகத்திலும், ஆயிரக் கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

ஆங்கிலம், தமிழ்	:	ரூ. 50/-
எதிர்கால கணிப்புடன்	:	ரூ. 150/-
கல்யாண பொருத்தம்	:	ரூ. 50/-

CONSULT DIVINE ASTROLOGER THETIYUR V. MAHADEVAN WITH PRIOR APPOINTMENT.

ASTROLOGY SOFTWARE FOR SALE.

ஸ்வயம்வராலயா

(GOVT REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,

சென்னை - 33.	போன்	: 4846427
மைலாப்பூர்	போன்	: 4984278
பெங்களூர்	போன்	: 3340146

ALL POOJA ENTHRA/RAKSHA AVAILABLE RATES ON REQUEST

FARM LAND FOR SALE

அரிய வாய்ப்பு | **சிறந்த முதலீடு**

பிற மாவட்டங்களில் உள்ளவர்கள் சென்னையில் இடம் இல்லையே என்ற கவலையைப் போக்க இதோ உங்களுக்கு ஓர் வாய்ப்பு.

சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து 15 கி.மீ. தூரத்தில் சைதாப்பேட்டை தாலுக்கா, மாதவரம் அருகில் பஸ் வசதி **(38 G from High Court and 56K from Redhills)** சாலை வசதியுடன் கூடிய பண்ணை 10,500 சதுர அடி (ஒரு சதுர அடி ரூ. 19) கொண்ட இடம் விற்பனைக்கு உள்ளது. 23 பழ மரங்களை வைத்து 5 ஆண்டு காலம் பராமரித்து தருகிறோம்.

தென்னை – 10,	தேக்கு – 5,	எலுமிச்சை – 2,
சப்போட்டா – 2,	கொய்யா – 2,	மாமரம் – 2.

1. இந்த இடம் **M.M.D.A. LIMIT**-ல் **INNER RING ROAD**-க்கும் **OUTER-RING ROAD**-க்கும் இடையில் உள்ளது.
2. **OVER-HEAD TANK**-ல் இருந்து பிளாட்டிற்கு 2" தண்ணீர் குழாய், 3 ஏக்கரில் விளையாட்டு மைதானம், பண்ணையை சுற்றி இரும்பு வேலி.
3. **24 HOURS SECURITY**
4. **SWIMMING POOL**


முழு பணம் செலுத்திய உடன் பத்திரம் பதிவு செய்து தருகிறோம்.

குறிப்பு: 1. இது வெளிநாடு சென்று திரும்பியவர்களால் நடத்தப்படுவது என்பது குறிப்பிடத்தக்கது.

2. 5 ஆண்டு காலத்தில் உங்கள் முதலீடு 300% உயரும் என்பது உறுதி.

உடன் தொடர்பு கொள்க:–

ARVIND FARM HOUSE PVT LTD.,
40, I Cross Street, Radha Krishna Nagar, Chennai - 600 041.
Phone: 4912109, 5377462, 5376580





1997 ஜூலை 27
ஈசுவர ஆடி 11
மலர் : 55
இதழ் : 52

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



முதல்வர் ஒருபுறம்; மனச்சாட்சி ஒருபுறம்!

சில தினங்களுக்கு முன்னர்தான், 'எனது மனச்சாட்சியாக இருந்து பேசியிருக்கிறார்... என்று மாறன் பற்றிக் குறிப்பிட்டார் முதல்வர் கருணாநிதி. இன்றோ, முதல்வர் ஒரு பக்கமும் 'மனச்சாட்சி' இன்னொரு பக்கமுமாக இழுக்க, தி.மு.க. தடுமாறியிருக்கிறது!

'ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் உள்ள நான்கு தி.மு.க. அமைச்சர்களும் ராஜினாமா செய்துவிடுவார்கள்; மத்திய அரசுக்கு தி.மு.க. வெளியிலிருந்தபடியே ஆதரவு கொடுக்கும்' என்று நண்பகலில் முதல்வர் சென்னையில் ஒரு திடுதிப் அறிவிப்பு செய்தார்.

அறிவிப்பு வெளியான நேரம், மத்திய தொழில்துறை அமைச்சர் மாறன் இந்தியாவில் இல்லை. அன்றிரவே வந்து சேர்ந்தவர், டெல்லியை அடைந்ததுமே, "ராஜினாமாவெல்லாம் கிடையாது. முதல்வர் மத்திய அரசை எச்சரிக்கவே இப்படி ஓர் அறிவிப்பு செய்துள்ளார்," என தம் பங்குக்குப் பேசியிருக்கிறார்!

ஏற்கெனவே கழுத்தளவு குழப்பத்தில் உள்ள ஐ.மு. அரசின் பேரில் முதல்வர் இப்படியொரு இடியைத் தூக்கிப் போடவேண்டியதற்கான காரணம் என்ன...?

ஐ.மு.வில் இருக்கும் கட்சியினர் ஒருங்கிணைந்து, குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை அமுல்படுத்தாமல், தலைக்குத் தலை ஒவ்வொரு குறைந்தபட்ச திட்டத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர் என்பது கருணாநிதி கூறிய விளக்கம்.



ஐக்கிய முன்னணிக் கட்சிகளிடையே நூறு சதவிகித இசைவு என்பது ஆரம்பம் முதலே இல்லை. பல வேற்றுமைகளுக்கிடையேதான் நாட்டு நலன் கருதி ஆட்சி அமைக்க அக்கட்சிகள் ஒன்றுகூடின. அப்படி இருக்கையில், திடீரென்று பிற ஐ.மு. அங்கத்தினர்கள் பேரில் தி.மு.க. தலைவருக்குச் சந்தேகமோ மனஸ்தாபமோ உண்டாகக் காரணம் என்ன...?

- இதை உடைத்துச் சொல்லித் தெளிவுபடுத்தாத நிலையில் பத்திரிகைகள் தலைக்கு ஒன்றாகக் கற்பனைக் காரணங்களை வெளியிடுகின்றன. மாறனோ, வேறுவிதமாக அறிக்கை விடுகிறார். விளைவு : மக்கள் மதிப்பில் தி.மு.க. தலைமை தாழ்ந்து போகிறது.


முக்கியமான முடிவுகளை அறிவிக்கும் முன் முதல்வர், கட்சியில் முக்கியஸ்தர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும். முடிவுகளை அறிவித்த பின் அவற்றில் உறுதியாக நிற்க வேண்டும். இப்போது, மாறன் சொன்னதற்காக கலைஞர் கருத்தை மாற்றிக் கொள்வாரேயானால், இரு தலைவர்கள் பேரிலும் அவநம்பிக்கைதான் ஏற்படும்.

வீரப்பன் பிடியில் ஒன்பது பேர்!

ஒன்றல்ல, இரண்டல்ல... தொண்ணூற்றி மூன்று கொலைகள் செய்திருப்பவன்.... கொள்ளை வழிப்பறி, கடத்தல் என்று சகலவிதமான குற்றங்களையும் செய்து வருகிறவன்.

அவன் உயிருக்குப் பாதுகாப்புத் தர இரு மாநில அரசுகளும் சேர்ந்து முடிவெடுத்திருக்கின்றன!

ஒன்பது பேரைக் கடத்திச் சென்று தனது காவலில் வைத்திருக்கிறான் வீரப்பன். அவனது கோரிக்கைகளுக்கு உடன்படாவிட்டால் அவர்களின் உயிருக்கே ஆபத்து என்கிற சூழ்நிலையில் இரு மாநில அரசுகளும் இப்படி முடிவு செய்துள்ளன.



வீரப்பன் பிடியிலிருக்கும் ஒன்பது பேருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் நமது அனுதாபங்கள் உரியவை. ஆனால் அந்த அனுதாபத்தை நாம் வீரப்பன் பேரில் வீணடிப்பது முட்டாள்தனம்!

மேற்படி ஒன்பது பேரும் கடத்தப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னதாக, கொல்லேகால் பகுதியில் இருக்கும் அரசு அதிகாரிகளும் ஆசிரியர்களும் பாதுகாப்பு வேண்டி சிறப்புக் காவல் படையை அணுகியிருக்கின்றனர். ஆனால் STFம் சரி, மாவட்ட ஆட்சியகமும் சரி. அதைக் கண்டுகொள்ளவில்லை! அந்த அலட்சியத்தின் பயனாக ஒன்பது உயிர்கள் வீரப்பனின் பிடியில்!

அந்த ஒன்பது உயிர்களை வீரப்பனிடமிருந்து மீட்பதற்காக அவன் உயிருக்கு உத்தரவாதம் அளிப்பதில் பிசகில்லை. அதற்கு மேல் பொது மன்னிப்பு என்பதும், அவனுடைய இதர பல கோரிக்கைகளுக்கு இசைவதும் ஆபத்தாகவே முடியும்.

பத்திரிகைகளும் டெலிவிஷனும் ஏற்கெனவே அநியாயமாய் ஹீரோவாக்கிவிட்ட ஒரு கொள்ளைக்காரனுக்கு, அரசாங்கமும் மன்னிப்பு அளித்து ஆசீர்வதிக்குமானால் அதன் விளைவுகள் பயங்கரமாக இருக்கும்.

'எத்தகைய தவறையும் செய்துவிட்டு, தண்டனையின்றித் தப்பலாம்' என்பது பொது விதியாக வேர் கொள்வதற்கு இது முதல் படியாக இருக்கும்.

தனது 'ஹீரோ' இமேஜைப் பயன்படுத்தி, வீரப்பன் அரசியலில் புகுந்து விளையாட ஆரம்பித்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை!

'நியாயமான விசாரணை நடத்தி முறையாக நீதி வழங்கப்படும்' என்பதற்கு மேலாக எந்தவொரு உத்தரவாதத்தையும் வீரப்பனுக்கு அரசாங்கம் அளிக்கக்கூடாது.

அவ்வாறு அளிக்குமானால், அது இரு மாநில அரசுகளின் கையாலாகாத்தனத்தையே காட்டும்.

“எத்தனை பேரைக் கொல்வீர்கள்? 10? 100? 1000?”

மும்பை கலவரம் — நேரடி ரிப்போர்ட்

❒ ஜேயார்

“நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2 - 3 வருடங்களில் எந்தவிதக் கலவரங்களும் இல்லை” என மார்தட்டிக் கொண்ட சிவசேனை - பி.ஜே.பி. அரசை வெட்கித் தலை குனிய வைத்துவிட்டது, நான்கு நாட்கள் (ஜூலை 11 - 14) மும்பையில் நடந்த அதிபயங்கரக் கலவரம்.

கலவரத்துக்கு என்ன காரணம்?

வெள்ளிக்கிழமை, விடியும் வேளை, காட்கோபர் ரமா பாய் நகரிலுள்ள குடிசைக் குடியிருப்புப் பகுதியில், அம்பேத்கர் சிலை மீது யாரோ செருப்பு மாலை போட்டிருந்ததை காலனிவாசி ஒருவர் பார்த்து, கூக்குரலெழுப்ப, கொதித்தெழுந்தனர் பேட்டைவாசிகள். திரளாகக் கூடினர். கல்லெறி தூரத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருந்தும், தங்கள் தலைவர் சிலையை யாரோ அவமதித்ததை போலீஸ் கண்டு கொள்ளாமலிருந்ததால் எரிச்சலடைந்தனர்.

‘தலித்துகள் என்றால் மட்டமா?’ என்ற கோப உணர்வில் ஈஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவேயில் நின்று கொண்டிருந்த ஒரு சொகுசு பஸ்ஸைக் கொளுத்தி, ஓடும் வாகனங்களின் மீது கல்லெறிந்து, கலவரத்துக்கான அடிக்கல்நாட்டு விழாவைத் துவக்கி வைத்தனர்.

அருகே நிறுத்தியிருந்த இரண்டு LPG டாங்கர்களை எரிக்க முற்பட்டபோதுதான், SRP போலீஸ் படையினர் தங்கள் 303 ரைஃபிள்களால் படபடவென்று கூட்டத்தை நோக்கிச் சுட்டனர். கண் இமைக்கும் நேரத்தில் பத்து நபர்கள் கண்ணை மூட, அருகிலுள்ள ராஜாவாடி ஆஸ்பத்திரி, குண்டடிபட்ட நபர்களால் ரொம்பி வழிந்தது!

செய்தி பரவிய அதே வேகத்தில் கலவரமும் மும்பை



முழுதும் பரவியது!

போலீசார் வெறியாட்டம் ஆடியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர்; காரணம், அவர்கள் ‘வார்னிங்’ கொடுக்காமல், நேரடியாக குண்டு வீச்சில் இறங்கி, கிரிமினல்களைப் போல் இவர்களை இடுப்புக்குக் கீழே சகட்டுமேனிக்குச் சுட்டுத் தள்ளியதுதான்!

மரித்தவர்களில் ஒருவருக்குத்தான் நாற்பது வயது; ஒருவர் பெண்மணி; மற்றனைவரும் 18 - 22 வயதுக்குட்பட்ட இளம் குருத்துக்கள்! சிகிச்சை பெறுபவர்களில் பலரும் ‘என்ன நடக்கிறது?’ என வேடிக்கை பார்க்க வந்தவர்கள்.

இதற்கிடையில், அரசியல் ஆதாயம் தேடுபவர்களும் சுறுசுறுப்பாயினர். காங்கிரஸ் தலைவர்கள் சகன்புஜ்பலும், மதுகர் பிச்சடும் தலித்துகளுக்காக குடம் குடமாகக் கண்ணீர் விட, சரத்பவாரும் கவர்னர் அலெக்சாண்டரும் காயம்பட்டவர்களை ஒரே சமயத்தில் ‘தற்செயலாக’ச் சந்தித்து ஆறுதலளிக்க, முதலில் “என்கொயரி வேண்டும்” என்றும், அடுத்து “அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்” என்றும் கூக்குரல்கள் எழுந்தன.

அண்மையில் காந்திவிலியில் குடிசைகள் இடிக்கப்பட்டதை காரணம் காட்டி, தாழ்த்தப்பட்டோருக்கும் மைனாரிட்டிகளுக்கும் சிவசேனை - பி.ஜே.பி. அரசு



யமனென்றும், ''ட்ரிகர்-ஹாப்பி'' போலீசாரை ஊக்குவிப்பது அரசுதானென்றும், எரியும் தீயை வார்த்தைகளால் விசிறிக் கொண்டிருந்தனர் எதிர்க்கட்சியினர். மறுநாள் மும்பை பந்த் என்று காங்கிரஸும், ராம்தாஸ் அதவ்லே, கவய் போன்ற தலித் தலைவர்கள் அடங்கிய ரிபப்ளிகன் பார்ட்டியும் அறிவித்தது.

வெறுப்பின் உச்சியிலிருந்த தலித்துகள் "எத்தனை பேரை உங்களால் கொல்ல முடியும்? 10? ...100? 200?... நாங்கள் யார் என்பதைக் காட்டாமல் விடமாட்டோம்" என்று கோபாவேசத்தோடு 700 பஸ்களைச் சேதப்படுத்தி, ரயில்களை ஓடவிடாமல் தடுத்து, லேடீஸ் கம்பார்ட்மெண்டிலிருந்தவர்களைக் கூடத் தரதரவென்று வெளியே இழுத்து, அவமரியாதையாகப் பேசி, ரோடில் கண்ட வாகனங்கள் மீதெல்லாம் கல்லெறிந்து ஊழிக் கூத்தாடினர்!

அன்று ஒரு பள்ளி, ஒரு ஆபீஸ், ஒரு கடை கூடத் திறக்கவில்லை. ஒரு ஈ, காக்கை, புழு கூட வெளியே எட்டிப் பார்க்கவில்லை!

மும்பை பந்த், முழு வெற்றி பெற்றது!

ஞாயிறன்று இறந்தவர்களின் இறுதி ஊர்வலத்தில் 50,000 பேர் கலந்து கொண்டு, ஒரு பேரணியின் மகத்துவத்தை அதற்கு அளித்தனர்! உணர்ச்சிகள் உச்சத்தை எட்டின. சம்பவம் நடந்து 48 மணி நேரத்திற்குப் பின் வந்த ராம்தாஸ் அத்தாவ்லே, கவய் போன்ற தலித் தலைவர்களையே தாக்குமளவிற்கு முற்றிவிட்டது! அவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓட, மறுபக்கம் சிவ சேனைக்காரர்களின் சினம் கொதிநிலையை எட்டியது!

பரம வைரியான சகன்புஜ்பல் வீட்டில் புகுந்து, கையில் கிடைத்ததை எல்லாம் உடைத்து, ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டனர். ஏஸி பெட்ரூமின் பக்கத்திலிருந்த சின்ன அறையில், இருளில் பதுங்கி புஜ்பல் உயிர் தப்பினார்!

உடனே இந்தத் தாக்குதலைக் கண்டித்து அரசியல் தலைவர்கள் - தாக்கரே, மனோகர்ஜோஷி, முண்டே உட்பட எல்லோரும் அறிக்கை விட, ''அரசை டிஸ்மிஸ் செய்'' குரல்கள் ஓங்கி ஒலிக்க, ''அது தேவையேயில்லை! இது அண்டர்வர்ல்ட் டான் அருண் காவ்லியின் அகில பாரதிய சேனாவின் கைவரிசைதான்'' என முண்டே புதுக்குழப்பத்தை கிளப்பினார்! அதற்கேற்ப காவ்லியின் அடியாட்கள் சிலர் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட, ஒரே அமளிதான்!

ஊரே உறைந்திருக்க, வதந்திகள் மட்டும் காட்டுத் தீயாய்ப் பரவின. தாதரிலுள்ள சிவாஜி சிலை உடைக்கப்பட்டது; புஜ்பல், அதவ்லே போன்றோர் கொலை செய்யப்பட்டனர்; மும்பை பற்றி எரிகிறது, போன்றவை சில சுவாரஸ்ய மாதிரிகள். கேபிள் டீவி மூலமாக அவ்வப்போது காவல் துறை வதந்திகளை நம்ப வேண்டாம் எனக் கதறிக் கொண்டேயிருந்தது. காய்கறி விலை உச்சாணிக் கொம்பில் - (கிலோ 30 ரூ முதல் 40 ரூ வரை!)

''மங்கள்''வாரான செவ்வாயன்றுதான், நிலைமை மீண்டும் மங்களகரமானது. கலவரம் அடங்கி,பழையபடி மும்பையின் சுறுசுறுப்பும், பரபரப்பும் நெரிசலும், சந்தடியும் திரும்பிவிட்டன.

அரசு, இறந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும், வழக்கம்போல் ரூ. இரண்டு லட்சம், பத்தாயிரம் என்று அறிவித்திருக்கிறது: அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர், RPIயின் ஒற்றுமைக்குப் பாடுபட யத்தனித்து, கவய், ராம்தாஸ் போன்ற தலைவர்களுடன் இணைந்திருப்பது, லேசான நிம்மதியைத் தந்திருக்கிறது!

❐ மௌஷ்மி

9 ஜூலை, புதன்

செப்டெம்பர் 11-ம் தேதி நடைபெற விருக்கும் பாரதியார் விழாவிற்குத் தலைமை தாங்க வேண்டுமென்று கலைஞரைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டேன். அப்போது, என். மகாலிங்கம், கலைஞரிடம் தெரிவிக்கும்படி சொன்ன விஷயத்தையும் கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு போனேன்.

கும்பகோணம் அருகிலுள்ள தாராசுரத்தில் ஒட்டக்கூத்தருக்கு ஒரு கோவில் உள்ளது. பழம்பெருமை மிகுந்த அந்தக் கோவில் இன்று மிகவும் சிதிலமடைந்துள்ளது. அதைச் சீரமைக்க வேண்டுமென, அந்த ஊர் மக்கள் மகாலிங்கத்திடம் கேட்டார்களாம். அதைத்தான் கலைஞரிடம் தெரிவித்து, ஆவன செய்யும்படி கேட்கச் சொல்லியிருந்தார் என். எம். நான் ஒட்டக்கூத்தர்கோவில் பற்றி கலைஞரிடம் கூறி, நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொண்டேன்.

10 ஜூலை, வியாழன்

சில நாட்களுக்கு முன், எனது ஏழு நூல்களின் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் சுஜாதாவைச் சந்தித்தேன். சாவி பத்திரிகை மறுபடி வரப் போவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துவிட்டு, 'சில ஐடியாக்கள் இருக்கின்றன; டிஸ்கஸ் பண்ணலாம்' என்றார். இன்று கோபுலு வீட்டு மொட்டை மாடியில் சுஜாதா, கோபுலுவுடன் டிஸ்கஷன். சுஜாதா நிறைய ஐடியாக்கள் கொடுத்தார். தான், வாரா வாரம் நாட்டு நடப்பு பற்றி, ஒரு Signed Column எழுதுவதாய்ச் சொன்னார். கோபுலு, நிறைய சைலண்ட் ஜோக்ஸ் உருவாக்கித் தர உறுதி கூறினார். கோபுலு, புது மெருகு குலையாமல் தன் வீட்டைப் பராமரிப்பது கண்டு ஆச்சரியப்பட்டேன். அவர் வீட்டு மொட்டை மாடியிலேயே ஒரு சமையலறை. தோசை முதலான வழக்கமான ஐட்டங்கள் தவிர, கோபுலுவே, இளநீர் வழுக்கையை மிக்ஸியில் அரைத்து, ஏலம், சர்க்கரை சேர்த்து ஒரு புதிய ஐட்டம் தயாரித்துக் கொடுத்தார். அற்புதமான டேஸ்ட்!

11 ஜூலை வெள்ளி

இலக்கிய ஆர்வம் மிகுந்த திருவேங்கடம், முத்துகிருஷ்ணன் என்ற இரு நண்பர்கள் கம்பினிஸ் பார்ட்னர்கள்தான் சாவி பத்திரிகையை நடத்தப் போகிறார்கள். அவர்களைச் சந்தித்துப் பேசினேன். அண்ணா நகரில், பத்திரிகை ஆபீஸ் சென்றேன். ரிப்போர்டர், போட்டோகிராபர் பணிக்கு விண்ணப்பித்திருந்த முப்பது பேர்களை இண்டர்வியூ செய்தேன்.

கல்வித் தகுதிக்கு முக்கியத்துவம் தராமல், எழுத்துத் திறமையை கவனித்தேன். நகைச்சுவை உணர்வுடன் எழுதத் தெரிந்த தஞ்சை இளைஞர் ஒருவரிடம், இரண்டு புத்தகங்களைக் கொடுத்து, படித்துவிட்டு, விமர்சனம் எழுதச் சொன்னேன். 'பளிச்'சென்று விமர்சித்த பாங்கு என்னைக் கவர்ந்தது. வேலைக்கு நியமித்து விட்டேன்!

12 ஜூலை, சனி


ஓவியர் அரஸுடன், புதிய சாவி இதழின் அட்டைப் படத்தில் சினிமா நடிகைகளைப் போடாமல் வித்தியாசமாய் என்ன செய்யலாம் என ஆலோசனை நடத்தினேன். ஒரு புதுமையை முயற்சிக்க முடிவு செய்தோம். அது என்ன? முதல் இதழ் வரை காத்திருங்கள்.


அடுத்து, ஆசிரியர் குழுவுடன் ஆலோசனை. அடுப்பில், ஈரவிறகு பயன்படுத்தும் போது, கெரசினை ஊற்றுவோம். உடனே நன்றாய் எரியும். அதன்பின் மறுபடி கெரஸின் ஊற்றினால்தான் எரியும். அதைப் போலத்தான், இன்று பத்திரிகைகள் பரிசுகளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் எனக்கு உடன்பாடில்லை. எனவே, சாவியில் பரிசுகளை அள்ளி வழங்கும் போட்டிகள் எதுவும் கூடாது என்று அறிவித்தேன்.

13 ஜூலை, ஞாயிறு

ஓய்வு தினம். மாலையில் கலைஞர் தலைமையில் வைரமுத்து கவிதை நூல் வெளியீட்டு விழா. வித்தியாசமான முறையில் ஏற்பாடு செய்திருந்தார் வைரமுத்து. கலைஞரின் பேச்சு தனித்தன்மையுடன் இருந்தது. விழாவில் அரசியல், சினிமா, இலக்கியம் என்று முத்தரப்புப் பிரமுகர்கள் பலரைச் சந்தித்தேன்.

இரவு தூங்கும் போது, பதினொன்னரை மணிக்கு போன்! யாரென்று பார்த்தால் கலைஞர். விழாவில் அவரது பேச்சு பற்றிப் பாராட்டினேன். பத்திரிகை வேலை பற்றிக் கேட்டு விட்டு, 'நானும் சில ஆலோசனைகள் சொல்லட்டுமா?' என்றார். 'பேஷாக!' என்





றேன்.

அவர் சொன்னவற்றுள் முக்கியமானது :

"புலனாய்வு செய்து, கட்டுரைகள் எழுதுங்கள். அவற்றை மக்கள் விரும்பிப் படிக்கிறார்கள். ஆனால் எழுதும்போது, பொய் கலக்காமல் எழுதுங்கள்" என்றார்.

14 ஜூலை, திங்கள்

செய்யுங்கள்; பொய் கலக்காதீர்கள்!

இன்று அவசரமாய் பெங்களூருக்கு ஒரு நாள் பயணம். பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் பெங்களூர் போய், முக்கியமான புத்தகக் கடைகள் எல்லாம் ஒரு ரவுண்டு போய் சில ஆயிரம் ரூபாய்களுக்குப் புத்தகங்கள் வாங்கினேன். பிளாட்பார, பழைய புத்தகக் கடைகளையும் விட்டுவைக்கவில்லை!

வழக்கம் போல மாவலி டிபன் ரூம் விசிட்டும் உண்டு.

இரவு சென்னைக்கு ரயிலேறினேன்.

15 ஜூலை, செவ்வாய்

'பாண்ட்ஸ்' நிறுவனத்தின் பலராமனுடன் மேயர் ஸ்டாலினைச் சந்தித்தேன். ரிப்பன் பில்டிங்கில், லிஃப்ட் வேலை செய்யாததால், படியேறி மாடிக்குப் போனேன். கார்ப்பரேஷன் அலுவலகம் என்றால், என் மனதில் என்றைக்குமே பெரிய மரியாதை இருந்தது இல்லை.

ஆனால், நேரில் போன போது எனக்கு ஆச்சரியம். மேயரின் அறை படு நேர்த்தி. பலராமன், சிங்காரச் சென்னை திட்டத்துக்கு சில ஐடியாக்கள் கொடுத்தார்.

புறப்படும்போது என் விசிடிங் கார்டில், என் முகவரியை வட்டமிட்டுக் கொடுத்து, "தெருவில் குப்பை வாரப்படுவதில்லை; ரொம்ப அசுத்தமாய் இருக்கிறது" என்றேன்.

மறுநாள் முதல் கார்ப்பரேஷன் சுறுசுறுப்பாய் எங்கள் தெருவை சுத்தம் செய்கிறது. தேங்க் யூ ஸ்டாலின்.

16 ஜூலை, புதன்

சாவி முதல் இதழின் ஆசிரியர் பக்கத்துக்கான மேட்டரை இன்று எழுதி முடித்தேன்.

வரும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் போட்டு விட வேண்டும் என்பதை நான் ராஜாஜியிடமிருந்து கற்றுக் கொண்டேன். சாவி பத்திரிகை பற்றி சுப்புடு, பட்டுக்கோட்டை பிரபாகர், கடுகு, ராஜேஷ்குமார் போன்றவர்கள் எழுதிய கடிதங்களுக்கு பதில் எழுதினேன்.

புதிய லே அவுட் ஐடியாக்கள் பற்றி யோசித்தேன். ரொம்ப நாளைக்கப்புறம் சாயந்திரம் மைலாப்பூர் கிளப்புக்குப் போய் டிபன் சாப்பிட்டேன்.



• சிவாஜியுடன் ஸ்ரீதரன்

□ மணி

“நான் உழைக்கத் தயார்! நீங்கள் உதவத் தயாரா?”

“சிவாஜி கணேசனுக்கு சிறப்பு ஆஸ்கார் விருது வழங்க வேண்டும்” என்று அமெரிக்காவிலிருந்தபடி ஆஸ்கார் கமிட்டியுடன் போராடி வருகிறார், ஒரு தமிழர். பெயர்–வாஷிங்டன் ஸ்ரீதரன். எழுத்தாளரேதான்! சமீபத்தில் சென்னை வந்திருந்த அவரைச் சந்தித்த போது, தம் முயற்சிகளைப் பற்றிச் சொன்னார்.

“சிவாஜிக்கு ஆஸ்கார் கிடைக்க வேண்டுமென்ற ஆசையில் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் ரிச்சர்ட் அட்டன்பரோ, கர்ட் டக்லஸ் உட்பட பல ஹாலிவுட் பிரபலங்களுக்கு கடிதமெழுதினேன். அதில் சிவாஜி கணேசனின் திறமையைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். சில நாட்களிலேயே எலிசபெத் டெய்லர், ஹூபி கோல்டுபர்க் ஆகிய இருவரிடமிருந்தும் ஒரே மாதிரி பதில்கள் வந்தன. “எங்களுக்கும் இந்தத் தேர்வு முறைக்கும் சம்பந்தமில்லை. அமெரிக்கன் மோஷன் பிக்சர்ஸ் அமைப்பைத் தொடர்பு கொள்ளுங்கள்.”

எனவே, ஆஸ்கார் அமைப்பின் தலைவரான ஆர்தர் ஹெல்லருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினேன். பிரான்ஸ் நாடு செவாலியர் விருதை சிவாஜிக்கு அப்போது அளித்திருக்க, அதைப் பற்றிய செய்தியையும், அந்த நேரத்தில் சிவாஜி பற்றி ஹிந்து நாளிதழ் வெளியிட்டிருந்த கட்டுரையையும் இணைத்து அனுப்பினேன்.

இப்படி அனுப்புவதற்கு முன் சிவாஜி பற்றிய ஒரு வீடியோவும் தயாரித்து கூடவே அனுப்பினால் நன்றாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்த போது, ஓர் அரிய சந்தர்ப்பம் வந்தது. அமெரிக்கக் கூட்டுத் தமிழ்ச் சங்கமும், தமிழ் அறக்கட்டளையும் இணைந்து சிவாஜி, பாரதிராஜா, வைரமுத்து ஆகியோரை அழைத்துச் சிறப்பித்தன. பாரதிராஜா, வைரமுத்து ஆகியோரின் சிவாஜி பற்றிய மதிப்புரையோடு, சிவாஜியுடனும் சிறு பேட்டி ஒன்று எடுத்து பத்து நிமிட வீடியோ ஒன்றைத் தயார் செய்யலாம் என்று அமைப்பாளர்களைத் தொடர்பு கொண்டேன். ‘அதற்கெல்லாம் அனுமதி கிடையாது’ என்று அமைப்பாளர்கள் மறுத்து விட்டார்கள்! (“தமிழர்கள்!” என்கிறார் கசப்புடன்)


ஆர்தர் ஹெல்லரிடமிருந்து ஒரே வாரத்தில் ஒரு பக்கக் கடிதமொன்று கிடைத்தது. ‘சிறப்பு ஆஸ்கார் விருதைத் தீர்மானிப்பது ஒரு தனி நபரல்ல. முப்பத்தியொரு பேர் அமைந்த ஒரு குழுதான் இதைத் தீர்மானிக்கும். தற்போதைய குழுவில் உள்ள யாருமே சிவாஜி கணேசனின் எந்தப் படத்தையும் பார்த்திருக்கவில்லை. எனவே அவர் பெயரை விருதுக்குப் பரிந்துரைப்பது சுலபமானதாக இருக்காது’ என்பதே அதன் சாராம்சம்.

அமெரிக்காவில் நானே எழுதி சில தமிழ் நாடகங்களை அரங்கேற்றுவதுண்டு. அதற்கு வரும் பார்வையாளர்களிடமிருந்து ‘சிவாஜிக்கு ஆஸ்கார் அளிக்கப்பட வேண்டும்’ என்று கையெழுத்து வேட்டை நடத்தினேன். பலரும் உற்சாகமாகக் கையெழுத்திட்டனர். அதே சமயம் நடுநடுவில் சென்னை வந்த போது குட்டி பத்மினி, எஸ்.பி. முத்துராமன் போன்றவர்களிடம் சிவாஜி பற்றிய வீடியோ இருப்பதாகக் கேள்விப் பட்டு அதைப் பெற முயற்சித்தேன். பலனில்லை. எழுத்தாளர் சுஜாதாவிடம் என் ஆதங்கத்தைக் கூறி சிவாஜியைப் பற்றி ஒவ்வொரு பேட்டியிலும் புகழும் கமலஹாசன் இந்த விஷயத்தில் உதவுவாரா என்று கேட்டேன். “நிச்சயம்” என்றவர், எங்கள் சந்திப்புக்கு முயற்சி எடுத்துக் கொண்டார். அவ்வை சண்முகி படப்பிடிப்பில் கமல் பிஸி. சந்திக்க முடியவில்லை. இப்போது அப்போது என்று என்னை ரொம்பவும் அலையவிட்டார்கள். வருத்தத்துடன் விஷயத்தை விளக்கி அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். இன்று வரை பதிலில்லை.

மீண்டும் ஆஸ்கார் அமைப்புத் தலைவரை தொடர்பு கொண்டேன். அவர் சொந்தப் படத் தயாரிப்பில் பிஸியாக இருந்ததால், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர் பதில் எழுதினார். ஹெல்லரின் முதல் கடிதத்தில் என் யோசனையை ஏற்றுக் கொள்ளும் தொனி கிடையாதென்றும், முதலில் உள்ளூரில் (அதாவது இந்தியாவில்) அவருக்கு சிறந்ததொரு அங்கீகாரம் கிடைக்கட்டுமென்றும் எழுதியிருந்தார்.

பால்கே விருது அளிக்கப்பட்டிருக்கும் இது சரியான காலம். ஆஸ்கார் விஷயத்தில் தனி நபராக என்னால் எதுவும் முடியுமென்று தோன்றவில்லை. தமிழகத் திரையுலகம்தான் கூட்டுமுயற்சியாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும். உதவி செய்ய நான் ரெடி. என்னை ஒதுக்கிவிட்டு முயற்சியில் வெற்றி பெற்றாலும் சந்தோஷம்தான்” என்கிறார் ஸ்ரீதரன்.

சிவாஜிக்கு ஆஸ்கார்:



AUGUST '97
ISSUE

GOKULAM *Celebrates* 50 YEARS OF INDEPENDENCE

- A PATRIOT'S DAUGHTER RECALLS FREEDOM STRUGGLE
- A TALKING DOG
- SNORE TROUBLES!

GOKULAM, Ekkaduthangal, Chennai - 600 097

பறவை மோதி பயணிகள் மரணம்!

"கோயம்பேடு காய்கறி, பழ மார்க்கெட்டை மூடிவிடவேண்டும்"- இப்படி ஒரு ரிட் போட்டிருப்பவர் கொத்தவால் சாவடி மொத்த வியாபாரி அல்ல. தனியார் நிறுவனம் ஒன்றின் நிர்வாக இயக்குனர். தமது கோரிக்கைக்கு ஆதரவாக அவர் சுட்டிக் காட்டும் முக்கியமான காரணம் இதுதான்: "மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து கிளம்புகிற மற்றும் அங்கு வந்து சேருகின்ற பல விமானங்கள் கோயம்பேடு மார்க்கெட் வளாகத்தின் மீது செல்ல வேண்டியிருக்கிறது. மார்க்கெட் வட்டாரத்தில் பலவித பறவைகள் காணப்படுவதால், அழுகிய பழங்கள், காய்கறிகளுக்காக) இவை விமானப் பயணிகளுக்கு ஆபத்தை உண்டாக்கலாம்."

"பறவையால் விமானத்துக்கு ஆபத்து ஏற்படுமா?

'ஏற்படும்' என்று உறுதியாகச் சொல்கிறார்கள்.

ஒவ்வொரு விமான நிலையத்திலும், விமானம் கிளம்புவதற்கு முன் சின்ன வண்டி ஒன்று அந்த விமான தளத்தில் சத்தம் எழுப்பிக் கொண்டே வேகமாகச் செல்லும். அந்தப் பாதையில் உள்ள பறவைகளை பயமுறுத்தி, நகரவைக்கத்தான் இந்த ஏற்பாடு. இது எவ்வளவு முக்கியமான ஒன்று என்பது விமான ஓட்டிக்குத் தெரியும்.


"லாரி ஏறி பாதசாரி சாவு," "பஸ் மோதியதில் ஸ்கூட்டரில் சென்ற வாலிபர் இறந்தார்" என்பது போன்ற செய்திகளை சகஜமாக எடுத்துக் கொள்பவர்கள் கூட "பறவை மோதி விமானம் கீழே விழுந்து பயணிகள் இறந்தனர்" என்ற செய்தியைக் கேட்டால் ஆச்சர்யப்படலாம். என்றாலும் இது போன்ற சம்பவங்கள் பலமுறை விமான சரித்திரத்தில் பதிவாகி இருக்கின்றன!

1912ல் கலிபோர்னியாவில் ஸீகல் என்ற கடற்பறவை மோதி ஒரு விமானம் பாதிக்கப்பட, விமான ஓட்டிகள் மரணமடைந்தனர். பறவையால் விமானத்தில் உள்ள மனிதர்கள் உயிரிழந்தது இதுவே முதல் முறை. இந்தியாவில் கூட மூன்று முறை இது போன்ற அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன. உயிரிழப்பு நேராத போதும் பாதிக்கப்பட்ட விமானத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர பல லட்ச ரூபாய்கள் தேவைப்படுகின்றன!

பறவைகள், இயந்திரப் பறவைகள் இரண்டுக்கும் இடையே ஏற்படும் மோதல்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இதற்குப் பல காரணங்கள்.

ஆண்டு தோறும் அதிகமாகிக் கொண்டு வரும் ஆகாய விமானங்களின் எண்ணிக்கை ஒரு முக்கிய காரணம்.

தொழில்நுட்ப முன்னேற்றம் கூட இந்த வானத்து மோதலுக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. பழங்காலத்தில் விமானங்களில் பிஸ்டன் என்ஜின்கள் பொருத்தப்பட்டன. கிட்டத்தட்ட ஆட்டொமொபைல் என்ஜின்களைப் போன்றுதான் பிஸ்டன் என்ஜின்களும் செயல்படுகின்றன. இதனால் என்ஜின் இயங்கும் போது ஆகாய விமானத்தின் முன்புறமும் சரி, பின்புறமும் சரி எக்கச்சக்கமான சப்தம் கிளப்பும். இதனால் தங்களை அணுகும் ஆபத்தை உணர்ந்து கொள்ளும் பறவைகள் அந்த இடத்தை விட்டே பறந்து விடும். மேலும் அந்தக் கால விமானங்களின் வேகம் மிக அதிகமானதில்லை. இதனால் பறவைகள் விலகிச் செல்ல அவகாசம் ஓரளவுக்கு இருந்தது. அப்படியே பறவை ஏதாவது விமானத்தைத் தாக்கினாலும் (இந்தத் தாக்குதலெல்லாம் ரன்-வேயை நெருங்கிவரும்





விமானங்கள் மேல்தான் அதிகம் நடக்கும்!) ஆகாய விமானத்தில் உள்ள பிஸ்டன் என்ஜின்களுக்கருகே பொருத்தப்பட்டுள்ள ப்ரொபலர்கள் சுற்றிக் கொண்டே இருப்பதால், அவை பறவையின் ஒரு பகுதியை வெட்டிவிடவோ, பறவையை அந்த இடத்திலிருந்து தள்ளிவிடவோ ஏற்றதாக இருந்தது.

ஆனால் ஐம்பதுகளிலிருந்து ஜெட் என்ஜின்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றின் வேகம் அதிகம்; ஒலி குறைவு. ஜெட் என்ஜின் என்பது காற்றை உள்ளிழுத்துக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டவை. காற்றோடு சேர்ந்து, பறவையும் எஞ்சினுக்குள் இழுக்கப்பட்டால் எஞ்சின் திடீரென்று செயலிழக்கிறது. பறவை மோதியதில் பலிகள் தொடர்கின்றன!

எந்தப் பறவை இது போன்ற விபத்துக்குக் காரணமாகிறது என்கிறீர்களா? அப்படிக் குறிப்பிட்டு எந்த இனத்தையும் சொல்ல முடியவில்லை. ஒற்றுமைக்குப் பெயர்போன காக்கையிலிருந்து, மூக்கில் வியர்க்கும் சி.ஐ.டி. கழுகு வரை எல்லாமும் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றன! அவ்வளவு ஏன், சமாதானத்துக்கு எடுத்துக்காட்டாக நாம் குறிப்பிடும் புறா கூட இந்த ஆகாய யுத்தத்தில் பங்கு வகித்திருக்கிறது. இரண்டு முறை மயில்கள் கூட இந்தத் தாக்குதலில் பங்கு பெற்றிருக்கின்றன என்றால் வேறென்ன சொல்வது?

விமான நிலையத்தில் பறவைகளுக்கு என்ன அப்படி ஒரு கவர்ச்சி என்றால், இதற்கு மனிதர்கள் தான் காரணமாகிறார்கள். விமான நிலையத்தைச் சுற்றியும் உள்ள சாக்கடைகள். நீர் நிலைகள். இவற்றில் உள்ள உயிரினங்கள் பறவைக்கு இரையாகின்றன. எனவே இரையைத் தேடி அங்கெல்லாம் வட்டமிடுகின்றன பறவைகள். தவிர விமான நிலையங்களில் உள்ளவர்கள் சாப்பிட்டு விட்டுத் தூக்கிப் போடும் மிச்சங்கள், அருகிலுள்ள இறைச்சிக் கடைகள் ஆகியவையும் பறவைகளை 'வா வா' என்று அழைக்கின்றன.

'விமான தளத்தில் பறவைகள் ஓய்வெடுத்துக் கொள்ள விரும்புவதற்கும் ஒரு காரணம் உண்டு. அங்கிருந்து சுற்றுப்புறம் முழுவதும் பளிச்சென்று தெரிவதால் எதிரிகள் தாக்க வந்தால் உடனே தப்பித்து விட முடிகிறது. ஆனால் இந்த பிரம்மாண்ட இயந்திர எதிரியை அவை எதிர்பார்ப்பதில்லை!

விமானத் துறை அதிகாரிகளும் பறவைகளை விமான நிலையப் பகுதிகளிலிருந்து அகற்ற பலவித முயற்சிகள் மேற்கொள்கிறார்கள். மும்பையில் இதற்காக ஓர் அமைப்பே இருக்கிறது. பறவைகளுக்குப் பிடிக்காத சிலவகைச் செடிகளை வளர்ப்பது, பட்டாசுகளை வெடித்து பறவைகளைச் சிதறச் செய்வது, சாக்கடைகளை அடைப்பது- இப்படிப் பலவித முயற்சிகள் நடைபெற்று வருகின்றன- பறவைகளைக் காப்பதற்காகவும் அதன்மூலம் விமான விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவும்!

திருக்கூடல் பேரூராட்சி அலுவலகத்தில் தலைவர் மேஜைக்கு முன்னால் தரையில் ஒரு பாயில் மோகன்ராஜ் படுத்திருந்தான்.

முகம் லேசாக வீங்கியிருந்தது. வலது முழங்கையிலும் ஒரு வீக்கம். கண்களை சிறிது நேரத்திற்கு ஒரு தரம் திறந்து திறந்து பார்த்து இமைகள் மூடின.

படுத்திருந்த இடம் பேரூராட்சிக் கூட்டம் நடக்கிற ஹால். நாற்காலிகளில், காலியிடத்தில், அவனருகில் யார் யாரோ உட்கார்ந்திருந்தனர். சிலர் நின்றனர். வேடிக்கை பார்க்கக் கூடியவர்கள்.

அனந்தாச்சாரி உள்ளே நுழைந்தார். நாற்காலியில் உட்கார்ந்திருந்த நாலைந்து பேர் எழுந்து நின்றனர்.

அவர் அதைக் கவனிக்கவில்லை. எங்கும் எப்போதும் அவரது வருகை மரியாதைக்கு உரியதாயிருப்பதை அனந்தாச்சாரி உணர்ந்திருக்கிறார்.

அந்த மரியாதையில் பக்தி, அன்பு, நேசம் என்று பல கலவைகள்.

அனந்தாச்சாரி அதை ஏற்றுக் கொண்டதாகக் காட்டிக் கொள்ள மாட்டார். கவனிப்பதுகூட இல்லை.

இப்போதும் அப்படியே அவர் மோகன்ராஜிடம் போய் நின்றார். அவன் கண் மூடியிருந்தான்.

யாரோ "அண்ணாத்தே, சர்தார்ஜி வந்திருக்காரு" என்று உரக்கச் சொன்னான்.

சொன்னவனைத் திரும்பிப் பார்த்து "ஏன் தொந்தரவு பண்றே?" என்று கண்டிப்பாக இல்லாமல் இதமாய்ச் சொன்னார்.

அவனுக்கு வெட்கமாய் விட்டது.

அதற்குள் மோகன்ராஜ் கண் விழித்தான்.

"தலைவரே" என்று எழுந்து உட்கார முயன்றான்.

"நீ படு... படு" என்று அவனைக் குனிந்து கை தொட்டுத் தட்டிக் கொடுத்தார் அனந்தாச்சாரி.

"என்ன நடந்தது?" என்று மோகன்ராஜை விட்டு பக்கத்தில் நின்றவனைக் கேட்டார்.

"விடியகாத்தால மோகன்ராஜ் வண்டிய எடுத்துகினு இப்ராயீம் பாய் மாந்தோப்புக்குப் பக்கத்திலே கல்வர்ட் ஒன்று இருக்குது பாருங்க... அங்க வந்துக்கினு இருந்தோம்..."

அனந்தாச்சாரி நிறுத்தச் சொல்வதுபோல் கை காட்டிக் கேட்டார்.

"நீயும்கூட வந்தியா?"

"ஆமாங்க தலைவரே.... சொந்தமா ஆட்டோ வாங்கறதுக்கோசரம் போனேன். அண்ணன் மொதல்லே வண்டி ஓட்டத் தெரிஞ்சுக்குவே வாடாண்ணு இட்டாந்தாரு"

அனந்தாச்சாரி அவனை நிமிர்ந்து நன்றாகப் பார்த்தார்.

"நீ லைன்மேன் குமாரசாமி மகன் வடிவேலு இல்லே?" என்று கேட்டார்.

"ஆமாங்க தலைவரே.. கரெக்டா ஞாபகம் வச்சுனு இருக்கீங்களே! கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்லே சேர விண்ணப்பம் பூர்த்தி பண்ணிக் குடுத்தீங்க!" என்றார்.

"ம்ம்... சொல்லு" என்று அனந்தாச்சாரி கண்களை மூடித் தலையாட்டினார்.

"கல்வர்ட் மேலே தடிதடியா ரெண்டு பேரு ஒக்காந்துனு இருந்தானுங்க. வண்டியப் பாத்ததும் ஒருத்தன் எழுந்து வந்து கையை ஆட்டி நிறுத்தினான்."

"அப்போ மணி என்ன இருக்கும்?"

"ஆறு மணி இருக்கும்"

"ம்ம்... சொல்லு"

"நிப்பாட்டினோம். ஆற்காடு போவணும் வர்றியாண்ணு நிறுத்தினவன் கேட்டான். நூத்தம்பது ரூவா ஆவும்னு

4 கன்னியராகி நிலவினில் ஆடி...

அண்ணாத்தை சொன்னாரு. சரின்னு ரெண்டு பேரும் ஏறி உக்காந்தானுங்க"

அனந்தாச்சாரி திரும்பி மோகன்ராஜைப் பார்த்தார். அவன் வலியில் முகம் சுளித்துப் புரண்டு படுத்தான்.

"கொஞ்சம் இருப்பா! டாக்டர்கிட்டே இவன கூட்டிட்டுப் போனீங்களா?" என்று வடிவேலுவைக் கேட்டார்.

"கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி டாக்டர் ஒம்பது மணிக்கு மேலே வருவாராங்க! நாங்க ஸ்ரீராமுலு டாக்டரை இட்டாந்தோம். ஊசி போட்டு மாத்திரை குடுத்துட்டுப் போனாருங்க"

"சீரியஸ்னு சொன்னாரா?"


"இல்லீங்க... ரப்பர் தடியால அடிச்சிருக்காங்க. உள்காயம். நார்மலாவறதுக்கு மூணு நாலு நாள் ஆவும்னு சொன்னாருங்க"

"ம்ம்.. சரி சொல்லு"


வடிவேலு சொல்லத் தொடங்கினான்.

இப்ராஹிம் பாய் மாந்தோப்புக்குப் பக்கத்தில் ஓடிய பாதையில் வண்டி திருப்பச் சொல்லப்பட்டது. தோப்புக்குள் ஒரு மூட்டை எடுத்து வர வேண்டும் என்ற காரணம் சொன்னார்கள்.

வடிவேலு சந்தேகப்பட்டாலும் மோகன்ராஜ் அங்கு வண்டியை ஓட்டிச் சென்றது. ஜன நடமாட்டம் இல்லாத இருண்ட இடத்தில் வண்டி நின்றதும் ஒருவன் வடிவேலுவை பலமாக உதைத்தது. மற்றவன் ஒரு ரப்



காது மேல
ரெண்டு
குடுத்தா
தன்னால
நின்னுடும்!



பர் தடியால் மாறி மாறி மோகன்ராஜைத் தாக்கியது, மோகன்ராஜ் மயங்கி விழுந்தது. பிறகு வடிவேலு நினைவிழந்தது என்று வரிசையாகச் சொன்னான்.

கேட்டுக் கொண்டே வந்த அனந்தாச்சாரி "எதுக்கு அடிச்சாங்க?" என்று கேட்டார்.

"தெரிலீங்க தலைவரே... ஒருத்தன் மட்டும் கூட்டம் கூட்டி மெரட்டலாம்னு பார்க்கறீங்களா... அசக்க முடியாதுடா... இதான் லாஸ்ட் வார்னிங்... அடுத்த தபா தலை நீட்டினா ஆட்டோ ரோடு மேலே ஓடாது... காய்லான் கடைலேதான் நிக்கும்னு ஒருத்தன் கத்தினான்" என்றான் வடிவேலு.

அனந்தாச்சாரி முகம் திரும்பி படுத்திருந்த மோகன்ராஜைப் பார்த்தார். அவர் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டு ஆமாம் சொல்வதுபோல் அவன் தலையசைத்தான்.

"ம்ம்... அப்புறம்?"

"ஒன் அவர் வரைக்கும் ரெண்டு பேரும் மயக்கமாவே விழுந்து கெடந்தோம். அப்பறமா நான்தான் முழிச்சி எழுந்து கெணத்தாண்ட இருந்த பக்கெட்லே கொஞ்சம் தண்ணி எடுத்தாந்து அண்ணாத்த மூஞ்சிலே அடிச்சு எழுப்பினேன்."

வடிவேலு இரண்டு மூன்று முறை வற்புறுத்தியும் போலீஸில் புகார் கொடுக்க மறுத்திருக்கிறான் மோகன்ராஜ். தன்னால் வண்டி ஓட்ட முடியவில்லை என்பதற்காக வடிவேலுவையே பேரூராட்சி அலுவலகம் வரை ஓட்டி வரச் சொல்லியிருக்கிறான்.

அனந்தாச்சாரி மோகன்ராஜ் எடுத்த முடிவை உள்ளூர மெச்சிக் கொண்டார்.

நேற்று ஸ்டேஷனில் இருந்து வரும் வழியில் கிரைம் பிராஞ்ச்காரர் மிரட்டிய சங்கதியை மோகன்ராஜ் சொன்னதையும், பத்ரி நாராயணனின் சகோதரிதான் டிஎஸ்.பி என்ற தகவலையும், எந்த முடிவையும் தன்னைக் கேட்காமல் எடுக்கக் கூடாது என்ற மோகன்ராஜின் உறுதியையும் கூட்டிக் கோத்து யோசித்தபோது மோகன்ராஜின் புத்தி கூர்மை அவரை மேலும் சிலாகிக்க வைத்தது.

வடிவேலு முடித்ததும் சுற்றி நின்ற கூட்டத்தில் ஒரு சலசலப்பு.

"தலைவர் வர்றாரு.... வழி விடு... ஒதுங்கி நில்லுப்பா" என்று இரண்டு மூன்று குரல்கள் கேட்டன.

பேரூராட்சித் தலைவர் கலையரசன் அனந்தாச்சாரியைப் பார்த்துக் கைகூப்பிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

"வணக்கம்... வா கலையரசு!" என்றார் அனந்தாச்சாரி.

அவருக்கும் மோகன்ராஜ் வணக்கம் தெரிவித்து எழ முயன்றார்.

"நீ படு தம்பி" என்று கலையரசன் அவனை ஆசுவாசப்படுத்திவிட்டு "என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.

"வடிவேலு... தலைவர்கிட்டே நடந்ததைச் சொல்லு" என்றார் அனந்தாச்சாரி.

மறுபடியும் வடிவேலு நடந்ததை ஒப்புவித்தான்.

"போலீஸ் கம்ப்ளெயிண்ட் குடுத்துடலாங்களே சர்தார்ஜி?" என்று கலையரசன் கேட்டார்.


அனந்தாச்சாரி அவரை கண் சுருக்கிப் பார்த்து இறுக்கமாக ஒரு புன்னகை செய்தார். அதில் தொனித்த ஒரு விவேகம் தன்னை ஓர் அனுபவமற்ற இளைஞனாகக் குன்ற வைப்பதை கலையரசன் உணர்ந்தார்.

"அது அவசியம்னா நெனக்கிறே?" என்று பிரியம் தொனிக்கக் கேட்டார்.

கலையரசன் குழம்பினார்.

"சப் இன்ஸ்பெக்டரு... பாவம்... ஏற்கெனவே கேஸுங்க கள்ளச்சாராயம்... கஞ்சாக் கடத்தல்னு அவருக்கு ஓவர்லோடு. நாம வேற தொந்தரவு பண்ணினா இதென்னா ரோதனை பிடிச்ச ஊராயிருக்கேன்னு ட்ரான்ஸ்பர் வாங்கிட்டுப் போய் விடுவாரு"

கூட்டத்தில் யாரோ சிரித்தார்கள். கலை



"டாக்டர்! காது குடையற என்னோட பழக்கத்தை நிறுத்தவே முடியாதா?"

"யோவ்! இப்ப நீ குடையறது என்னோட காது!"

- கொங்கணாபுரம் வே. செந்தில்

யரசன் முகத்திலும் புன்னகை ஓடிற்று. அதில் பயனிருக்காது என்று புரிந்தது.

"சர்தார்ஜி... நிக்கறீங்க... இப்படி உட்காரலாமே" என்று தன் நாற்காலியைக் காட்டினார் கலையரசன்.

கலையரசன் பேரூராட்சித் தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்யும்போது அனந்த சயனப் பெருமாளைச் சேவித்து விட்டு அடுத்து வந்த இடம் அனந்தாச்சாரி வீடுதான்.

காலில் விழுந்தவரைக் கை தூக்கி எழுப்பி ஒரு சரிகைத் துண்டைப் போர்த்தி அனந்தாச்சாரி ஆசீர்வதித்தார்.

"நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன். ஊர் நன்மை, நாட்டு நன்மை இதுதான் என்னோட ஒரே அரசியல். இருந்தாலும் சொல்றேன். நீ ஜெயிப்பே"

"உங்க ஆசிர்வாதம் சர்தார்ஜி... நாங்க சின்ன மனுஷங்க... இப்படிச் சின்னச் சின்ன ஆசையைத் தூண்டிவிட்டு தள்ளி விட்டுட்டாங்க. பின்னாடி வர்ற கூட்டத்தைப் பாத்தா மலைப்பா இருக்கு. மக்கள் தொண்டே மகேசன் தொண்டுன்னு தோணுது"

"இது நாற்காலியிலே ஒக்காந்த பிறகும் நெஞ்சிலே நீங்காம இருக்கணும். அந்த பயம் இருந்தா அடுத்தமுறையும் ஜெயிக்கலாம்"

"எத்தினியோ தலைவருங்களை நீங்க பாத்துட்டீங்க. பதவிக்கு ஆசைப்படாத பெருந் தலைவரா நிக்கறீங்க. நீங்கதான் வழி காட்டணும்"

கலையரசன் சொன்னது உபசாரமில்லை; மிகையுமில்லை என்றுகூட நின்ற கூட்டத்தின் மனோபாவம் முகமலர்ச்சியில் பிரதிபலித்தது.

'நாராயணா... நாராயணா' என்று தனக்குள் அனந்தாச்சாரி சொல்லிக் கொண்டார். கர்வமோ, பெருமிதமோ, பாசி போல் மனதில் படர முயலும்போது அந்தச் சொல் அதை ஒதுக்கி விடும்.

அது அவரை விரக்தியிலிருந்து காப்பாற்றியிருக்கிறது. வெறுப்பிலிருந்து, வேட்கையிலிருந்து, மதிப்பீடுகள் கண்ணெதிரே சுக்கல் சுக்கலாக நொறுங்கிய சோகத்திலிருந்து, ஏக்கத்திலிருந்து, தாபத்திலிருந்து மீட்டிருக்கிறது.

"ஊஹூம்... அது உன் நாற்காலி. நீ போய் உட்காரு" என்று மறுத்தார்.

"அதற்குள் யாரோ எழுந்து ஒரு ஸ்டீல் நாற்காலி கொண்டு வந்து போட்டு உட்காரச் சொன்னார். அவர் அமரவில்லை.

கலையரசன் தயங்கி நிற்பதைக் கவனித்தார் "ஏம்பா... நீ பேரூராட்சித் தலைவரு. நீ நின்னுண்டிருந்தா நான் எப்படி உட்கார்றது?" என்றார்.

கலையரசன் வெட்கத்தோடு நெளிந்து கொண்டே போய்த் தன் நாற்காலியில் உட்கார்ந்தார்.

அனந்தாச்சாரி அவரைப் பார்த்து "எதுக்கும் மோகன்ராஜையும் ஒரு வார்த்தை



"சார்! நீங்க 'மாஜி மந்திரி'யா இருக்கலாம்... அதுக்காக ரேஷன் கார்டு அப்ளிகேஷன்ல மாத வருமானம் 'ஒரு ரூபாய்'-னு போட்டிருக்கிறது அவ்வளவு நல்லாயில்லை...!"

- கி. ராதாகிருஷ்ணன்

கேட்டுடலாமே?" என்றார்.

"கேளுங்க சர்தார்ஜி"

"என்ன மோகன்.. போலீஸ் கம்ப்ளெய்ண்ட் கொடுக்கணும்னு ஏதாவது அபிப்ராயம் இருக்கா?"

"வேணாம் சர்தார்ஜி" என்றான் மோகன் ராஜ்.

அனந்தாச்சாரி கலையரசனைப் பார்த்தார்.

"விஷயத்துக்கு விசை எங்கே இருக்குன்னு புரிஞ்சிருக்குமே கலையரசு" என்றார்.

"கெமிக்கல் தொழிற்சாலை?"

"அதேதான்! கட்டட காண்ட்ராக்ட் எடுத்தவர் கோடிக்கணக்கிலே லாபக்கணக்கு போட்டு காண்ட்ராக்ட் எடுத்திருப்பாரு. இப்படி எடைஞ்சல் வந்தா தாங்கிப்பாரா? பாவம்... இப்படி சகதியிலே எறங்கி சாதிக்கப் பார்க்கிறாரு...ம்ம்ம். இன்னும்



நாட்டுல ஒரு ரூபாய்ங்கறதையே ஒழிச்சிட்டாத் தேவலை!

தொழிலை அவரு நன்னா கத்துக்க வேணும்" என்று முகம் நலுங்காமல் சொன்னார் அனந்தாச்சாரி.

"எப்படியாவது அவருக்குக் கோடிகள் சேந்தும். நமக்குக் குடிதண்ணி நாசமாயிடும் இப்பவே தோல் பாக்டரிங்க கழிவிலே ஆயிரக் கணக்கான ஏக்கரா பூமி மலடாப் போச்சு"

சொன்னவர் ஆதிகேசவலு நாயுடு. அவர் நிலம் அடி வாங்கியிருந்தது. கால் பங்கு விளைச்சல்கூடத் தேறவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

எதிர்வரிசை நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஆனந்தா சோடா பாக்டரி மருதப்ப செட்டியார் தம் ஸ்தூல சரீரத்தை, சற்று தூக்கிப் பெருமூச்சு விட்டுத் தொண்டை செருமினார்.

"எல்லாருக்கும் கோடி கோடியா சொமட்டி எடுத்துடணும். வெளச்சல் நிலத்து மேல திம்சு போட்டு கெடைக்கற சோத்து மேல காங்க்ரீட்டை மூடி தொழிற்ற்சாலை கட்டிடணும்.." அவர் ஆத்திரம் மூன்று 'ற்' போட வைத்தது.

மளிகைக்கடை முத்துவேலு முழங்கால் வேட்டியைத் தளர விட்டுக் கொண்டே தொடர்ந்தார்.

"அப்பறமா எல்லாரும் வாங்கடா வேலை குடுக்கறேண்ணு ஆம்பளை பொம்பளை எல்லாரையும் அன்னதானத்துக்கு நிக்கிற பரதேசிக் கூட்டமாக் கியூவிலே நிறுத்திடணும்"

அனந்தாச்சாரி இடைமறித்தார்.

"அப்படிச் சொல்லிடலாமா... கோடானு கோடியாத் தோல் வித்து செருப்பு வித்து அந்நியச் செலாவணி கெடைக்குதே!"

வெடுக்கென்று குறுக்கிட்டார் மருதப்பா செட்டியார்.

"எதுக்கு இவங்க விமானத்திலே ஏறி வெளிநாடு போயி தூதுக்குழு, கொத்தவரங்காக் குழுண்ணு அந்தச் செலாவணியை வேட்டு விடவா?"

அனந்தாச்சாரியை ஆதிகேசவலு முந்திக் கொண்டு ஆத்திரத்தைக் கொட்ட ஆரம்பித்தார்.

"கண்ணை வித்து சித்திரம் வாங்கு. ஊரை அடிச்சு உலைலே போடு. குடிதண்ணியை நாசமாக்கு. மானமா நிமிந்தா பொளைச்சுக் கிட்டிருக்கான் விவசாயி? அட இன்னுமா... சொதந்திரம் வாங்கி அம்பது வருசம் ஆச்சு... இன்னும் ஏன் அந்த முண்டம் நிமிந்துக்கிட்டிருக்கு? முதுகிலே ஓங்கி அடி... வாரக்கூலிய வீசித் தோல் அறுக்க இழுத்தா..."

ஆதிகேசவுலு நாயுடு தானே நாட்டில் பெரும்புள்ளியான மாதிரி கற்பனையாக எதிரில் எவரையோ நிறுத்தி ஏவி வெறுப்பு கக்கினார்.

"அந்நியச் செலாவணிய அழகான சூட்கேஸுலே அடுக்குங்கடா அறிவு கெட்ட மூதேவிங்களா... ஸ்விஸ் பாங்குக்குப் போவத்தாவலு?"

கூட்டத்தில் சிறு சிரிப்பலை.

"இதாய்யா தேசம்! எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய தேசம். இப்ப உள்ள தண்ணியையும் உறிஞ்சி எடுத்து தோல் தொழில் வளர்க்க கெமிக்கல் தொழிற்சாலை கட்டப் போறாங்க"

பேச்சு ஒரு முடிவும் காணாத வெற்று உணர்ச்சிக் கொதிப்பில் ஓடி விரயமாகும் என்பது அனந்தாச்சாரியின் அனுபவம்.

"இப்ப நடக்க வேண்டியதுக்கு என்ன செய்யலாம் சொல்லுங்க!" என்று நயமாகச் சிரித்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

"இதுக்கு எதிர்ப்பு தெரிவிச்சாகணும். ஆட்டோ தொழிலாளி மோகன்ராஜ் தாக்கப்பட்டதற்கு கண்டன ஊர்வலம் நடத்தி கலெக்டர் ஆபீஸ்லே தர்ணா பண்ணணும்" என்றார் உள்ளூர் மார்க்சிஸ்டு செல்வமுத்து.

"என்ன நடந்துடும்னு நெனக்கிறீங்க?"

"ஒரு விழிப்புணர்வு வரும்லே"

"போன தடவை ஆண்ட்ரூஸ்பேட்டை குடி மக்கள் குடிதண்ணீருக்காகப் பாளை உடைப்பு போராட்டமும் ஊர்வலமும் நடத்தினாங்க. என்ன நடந்தது? தண்ணி கெடைச்சுதா?..."

"நிதி வசதி இல்லீங்களே சர்தார்ஜி" என்று இடைமறித்தார் கலையரசன்.

"நான் குற்றம் சொல்லலே. விழிப்புணர்வுண்ணு காம்ரேட் சொன்னாரே! அதுக்குச் சொல்றேன். நீங்க கலெக்டர் ஆபீஸ் தகவலை செராக்ஸ் எடுத்து நோட்டீஸ் போர்ட்லே ஒட்டினீங்க. இவங்க நோட்டீஸ் போட்டு வீடு விடா விநியோகம் பண்ணாங்க. என்ன ஆச்சு... அட போய்யாண்ணு தூக்க உணர்வு வந்துட்டுது"

மீண்டும் கூட்டத்தில் சிரிப்பலை...

"நல்ல தண்ணியாவது... நல்ல காத்தாவது... நல்ல நெல்லாவது? தொழில் வளர்ச்சி தான் முக்கியம்... ஒன்னால ஆனதைப் பாருண்ணு மோகன்ராஜ் மூலியமா எச்சரிக்கை விட்டுட்டாங்க!" என்று ஆதிகேசவுலு நாயுடு விஷயத்துக்கு வந்தார்.

"சர்தார்ஜி! இந்த மயிலுங்ககிட்டே பெட்டிஷன் போட்டோ மொட்டலுக்கு தலை குனிந்தோ எறகு வாங்க முடியாது. ஏத்கெனவே நீங்க டிசைட் பண்ண மாதிரி தேரடி மண்டபத்திலே மறுபடியும் கூட்டம் போட்டு இதுக்கு முடிவு கட்டியாகணும்..." என்றார் இதுவரை பேசாமலிருந்த போட்டோ ஸ்டுடியோ சுந்தரமூர்த்தி.

"வர்ற வெள்ளிக்கௌமை நல்ல நாள்" என்று வலியுறுத்தினார் ஆதிகேசவலு நாயுடு. ஜிவுஜிவுவென்று உணர்ச்சி வேகத்தின் சூடு பரவியிருந்த கூட்டம் "ஆமாம் ஆமாம்" என்றது.

அனந்தாச்சாரி யோசித்தார். அன்றுதான் திருவனந்தபுரத்து வரன் நர்மதாவைப் பெண் பார்க்க வரும் நாள்.

(தொடரும்)

☐ எஸ். சந்திரமௌலி

சின்னச் சின்ன ஆசை; இவர்களுக்கு டைரக்ட் பண்ண ஆசை!

சின்னச் சின்ன ஆசை. சன் டீ.வி.யில் ஒளிபரப்பாகும் தொடர். இதன் ஸ்பெஷாலிடி என்ன தெரியுமா? இதுவரை கேமராவுக்கு முன் நடித்துக் கொண்டிருந்த நடிகைகள், இயக்குனர்கள் ஆகியிருப்பதுதான். குஷ்பு, ரோகிணி, அர்ச்சனா, ஹீரா, கௌதமி, சுகன்யா என்று ஆறு பேரும் தலா இரண்டு வாரத்துக்கு வரும் படியாய் ஆளுக்கு ஒவ்வொரு கதையை இயக்கியிருக்கிறார்கள்.

அடுத்து, இந்த லிஸ்டில் இடம்பெறப் போகிற நடிகைகள் சுஹாசினி, ஊர்வசி, கஸ்தூரி, ஷோபனா, ரஞ்சிதா, ரேவதி. இன்னும் சிலரும் சேரக்கூடும்.

இந்த நடிகைகள் எல்லாம் எப்படி இயக்குனர்கள் ஆனார்கள்?

''வெறும் நடிகையாக அல்லாமல் ஒரு சிருஷ்டி கர்த்தா என்கிற முறையில், எங்கள் டீ.வி. சீரியல்களின் கதை டிஸ்கஷன், ஸ்கிரிப்ட், இயக்கம் என்று பல விஷயங்களிலும் என் மனைவி ரேவதி பங்கேற்பார். ரோகிணியும், ஸ்கிரிப்ட் தயாரிப்பு, டைரக்ஷனில் ஈடுபாடு கொண்டவர். டைரக்ஷன் ஆர்வம் இருக்கும் இவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் என்ன என்று யோசித்ததன் விளைவுதான் சின்னச் சின்ன ஆசை. இந்த ஐடியாவைத் தன் சக நடிகைகளிடம் ரேவதி கூறியபோது, ஏகப்பட்ட வரவேற்பு'' என்கிறார் சுரேஷ் மேனன்.

''எல்லாக் கதைகளுமே அவரவர்களுடைய படைப்புதான்! இதைச் சொன்னால் எத்தனை பேர் நம்புவார்கள் என்று தெரியாது. ஆனால் உண்மை அதுவே! கதையை திரைக்கதையாக்கவும், வசனம் எழுதவும்தான் பிறர் உதவியை நாடினார்கள். காரணம் வசனமெழுதப் போதிய தமிழ் அறிவு, அனுபவம் இல்லாமைதான்'' என்கிறார் ரேவதி.

'உறவு' என்ற கதையை இயக்கியிருப்பவர் குஷ்பு. விவாகரத்தான ஒருத்தி, தன் மகளை வளர்க்கிறாள். ஆனால், மகளோ, விவாகரத்துக்கு அம்மாதான் காரணம் என்று குறைசொல்லிக் கொண்டே இருக்கிறாள். இறுதியில் அம்மா மீது தவறில்லை என உணர்ந்து, வருந்துகிறாள்.

''ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் நான் படித்த ஒரு ஆங்கில நாவலின் கிளைமாக்ஸ்தான் இந்தக் கதைக்கு இன்ஸ்பிரேஷன். அம்மா கேரக்டரில் நடிக்க அம்பிகாவைக் கேட்டேன். மறுத்து விட்டார். ஜெயசுதாவின் தேதி ஒத்துவரவில்லை. கடைசியில் நானே நடித்து விட்டேன். நடிப்பு + டைரக்ஷன் இரண்டும் எடுத்துக் கொண்டு ரொம்பவே சிரமப்பட்டேன். ஆனாலும் அதிலும் ஒரு த்ரில் இருந்தது. இனி மேல்... அம்மாடி! வெறும் நடிப்பு போதும் எனக்கு'' என்கிறார் குஷ்பு.

கௌதமி எடுத்துக் கொண்டது பள்ளிக்கூட குழந்தைகள் சப்ஜெக்ட். ஒன்பது வயது - நாலாம் கிளாஸ் பையனுக்கு, சகமாணவி மீது வரும் ஈடுபாடு, அதனால் ஏற்படும் சிறு சிறு சண்டை என்று சுவாரசியமாய்ப் போகிறது கதை. இறுதியில், பையனின் எண்ணங்கள் அர்த்தமற்றவை என்பதை

அவனுக்குப் புரியவைக்கிறார் அவனுடைய அப்பா.

"இந்த டைரக்ஷன் ஒர்க்கை நிமிடத்துக்கு நிமிடம் ரொம்ப ரசித்து, அதிலே இன்வால்வ் ஆகிப் பண்ணினேன்'' என்று கௌதமி சொல்லும்போது, முகத்தில் சந்தோஷம்.

ஒரு கணவன். சொந்தக்காலில் நிற்க விரும்பும் வேலைக்குப் போகிற பெண் அவனுக்கு மனைவி. அவர்கள் வாழ்வில் இன்னொரு பெண் குறுக்கிடுகிறாள். அதன் விளைவுகள் என்று சற்றே மேல்மட்டக் குடும்பத்துப் பிரச்னையைச் சொல்வது 'ஆரம்பம்' கதை. இயக்கம் : ஹீரா. ஹீரோயின் ரோலுக்கு மூன்று நான்கு புது முகங்களை டிரை பண்ணி, திருப்தியில்லாமல், இவரே நடித்து விட்டார்.



"டைரக்ஷன் அனுபவம் எப்படி ஹீரா?"

"ஓ! ரொம்ப கஷ்டம். ஆறு நாள் ஷூட்டிங். அறுபது படங்களில் நடித்தாலும், இத்தகைய ஓர் அனுபவம் எனக்குக் கிடைத்திருக்காது!"

கங்கா – இது ரோகிணி இயக்கியுள்ள கதை மட்டுமில்லை. அதிலே அவர் ஏற்று நடித்திருக்கும் கேரக்டர் கூட. எஸ். பி. பாலசுப்ரமணியம் ஓர் எழுத்தாளர். மென்மையான உணர்வுகளை லாகவமாய் எழுத்தில் வடிப்பதில் நிபுணர். ஆனால், நிஜவாழ்க்கையில் ஒரு சிடுமூஞ்சி. அவர் ஒரு கதையில் படைக்கிற கதாபாத்திரம் கங்கா. மாற்றாந்தாய் கொடுமை தாங்காமல் வீட்டை விட்டு சுதந்திரம் தேடி ஓடிப் போகிறாள் கங்கா. அங்கே முடிகிறது சிறுகதை. ஆனால் திரைக்கதை அங்கே முடியவில்லை.

கங்கா, எஸ்.பி.பி.யை சந்திக்க வருகிறாள். எழுத்துக்கு ஒரு முகம்; நிஜத்தில் ஒரு முகம் கொண்ட அவரைச் சாடுகிறாள். "நீ போய் விடு" என்று சத்தம் போடும் எழுத்தாளரை, ''உருவாக்கியது நீங்கள். திடீரென போ என்றால் நான் எங்கே போவேன்?'' என்று மடக்குகிறாள். வாதப் பிரதிவாதங்கள். இறுதியில் சிடுமூஞ்சித்தனத்துக்கு 'முற்றும்' போடுகிறார் எஸ்.பி.பி.

''எஸ்.பி.பி.தான் அந்த கேரக்டரில் நடிக்க வேண்டும் என்று ஆறு மாதம் காத்திருந்து, படம் பிடித்தேன்'' என்று கூறுகிறார் ரோகிணி.

தன்னை மறந்த நிலையில் ஒரு பெண்ணைக் கெடுத்து விடுகிறான் ஓர் இளைஞன். அவனுக்குள் குற்ற உணர்வு. திருமணம் செய்து கொள்ளும் பெண்ணிடம் அதைச் சொல்லிவிட, முதலிரவு முதலே மணவாழ்க்கையில் விரிசல். ஆனாலும் ஒரே வீட்டில் வசிக்கிறார்கள்.

ஒரு மனநோய் மருத்துவமனையில், தான் கெடுத்த பெண்ணைப் பார்க்கிறான் அந்த இளைஞன். அவளைத் தன் வீட்டுக்கே அழைத்து வந்து வைத்து, பூவாய் பாதுகாக்கிறான். செய்த தவறுக்கு வருந்துவதோடின்றி, பாதிக்கப்பட்ட பெண்ணையும் குழந்தையாய்ப் பராமரிப்பது கண்டு, அவன் மீது கொண்ட வெறுப்பை விட்டொழிக்கிறாள் மனைவி.

அந்த மனநலமில்லாத பெண்ணை, இருவரும் குழந்தையாய் ஏற்றுக் கொள்கிறார்கள். இது 'நிறங்கள்' என்ற அர்ச்சனாவின் கதை.

"தேசிய விருது வாங்குமளவுக்கு என்னை நடிக்க வைத்த டைரக்டர்கள், எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார்கள் என இந்த டைரக்ஷன் அனுபவம் எனக்கு உணர்த்தியது'' என்கிறார் அர்ச்சனா.

பாரதிக்கு ஒரு விழா

வி.கே.

வாழ்க்கையில் நான் ஏதாவது ஒரு நல்ல செயல் செய்ததற்காக இன்றளவும் பெருமிதம் கொள்கிறேனென்றால், அது, எட்டையபுரத்தில் கலைஞர்களைக் கொண்டு பாரதி விழா ஒன்று நடத்தியதற்காகத்தான்.

எட்டையபுரத்தில் பாரதிக்கு மணி மண்டபம் எழுப்பினார், பேராசிரியர் கல்கி. அந்த மண்டபத்தில், தமிழ்நாடே வியக்கும் வண்ணம் மகாகவிக்கு ஒரு விழா எடுக்க வேண்டும் என்று நானும் ஏ.பி.என்னும் தீர்மானித்தது மிகத் தற்செயலாகத்தான்.


• பாரதி மணி மண்டபம்

சிறு வயதிலிருந்தே நாடக கம்பெனிகளில் வளர்ந்தவர்களாதலால் எங்களுக்கு தேசிய உணர்வும் தேசியப் பாடல்களின் மீது அபரிதமிதமான காதலும் இருந்தது இயல்பான விஷயம்தான். ஆனால் பாரதியின் மீது எனக்கு ஏற்பட்ட பக்தி என்பது அவரை ஒரு தேசியக்கவியாக மட்டும் நோக்கியதால் விளைந்தது அல்ல. அவரது துணிச்சலும், அவரது பாடல்களில் இருக்கிற அழுத்தமும் வேகமும் அர்த்த புஷ்டியும் படிக்கப் படிக்கக் கிரங்கச் செய்பவை! 'ஜெயபேரிகை கொட்டடா, கொட்டடா' என்று நாடக மேடைகளில் முழங்குகிறபோது, ரத்தத்தில் புத்துணர்வு பாய்வது போலிருக்கும்!

அப்போதெல்லாம் நான், ஏ.பி.என், டைரக்டர் சோமு, விஜயரங்கம், கோபால், கே.வி. மகாதேவன் எல்லோரும் தினமும் கூடி மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்போம். சினிமா தவிரவும் எங்களுக்குப் பல விஷயங்களில் ஆர்வம் இருந்தது. கலை, இலக்கியம் அரசியல் இந்த மாதிரி. ஏ.பி.என், ம.பொ.சி தொடங்கிய தமிழரசுக் கழகத்தில் உறுப்பினராகவே இருந்தார். ஆகவே இலக்கியவாதிகள், அரசியல்வாதிகளின் தொடர்பு, நெருக்கம் எங்களுக்கு மிக அதிகம்!

அப்படியொரு நாள் நாங்கள் கூடி என்னென்னவோ விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோதுதான் திடீரென்று ஏ.பி.என் சொன்னார்: "நாம் ஏன் எட்டையபுரத்தில் பாரதி விழா நடத்தக் கூடாது?"

பாரதிக்கு விழா எடுப்பதில் எங்களில் யாருக்கும் இரண்டாவது அபிப்பிராயம் கிடையாது. ஆனால் பணம்?

எதைச் செய்தாலும் மாநிலமே வியக்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை. அப்படி சிறப்பாக விழா நடத்த வேண்டுமென்றால் நிறையப் பணம் வேண்டும். எப்படித் திரட்டுவது என்று கேட்டார்கள்.

நான் சொன்னேன்: "நல்ல காரியம் செய்வது என்று முடிவு செய்துவிட்டால் காசு பற்றிக் கவலைப்படக் கூடாது. ஆரம்பித்து விடுவோம். எப்படியும் பணம் திரட்டி விடலாம்!"

நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். வி.கே.ஆர் - ஏ.பி.என் யூனிட் என்றால் அந்நாளில் திரையுலகில் ஒரு பெரும் மரியாதை உண்டு. நாங்


• ம.பொ.சி

தேரோட்டம் - 29

ராமசாமி

கள் கேட்டால் எந்தவித உதவியும் செய்யத் திரையுலகமே தயாராக இருந்தது.

படமெடுக்க உதவுபவர்கள் இந்த விழா எடுக்கவும் உதவுவார்கள் என்று நான் உறுதியாக நம்பினேன்.

உடனே வேலையைத் தொடங்கினோம். நானும் ஏ.பி.என்னும் பிற நண்பர்களுடன் பல பெரிய மனிதர்களை நேரில் சென்று சந்தித்து, பாரதி விழாவுக்கு உதவக் கோரினோம்.

எஸ்.எஸ்.வாசன், காமராஜர், சி. சுப்ர மணியம், பக்தவச்சலம், சிவாஜிகணேசன் என்று நாங்கள் சந்தித்த அத்தனை பேரும் விழா சிறப்பாக நடைபெற எல்லாவித உதவி களும் செய்வதாக வாக்களித்தார்கள்!

இதில் ம.பொ.சி.யின் பங்கு கணிசமானது! ஆரம்பித்தது நாங்கள்தான் என்றாலும் அந்த பாரதி விழா சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிகழ்ச்சியாக நடந்தேறியதற்கு மூல காரணம் ம.பொ.சி அவர்கள்தான்!

எட்டையபுரத்தில் விழா. சென்னை யிலிருந்து கலைஞர்களை ஏற்றிக் கொண்டு நூறு கார்கள் புறப்பட்டன.

அந்தக் காட்சியை இப்போது நினைத் தாலும் சிலிர்க்கிறது! பாண்டிபஜாரிலிருந்து அதிகாலை புறப்பட்டது அந்த கார் ஊர்வலம். ஒன்றன்பின் ஒன்றாக நூறு கார்கள் எங்கே படை எடுக்கின்றன என்று வழியில் பார்த் தவர்களெல்லாம் வியந்து நிற்க, 'இருட்டிய வேளையில் நாங்கள் மதுரை தாண்டி யிருந்தோம்.

நல்ல இருட்டு. சொல்லி வைத்தாற்போல நூறு கார்களும் விருதுநகர்ச் சாலையில் ஹெட் லைட்டுகளைப் போட, அந்தச் சாலையே ஒளிப் பிழம்பானது!

விருதுநகர் என் சொந்த ஊரல்லவா? தவிர நான் முன்பே அந்த ஊர் சேர்மன் வேம்பார் நாடார் என்பவருக்குத் தகவல் கொடுத் திருந்ததால் ஊரே திரண்டு வந்து எங்களை வரவேற்றது!

"சுமார் இரண்டாயிரம் பேருக்கு சாப்பாடு ஏற்பாடு செய்யுங்கள்" என்று நான் போனில் சொல்லியிருந்தேன்.

"இது என்ன பிரமாதம்! ஜமாய்த்து விட லாம்" என்று அவர் சொன்னபோது எனக்கும் பெரிய வியப்பு ஏதுமில்லை. அவர் செய்து விடக் கூடியவர்தான்.

ஆனால் அவர் ஏற்பாடு செய்திருந்ததை நேரில் பார்த்தபோது மயக்கம் வராத குறை.

ஊரையே அடைத்துப் பெரிய பந்தல் போட்டு, பாரதி பக்தர்களுக்கு மாபெரும் விருந்து ஏற்பாடு செய்திருந்தார். சைவம், அசைவம் என தனித்தனியான பிரிவுகள்.

வந்திருந்த கலைஞர்கள் பிரமித்துப் போய் நிற்குமளவுக்கு உபசாரங்கள், ஏற்பாடுகள்!

டி.கே. சண்முகம் அண்ணாச்சி சொன் னார்: "ஏம்பா ராமசாமி! எது வெஜிடேரியன், எது நான் வெஜிடேரியன்னே புரியலை. எதைச் சாப்பிடறதுன்னு ஒரே குழப்பமா இருக்கு. இத்தனை ஐட்டங்களா?"

அவரது பிரமிப்பு காரணமில்லாததில்லை. வேம்பார் நாடாரின் ஏற்பாடுகள் அப்படி!

விருதுநகரில் நாங்கள் சாப்பிடுகிற நேரம் மட்டும்தான் தங்கினோம். உடனே புறப் பட்டு விட்டோம்.



இரவெல்லாம் பயணம் செய்து, மறுநாள் அதிகாலை எட்டையபுரத்தை அடைந்தோம்.


இரண்டு நாள் விழாவில் இல்லாத கோலாகலம் இல்லை! எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

ஒரு கவிஞனுக்கு இன்று விழா எடுத்தால்



''ஸாரிங்க! எவ்வளவோ ட்ரை பண்ணியும் விபத்துல அடிபட்ட அந்த ஆளைப் பிழைக்க வைக்க முடியலை!''

''கஷ்டகாலம்! பிழைக்க வைக்கவா இவ்வளவு நேரம் முயற்சி பண்ணிக்கிட்டிருந் தீங்க! நாங்க அவரைப் போஸ்ட்மார்ட்டத்துக்குன்னு எடுத்துக்கிட்டு வந்தோம்!''



''ஸாரி சார்! தவிர்க்க முடியாத காரணங்களால போன வாரம் நடந்த உங்க பெண் கல்யாணத்துக்கு என்னால வர முடியலை!''

''பரவாயில்லைங்க! மொய் அக்கவுண்டை இன்னும் முடிக்காமத்தான் வச்சிருக்கேன்!''

— மேல்மங்கலம் பத்ரா

சுமார் நூறு பேர் கூடுவார்களா? அட ஆயிரம் பேர் என்றுதான் வைத்துக் கொள்வோமே!

ஆனால் அன்று நாங்கள் நடத்திய பாரதி விழாவுக்குக் கூடிய கூட்டம் என்ன தெரியுமா? சுமார் ஒன்றரை லட்சம் பேர்!

விழாத் தொடக்கத்தில் காருக்குறிச்சி அருணாசலம் நாதஸ்வரத்தில் பாரதி பாடல்களை இசைத்தபோது அத்தனை கூட்டமும் அமைதி காத்து ரசித்தது வியப்பான உண்மை! ஒரு சிறு சப்தம்கூடக் கிடையாது!

சிவாஜிகணேசன் வரவேற்க, சி. சுப்ரமணியம் கொடியேற்ற, அன்றைய முதல்வர் காமராஜ் அவர்கள் தொடங்கி வைத்துப் பேச, டி.கே. சண்முகம் அண்ணாச்சி தொடங்கி ஏராளக் கலையுலக வித்தகர்கள் பேசியும் பாடியும் நடித்தும் மக்களை மகிழ்வித்தார்கள்.

சிவாஜி பாரதி வேஷம் போட்டு அன்று நடத்திய நாடகம் இன்றும் என் கண்களில் நிற்கிறது.

வ.உ.சி. நாடகத்தில் நான் விஞ்ச் துரை வேடம் ஏற்று, "நாட்டில் எங்கும் சுதந்தர வாஞ்சையை நாட்டினாய் கனல் மூட்டினாய்!" என்று பாரதியின் வ.உ.சி- விஞ்ச் உரையாடலைப் பேசி நடித்தபோது கரகோஷம் விண்ணைத் தொட்டது!



சே, என்ன மனுஷங்கப்பா!

முதல்நாள் விழாவில் அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் கலந்து கொள்ள, மறுநாள் நடந்த விழா முழுக்க முழுக்க இலக்கிய விழாவாக நடந்தது.

மு. வரதராசனார் தொடங்கி, ம.பொ.சி, கி.வா. ஜகன்னாதன், பேராசிரியர் சீனிவாசராகவன், ப. ஜீவானந்தம், சின்ன அண்ணாமலை, புத்தனேரி சுப்ரமணியம் என்று ஏராளமான இலக்கியவாதிகள் பாரதியின் பல்வேறு கலைமுகங்களை அலசி ஆராய்ந்தார்கள்.

சினிமாக்காரர்கள் வெறும் வியாபாரிகள் என்று எண்ணிக் கொண்டிருந்த பலர் அன்று தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டார்கள் என்றால் அது மிகையில்லை.

மகாகவிக்கு, அவர் பிறந்த மண்ணில் விழா எடுக்க தமிழ்த் திரையுலகமே திரண்டு வந்து உழைத்ததைப் பார்த்து, வந்திருந்த அத்தனை மக்களும் வியந்து போனார்கள்!

அன்றைய தினத்தில் (1958) அந்த விழாவுக்கு ரூபாய் இரண்டு லட்சம் செலவானது!

நானும் ஏ.பி.என்னும் கணிசமான தொகையை ஏற்க, மீதியை அன்பர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றே விழா நடத்தினோம்.

அந்த பாரதி விழாவில்தான் முதல்முதலாக சென்னை மாகாணத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டும் என்கிற கோரிக்கையும் தீர்மானமும் எழுந்தது!

அப்போது அது நடைபெறாமல் போனாலும் பின்னால் அண்ணா காலத்தில் அது நிறைவேறியது!

(அடுத்தவாரம் வரை தேர் ஓடும்)

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்

உளன் கண்டாய் நல் நெஞ்சே! உத்தமன்
என்றும்
உளன் கண்டாய், உள்ளுவார் உள்ளத்து-
உளன் கண்டாய்,
வெள்ளத்தில் உள்ளானும், வேங்கடத்து
மேயானும்
உள்ளத்தில் உள்ளான் என்று ஓர்!

ஹே நெஞ்சமே! உனக்குள் அவன் இருப்பதைப் போலவே சர்வ சராசரங்களிலும் அவன் இருப்பதை நீ கண்டாய் அல்லவா...? அதனால், அவனுக்குத் தெரியாமல் நாம் ஒன்று பண்ண முடியுமா?

ஒருத்தர் 'ஏகாந்தமாக இருக்கேன்...' என்கிறார். 'ஒருத்தரும் என்னைப் பார்க்க முடியாது; கதவைச் சாத்திக் கொண்டு ஏகாந்தமாய் இருக்கிறேன்' என்கிறார்.

ஆனால் சாஸ்திர ரீதியாக ஏகாந்தம் என்பதே கிடையாது! ஏகாந்தம் என்றாலே பதினான்கு பேர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! இதற்கு ஏகாந்தம் என்று என்ன பெயர்!

'ஏகாந்தம் என்றால் பதினாலு பேரா...?' என நீங்கள் கேட்பீர்கள்.

எட்டு திக்குகள் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

மேலே இருக்கும்படியான அந்தரிக்ஷம் பார்த்துக் கொண்டிருக்கிறது; பூமாதா பார்த்துக் கொண்டிருக்கிறாள். கோமாதா பார்த்துக் கொண்டிருக்கிறாள். இதற்கெல்லாம் அதிஷ்டான தேவதை பார்த்துக் கொண்டிருக்கிறது; பகவான் பார்த்துக் கொண்டிருக்கிறான்... இத்தனை தேவதைகளை மறைத்து நம்மால் 'ஏகாந்தமாக' இருக்க முடியாது!

ரொம்ப முக்கியம்.... யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம்... சர்வ சாக்ஷியாய், மனத்திலேயே உட்கார்ந்திருக்கிறானே அவன்! அவனுக்குத் தெரியாமல் எதையுமே நாம் நினைக்க முடியாது. இதற்கு உதாரணமாகச் சொல்வதானால் அர்ஜுனனுடைய தேர்த்தட்டைத்தான் சொல்லலாம்.


அர்ஜுனன் என்ன செய்தான்...? அஸ்திர சன்னியாஸம் பண்ணி, எல்லாவற்றையும் உதறி விட்டுப் போய் உட்கார்ந்து விட்டான்.

"இப்படிப் போய் உட்காருகிறாயே. நீ ஏகமாகப் பேசினாய்? உனக்கு அந்தப் பெயர், இந்தப் பெயர் என்று சொன்னாயே...? விஜயன் என்றொரு பெயர் உனக்கு நிலைக்குமா...?" - பகவான் கேட்கிறார்.

அதற்கு அவன் சொல்கிறான். "ஹே கிருஷ்ணா! அந்தப் பெயரே எனக்கு வேண்டாம்."

பகவான் திருப்பிக் கேட்கிறான்.

"விஜயன் என்ற



ஸ்ரீ பத்மவாசன்

ர்யார்



பெயர் இல்லாவிட்டால் நீ ஜெயிப்பாயாடா...?"

"விஜயன் என்கிற பெயரும் வேண்டாம்; நான் ஜெயிக்கவும் வேண்டாம்!"

"விஜயம் இல்லாவிட்டால் ராஜ்யம் எங்கேயிருந்து கிடைக்கும்? அந்த சுகத்தை நீ விரும்பவில்லையா...?"

"சுகத்தையும் நான் விரும்பவில்லை..."

பகவான் அவனை வெறுமனே விடாமல் தொடர்ந்து கேட்கிறார் : "நீ அப்படிச் சொன்னால் ஆயிற்றா? உன் கூடப் பிறந்த சகோதரர்கள் ஒத்துக் கொள்வார்களா...?"

"எங்களுக்குள் அபிப்பிராய பேதம் கிடையாது..."

"ஹ்ருதயத்தில் கை வைத்துச் சொல்... அது உண்மையா...?" என்று பகவான் கேட்கிறான்.

அதற்கு அர்ஜுனன் சொல்கிறான் : "அதை நான் சொல்லித்தான் நீ தெரிந்து கொள்ள வேண்டுமா? நீ என்ன அவ்வளவு அஞ்ஞானியா...? என் மனத்தினுள்ளேயும் இருப்பவன் அல்லவா நீ...?"

16 குறையொன்றுமில்லை

— இந்த நிகழ்ச்சியை நான் முன்பே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். எவ்வளவு தடவை சொன்னாலும் சுவை குன்றாது இந்தச் சம்பவம்!

கோவிந்த சப்தத்துக்குப் பலவாறு பொருள் சொன்னார்கள், மகான்கள்.

கோ என்றால் இந்த்ரியக் கூட்டம் என்று அர்த்தம். இந்த்ரியக் கூட்டத்துக்குத் தலைவன் மனம்.

அதிலே உட்கார்ந்திருக்கிறான் கோவிந்தன். அதாவது - மனத்திலே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பவன் கோவிந்தன். ஆகவே அர்ஜுனன் கேட்ட கேள்வி சரிதானே!

ஆகையினால், சர்வலோக சரண்யன் - வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கிறானே... அவன்தான் உன் உள்ளத்திலும் இருக்கிறான் என்பதை அறியாயோ?

சாக்ஷி சர்வத்ர கேசவ : விஷ்ணு :

அவன் யாரென்றால் சர்வத்துக்கும் சாக்ஷியாக இருப்பவன் என்று அந்தத் திருநாமத்துக்கு ஒரு வியாக்யானம். அவனுக்குத் தெரியாமல் ஒரு காரியம் நாம் பண்ண முடியாது.

பகவானுக்கு எத்தனையோ குணங்கள். அதிலே சர்வக்ஞத்துவம் என்றொரு குணம்.

வைகுண்டத்திலே இருக்கிற அவன் ஒருத்தனுக்குத்தான் அந்தக் குணமா...? என்று கேட்கலாம்.

நம் மனத்தில் உட்கார்ந்திருக்கிறானே அவனும் சர்வக்ஞன்தான்.

அவதார காலத்திலும் அவன் சர்வக்ஞன் தான்! போடுகிற வேஷத்துக்கு ஏற்றாற்போல அவனுடைய நடை, உடை, பாவனை இருந்தாலும் அவனுடைய சர்வக்ஞத்துவம் - எல்லாவற்றையும் உணர்கிற உயர்ந்த குணம் இருக்கிறதே - அது எப்போதும் இருக்கும்.

இங்கே ஒரு விஷயம் - 'சர்வக்ஞன் என்



அருள்வாக்கு

ஹார்மோனியத்திலும், நாயனத்திலும், புல்லாங்குழலிலும் காற்றை பல விதமாக அளவுபடுத்திச் சில இடைவெளிகளால் விடுகிறதால் தானே சப்தம் உண்டாகிறது? நம் தொண்டையிலும் அப்படிப்பட்ட அமைப்பு இருக்கிறது. தொண்டை மட்டுமில்லை. நாபிக்குக் கீழே மூலாதார ஸ்தானத்திலிருந்து, சுவாஸம் என்கிற காற்றின் கதியைப் பல தினுசில் அளவு படுத்திக் கொண்டு வருவதால் தான் நாம் பேசவும் பாடவும் முடிகிறது. பகவான் பண்ணின இந்த மநுஷ்ய வாத்யம், ஹார்மோனியம், நாயனம் முதலியவற்றைவிட சிரேஷ்டமானது. எப்படியென்றால், அவற்றில் வெறும் ஒலிகளை மட்டுந்தான் எழுப்ப முடியும். அ, க,ச,ட மாதிரியான அக்ஷரங்களை எழுப்பமுடியாது. மநுஷ்யனுக்கு மட்டுமே இந்தத் திறமை இருக்கிறது. மிருகங்களும் கூட ஏதாவது ஓரிரண்டு விதமான சப்தங்களைத் தான் போட முடிகிறதே தவிர, இப்படி இத்தனை ஆயிரம் அக்ஷரங்களை எழுப்ப முடியாது.

மநுஷ்யனுக்கு மட்டுமே இந்த ஆற்றலை ஈச்வரன் தந்திருக்கிறான் என்பதாலேயே அதன் முக்யத்வத்தை அறியலாம். இவ்வளவு முக்யமான ஒன்று, இப்போது நாம் பண்ணுகிற மாதிரி வித்தாப் பேச்சில், அரட்டையில் வீணாகக் கூடாது. இதை வைத்துக் கொண்டு வேத சக்திகளைப் பிடிக்க வேண்டும்; உலக நலனை உண்டாக்க வேண்டும்; நம் ஆத்மாவை உயர்த்திக் கொள்ள வேண்டும். இந்த மூன்று காரியங்களையும் செய்யும் சப்தங்களாகத்தான் வேத மந்திரங்களை ரிஷிகள் பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் புரிந்துகொண்டால் உச்சாரணத்

றால் எல்லாவற்றையும் உணர்ந்தவன் பரமாத்மா என்கிறது... பகவானுக்கு எல்லாம் தெரியும் என்றால் அவன் செத்துப்போய் அவன் பார்த்திருக்கிறானா...?' – இப்படி ஒருத்தர் கேட்கிறார்.

'அதை அவன் பார்த்தது கிடையாதே!' என்று குயுக்தியாய் விவாதம் பண்ணுகிறார்.

'எல்லாம் தெரிந்த நிலைதானே சர்வக்ஞத்துவம். அவன் செத்துப் போனதை அவன் பார்க்காததனாலே அவனுக்குச் சர்வக்ஞத்துவம் சித்திக்காது...' என்கிறார்.

சாஸ்திர ரீதியாகவே இந்த விவாதம் செல்லாது. எது அவனுக்கு இல்லையோ, அதை அடிப்படையாக வைத்து 'இது தெரியுமா?' என்று கேட்பது உசிதமாகுமோ...?

பகவானுக்கு மரணம் என்பதாக ஒன்று உண்டா...? சாந்தோக்ய உபநிஷத் சொல்கிறது: அவனிடத்திலே பாவம் கிடையாது; அவனுக்கு ம்ருத்யு கிடையாது; ஜுரம் கிடையாது; நம்மைப் போன்ற வியாதியெல்லாம் அவனுக்குக் கிடையாது.'

சத்ய காம : சத்ய சங்கல்ப : அவன் எடுத்த காரியத்தை நிறைவேற்றுவான். அவனுடைய ஞானம் எப்போதும் பழுதுபடுவதில்லை. அவனுடைய சங்கல்பம் பழுதுபடுவதில்லை. அவனுக்கு மரண பயம் கிடையாது...

இல்லாததை ஏறிட்டு, அவன் செத்துப் போவதைப் பார்த்திருக்கிறானா என்று கேட்கலாமா...?

'சாஸ்திர ரீதியாக எவை எவை உண்டோ அவை மொத்தத்தையும் உணர்ந்தவன் பரமாத்மா' என்றுதான் பொருளேயொழிய, இல்லாததைச் சொல்லவில்லை.

'எது உண்டோ அதைக் கட்டாயம் உணர்ந்தவன்' என்றுதான் சர்வக்ஞத்துக்கு விளக்கம் சொன்னார்கள் பெரியவர்கள்.

அந்த சர்வக்ஞத்துவம் அவனுக்கு மட்டுமே உரிய குணம். நாம் இருக்கிறோமே... நமக்கு அந்த குணம் பொருந்தாது. ஏனென்றால், ஜீவாத்மாவானது சங்கோச விகாசங்களுக்கு உட்பட்டது. – ஒருநாள் மூடிக் கொள்ளும்; இன்னொரு நாள் விகசிக்கும்!

ஒருநாள் உபன்யாசத்தில் முழுக்க முழுக்க வேதாந்த விஷயமே சொல்லப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். கதையே கிடையாது. வியாப்தி அவ்வியாப்தி என்று இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறோமே... அது போல புத்திக்கு அதிகமாக வேலை தரும் விஷயங்களே வருகின்றன. புத்தியைப் போட்டு வருத்தி, சிரமப்பட்டு...

உபன்யாசத்தில் இப்படி இதைச் சொல்வதும் ரொம்ப கஷ்டம்; சொல்பவருக்கே, 'பொழுது இன்னும் வேகமாக நகராதா?' என்று தோன்றிப் போகும்.

ஆனால், எதிரே இருப்பவர்கள் அப்படி நினைக்கவில்லை.... ஏன்...? அன்றைக்கு அவர்களுக்கு புத்தி அப்படி விகசித்து இருக்கிறது. பெரிய பெரிய விஷயங்களையெல்லாம் சுலபமாக கிரஹிக்கிறது. அதனால், இன்னும் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்று

துக்கே இத்தனை மதிப்புக் கொடுத்து சிக்ஷா சாஸ்திரம் என்ற ஒன்று ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பது புரியும். அதிலே ரொம்பவும் நுணுக்கமாக (மைன்யூட்டாக), இன்றைய பாஷா சாஸ்திர நிபுணர்களும் ஸயன்டிஸ்ட்களும் கூட ஆச்சரியப்படும்படியாக, அடிவயிற்றிலிருந்து ஆரம்பித்து இன்னின்ன மாதிரிக் காற்று புரளும்படியாகப் பண்ணி, அது இன்னின்ன இடத்திலே பட்டு, வாய்வழியாக இப்படியிப்படி வர வேண்டும் என்று அக்ஷரங்களை அப்பழுக்கில்லாமல், (அக்யூரேட்டாக) நிர்ணயம் பண்ணிக் கொடுத்திருக்கிறது.

காற்றானது இப்படி நமக்குள்ளே பல விதமாகச் செல்கிறபோது அதுவும் ஒரு தினுசில் யோக சாஸ்திரமாகவே ஆகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அவர்கள் நினைக்கிறார்கள்.

இதுவே நாளைக்கு வந்து உட்கார்ந்தால்.... அத்தனையும் கதையாகச் சொல்கிறேன் என்றே வைத்துக் கொள்வோம். உடனே எல்லோரும், 'அடாடா! நேற்று எவ்வளவு நன்றாகயிருந்தது! இன்றைக்கு வெறும் கதையாகவே சொல்லிக் கொண்டு போகிறாரோ... இந்தக் கதையை யார் கேட்டார்கள்! கதை தெரியாதா நமக்கு? நேற்று மாதிரி வேதாந்த விஷயங்கள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்... ஒருநாள் இப்படி வீணாகப் போய்விட்டதே...' என்கிறார்கள்!

இன்னொரு நாள் பார்த்தால்... 'வேதாந்த விஷயமே சொல்கிறாரே! கதை சொன்னால் நன்றாயிருக்குமே... என்று தோன்றுகிறது. இப்படி நமது புத்தி ஒருநாள் பெரிய விஷயத்தை கிரஹிக்கிறது. ஒருநாள் சின்ன விஷயமே போதும் என்கிறது!

இப்படியெல்லாம் நமது ஞானம் மாறுபடுவது ஏன்...?

த்ருகுணாத்மகமான ப்ரக்ருதியிலே நாம் உட்கார்ந்திருக்கிறோம். அதாவது பிறப்பு எடுத்து உள்ளோம். இதிலே நாம் ஆகாரத்துக்குக் கட்டுப்பட்டவர்களாக வேறு இருக்கிறோம்.

இன்றைக்கு வேதாந்த விஷயம் பிடிக்கிறது என்று சொன்னால், மத்தியானம் என்ன சாப்பிட்டோம் என்று பார்க்க வேண்டும். சாப்பிட்ட உணவைப் பொருத்தே வேதாந்த விஷயம் பிடிக்கும்.

மத்தியானம் நாம் வேறான விஷயத்தைச் சாப்பிட்டிருந்தோமானால் வேதாந்த விஷயம் பிடிக்காது!

ஆகையினால்தான் சாஸ்திரம் சொல்கிறது. இங்கே ஆகாரத்தினாலே சத்து குணத்தை விருத்தி பண்ணிக் கொள்ள வேண்டும். சாத்விக குணம் நம்மிடத்தில் இருந்தால்தான் உயர்ந்த விஷயங்களை உட்கொள்ளும் படியான சக்தி உண்டாகும். தமோ குணம் ரஜோ குணமுடைய பதார்த்தங்களைச் சாப்பிட்டால் தூக்கமாக வரும்! நல்ல விஷயங்களைக் காது கொண்டு கேட்க முடியாத நிலையில் அவஸ்தைப்படுவோம். அதுவும் உபன்யாசத்துக்கு வந்துவிட்டால் அங்கே தூக்கம் கட்டாயம் வரும்!

ஜேஷ்டா, கனிஷ்டா என்று இரண்டு பேர். அக்கா தங்கைகள். அக்கா யாரென்றால் மூதேவி. தங்கை யாரு...? ஸ்ரீதேவி. இவர்கள் இரண்டு பேரும் கூப்பிடாமலே வந்து உபந்யாஸத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

சரியான தருணத்துக்குக் காத்திருக்கிறார்கள். எதற்குக் காத்திருக்கிறார்கள் என்று அடுத்த வாரம் சொல்கிறேன்.

(தொடரும்)



அப்படிப் போடு!

■ *சந்திப்பு:* **ஔரங்கசீப்**

போன மாதம் தேசிய விருது. இந்த மாதம் பிலிம்பேர் விருது என்று மாதப் பத்திரிகை மாதிரி மாதா மாதம் விருது வாங்கிக் கொண்டிருக்கிறார் ஒருபுறம். இன்னொருபுறம் அவ்வை சண்முகியின் இந்திப் பதிப்பிற்கான தீவிர வேலைகள். நடுவில் திரையுலக ஸ்டிரைக் வந்துவிட, அடுத்து (நிச்சயமாக) ஆரம்பித்து விடப் போகும் மருதநாயகத்துக்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகள்.

"கொஞ்ச நாளா எந்தப் பத்திரிகைக்கும் இண்டர்வியூ தர்றதில்லை. குமுதத்துல கேட்டபோது கூட, 'பேச நேரமில்லை; எழுதித் தந்துடறேன்'னுதான் சொன்னேன். சுமார் மூணு மாசம் கழிச்சி உங்களுக்குத்தான் முதல் பேட்டி!" என்றார் கமல்.

நடுநடுவே கூப்பிட்ட போன் கால்கள், திடீரென்று சினி ஆர்ட்டிஸ்ட் யூனியன் தொடர்பாகப் பேச வந்து விட்ட பாரதி ராஜாவுடன் அரை மணி நேரம் என்று சிற்சில தடங்கல்களுக்கு அவ்வப்போது வருந்திவிட்டு, சுமார் இரண்டு மணி நேரம் நம்முடன் மனம் விட்டுப் பேசினார். தர்மசங்கடமான கேள்விகளுக்கும் பொறுமையோடு பதில் சொன்னார். பேட்டியிலிருந்து :

கேள்வி *: சிறு சிறு நிறுவனங்கள் தரும் விருதுகளிலிருந்து, பெரும் பத்திரிகைகள் தரும் விருதுகளிலிருந்து, தேசிய விருது வரை வருஷம் பூரா வாங்கி அடுக்கிக் கொண்டே இருக்கிறீர்*



இயக்குநர்களுடன் எனக்கென்ன தகராறு!



கள். இவை உங்களை Influence செய்கின்றனவா?

கமல் : விருதுகள் என்னை எவ்வகையிலும் இன்ஃப்ளுயன்ஸ் பண்ணுவதில்லை என்பது தான் உண்மை. ஆனால் அது ஒரு மரியாதை. ஒருவிதமான கைதட்டல். ரசிகர்களின் பாராட்டிலேயே வெவ்வேறு வகைகள் உண்டு. சிலர் தியேட்டரில் உணர்ச்சிவசப்பட்டு கைதட்டுவார்கள். சிலர் உரக்க விஸில் அடிப்பார்கள். இன்னும் சிலர் மகிழ்ச்சியை வெறும் புன்னகையாலேயே வெளிக்காட்டுவார்கள். இதுதான் எங்களுக்கு உண்மையான பாராட்டு. விருது என்பது, ஒரு பன்னிரெண்டு பேர் கொண்ட உயர்மட்டக்குழு கூடி உட்கார்ந்து ஆலோசித்து, 'இவன் நடிப்பு நன்றாக இருக்கிறது' என்று தருகிற சர்ட்டிபிகேட். இதுவும் ஒரு பாராட்டுதான். இதுவும் வேண்டித்தான் இருக்கிறது. ஏனென்றால், நடிகன் என்கிற மிருகத்துக்கு இந்த முன் வரிசைக்காரர்கள், பின் வரிசைக்காரர்களின் பாராட்டுத் தான் இரை. மாட்டுக்குத் தவிடு போடுவது போல. இது அத்தியாவசியமானது.

கல்கி : விருதை, 'உயர்மட்டக் குழுவின் பாராட்டு' என்று மட்டும் பார்க்கிறீர்கள். ஆனால் ஆஸ்கார் விருதுதான் உங்கள் லட்சியம் என்பது போல் உங்களின் ஒவ்வொரு படம் வெளியாகும் போதும் செய்தி வருகிறது. நீங்களும் அதை மறுப்பதில்லை...

கமல் : ஆஸ்கார் விருது வாங்குவதுதான் என் லட்சியம் என்பது பிறரால் சொல்லிச் சொல்லித் திணிக்கப்பட்ட விஷயம். எனக்கு அந்த ஆசை இல்லை. என் இலக்கு அது இல்லை. நிச்சயமாக இல்லை! என் லட்சியம், என் மக்கள் ரசிக்கும்படியான படங்களைக் கொடுப்பது மட்டும்தான்! என் மக்கள் கண்டு ரசித்தது போக மிச்சமிருப்பதை உலகம் கண்டு ரசித்தால் போதும். எனக்கு ஆஸ்கார் மேல் மதிப்பு இல்லை என்று சொன்னால் அது கர்வம். நான் அப்படிச் சொல்ல மாட்டேன். அது அமெரிக்கத்தரம். அது வேறு. கொனாரக் கோவில்களின் அழகை அமெரிக்காவினர் கண்டு ரசித்தால் நன்றி. அவ்வளவுதான். ஆனால் அது இந்தியத் தரம்தானே?

கல்கி : அமெரிக்கத் தரம், ஐரோப்பியத் தரம் என்று கலையை எப்படிப் பிரிக்கிறீர்கள்? அமெரிக்கத் தரம் என்று எதைச் சொல்கிறீர்கள்?

கமல் : நிச்சயம் அமெரிக்கத்தரம் என்று ஒன்று இருக்கிறது. அதைத்தான் அவர்கள் உலகத் தரமாக மாற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கத்தரமும் ஐரோப்பியத்தரமும் கணிசமான மாற்றங்களைக் கொண்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரை ஐரோப்பியப் படங்கள் உள்ளடக்கத்தில் அதிக கனமுள்ளதாக இருக்கின்றன. அமெரிக்கப் படங்கள் முழுக்க முழுக்க வணிகம் சார்ந்தது. வியாபார வெற்றிதான் அவர்களின் முக்கிய இலக்கு. இதில் சில விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை தான். ஆனால் மிகுந்த பொருட்செலவில் ஆரவாரமான நவீன தொழில்நுட்பங்களுடன் தயாராகிற படங்கள்தாம் அநேகம். எனக்கு அமெரிக்கப் படங்கள் மேல் மரியாதை உண்டு. உலக சினிமாவில் அவற்றுக்கும் ஓரிடம் நிச்சயம் உண்டு. ஆனால் அந்த ஓரிடம்தான்! அந்த ஒரு தரம்தான். அந்தத் தரம்தான் உலகத் தரம் என்று அவர்கள் நிர்ணயிப்பதில்தான் நான் முரண்பாடு கொள்கிறேன். பிற உலகப் படங்களை அவர்கள் அந்த அளவுகோல் கொண்டே மதிப்பிடுவதை ஏற்க முடியாது. நம்முடைய சினிமா என்பது கலாசாரம் சார்ந்தது. இங்கே காட்டப்படுகிற அழுகையோ, சிரிப்போ, காதலோ, வீரமோ – நம் கலாசாரத்தின் பிரதிபலிப்பாகத்தான் இருக்க முடியும். ஓர் இறுக்கமான அமெரிக்க கலாசாரத்தின் அடியொற்றி வருகிற படங்கள் மட்டுமே ஆஸ்காருக்குத் தகுதி வாய்ந்தவை என்று நிர்ணயிப்பதை நாம் எப்படி ஏற்க முடியும்?

நான் அமெரிக்க விரோதி அல்ல. வெறும் கலை நேசன். எனக்கு அரசியல் பாஸ்போர்ட்கள் தேவையில்லை. என் கருத்துக்களை சுதந்தரமாகச் சொல்ல எந்தத் தடையும் இல்லை! ஆஸ்கார் குறித்து என் கருத்து இதுதான்! இதைத் தவறு என்று தகுந்த ஆதாரங்களுடன் வேறு யாராவது சுட்டிக்காட்டினால் – அது சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்ள எனக்கு எந்தத் தடையும் இல்லை!



கல்கி : ஆனால் 'நாயகனு'க்குப் பிறகு வந்த உங்கள் படங்களில் – நீங்கள் குறிப்பிடுகிற 'அமெரிக்கத் தரம்' என்பதான தொழில்நுட்பங்களை இங்கே கொண்டு வர முயல்வது வெளிப்படையாகத் தெரிகிறதே? இது, உங்கள் இலக்கு 'அது'தான் என்பதைச் சொல்லாமல் சொல்லவில்லையா?

கமல் : தொழில்நுட்ப வளர்ச்சிகளை ஏற்றுக்கொண்டு பின்பற்றுவது தவறில்லையே? அதையே கலையாக எண்ணிக் கொள்வதுதான் தவறு. என் கலை என்பது எனக்குள்ளிருந்து வருவது. அதைத்தான் நான் நவீன தொழில்நுட்பங்களுடன் கலக்கிறேன். அது அமெரிக்க ரசிகனுக்குப் புரியவில்லை. எப்படி ஒரு அமெரிக்க நடிகனின் நுணுக்கமான வெளிப்பாடுகளை இந்தப் பரமக்குடிக்காரனால் முழுக்கப் புரிந்துகொள்ள முடியவில்லையோ, அப்படி! நான் இப்போது செய்து கொண்டிருப்பது என்னவென்றால், அவர்கள் கலையையும் தொழில்நுட்பத்தையும் எப்படிக் கலக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனிப்பதுதான். அப்படி கவனிக்கும்போது ஒலி, ஒளிக் கலவைகளில் அவர்களின் அசாத்திய முன்னேற்றம் சட்டென்று கண்ணில் படுகிறது. குறிப்பாக 'ஆடியோ'வில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். 'ஆடியோ' என்று நான் குறிப்பிடுவது ஏ.ஆர். ரகுமானின் இசையையும் கார்த்திக் ராஜாவின் இசையையும் மட்டுமல்ல. ஒலித்துல்லியம் என்பது வசனங்களையும் சேர்த்தது! அதற்குத்தான் டி.டி.எஸ். வந்து விட்டதே என்பார்கள். டி.டி.எஸ். வந்து என்ன பிரயோஜனம்? அதைத் துல்லியமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தொழில்நுட்பம் இன்னும் நமக்கும் பூரணமாகக் கிடைக்கவில்லை. நான் இதுகுறித்துத்தான் கவலைப்படுகிறேன். என் வேலை செருப்புத் தைப்பதுதான்

> **“ என் வேலை செருப்புத் தைப்பதுதான் என்றாலும் என் செருப்பு அடுத்தவனால் குறை சொல்ல முடியாத தரத்துடன் இருக்க வேண்டும் என்பது அவசியமல்லவா? ”**

என்றாலும் என் செருப்பு அடுத்தவனால் குறை சொல்ல முடியாத தரத்துடன் இருக்க வேண்டும் என்பது அவசியமல்லவா? இதற்காகத்தான் ஒரு ரிஷி போல் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறேன். நான் ரிஷிதான். பாலசந்தர், பாலுமகேந்திரா, பி.சி. ஸ்ரீராம் எல்லோரும் இதே கவலையுடன் தரத்துக்காக யோசித்துக் கொண்டிருக்கிற ரிஷிகள்தாம்! இது தவம்தான்! இறை நம்பிக்கை உள்ளவர்கள் புரிந்து கொள்வதற்காகத்தான் 'ரிஷி' என்கிற சொல்லை உபயோகிக்கிறேனே தவிர, உயர்பதவி எடுத்துக் கொள்வதற்காக அல்ல!

கல்கி : கமல், நீங்கள் இரண்டு 'எக்ஸ்ட்ரீமு'க்குச் சென்று படங்கள் எடுக்கிறீர்கள். மகாநதி, குணா போல கனமான படங்கள், அபூர்வ சகோதரர்கள், அவ்வை சண்முகி போல கடைந்தெடுத்த மசாலாக்கள். இந்த இரண்டு கமல்களில் நிஜமானவர் யார்?

கமல் : அப்படிச் சொல்வதற்கில்லை. மகாநதியெல்லாம்... நான் 'வாழ்வதற்காக'. அவ்வை சண்முகி, நான் 'இருப்பதற்காக'. சர்வைவல் பிரச்னை அது...

கல்கி : உங்களது பரீட்சார்த்தமான முயற்சிகள் தோல்வியடைவதால்தான் மறுபடி மசாலாக்களுக்கு வந்து விடுகிறீர்களா?

கமல் : ஒரு விஷயத்தை நான் தெளிவு

படுத்தி விடுகிறேன். மகாநதியோ, குணாவோ, குருதிப்புனலோ – வியாபாரரீதியில் தோல்விப் படங்கள் அல்ல! ஒரு டிஸ்ட்ரிப்யூட்டராகவும் இப்போது நான் இறங்கியிருப்பதால் இதை உறுதியாகச் சொல்ல முடியும். திட்டமிட்டு, குறைந்த செலவில் அந்தப் படங்களை எடுத்து விற்றேன். வாங்கியவர்களுக்கு அசலும் வட்டியும் ஒழுங்காகத் திரும்பக் கிடைத்தன. அசலோடு வட்டியும் திரும்பக் கிடைத்தால் அது லாபம்தானே? ஆனால் லாபத்திற்கு மேல் லாபம், அதற்கு மேல் லாபம் வேண்டி, வாங்கியவர்கள் வேறு நபர்களிடம் அதிக விலை வைத்து மீண்டும் விற்கும்போதுதான் சிக்கல்.

அடுத்த விஷயத்துக்கு வருகிறேன். அவ்வை சண்முகி, அபூர்வ சகோதரர்கள் அளவுக்கு மகாநதியும் அதுபோன்ற படங்களும் இமாலய வெற்றி பெற்றவை அல்ல என்பதை நிச்சயம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இந்த மகாநதி வகையறாக்களும் மக்களின் மாபெரும் ஆதர வைப் பெறவில்லையே என்று கோபித்துக் கொண்டுதான் நான் மசாலாக்கள் எடுக்கிறேன் என்பதை ஏற்பதற்கில்லை! ரசிகர்களின் எல்லா தரப்பினரையும் ஒரு கலைஞர் நேசிக்கவில்லை என்றால் கலைக்கு விஸ்வரூபம் கிடைக்காது. குறிப்பிட்ட எந்த ஒரு இன்டலெக்சுவல் குழு வினருக்காகவும் நான் படம் எடுக்கவில்லை. மிகச் சாமானிய ரசிகன் முதல் விருது வழங்கும் முதல் வரிசைக்காரர்கள் வரை அத்தனை பேரையும் நான் திருப்திப்படுத்தியாக வேண் டும். அப்படிச் செய்ததால்தான் சாப்ளின் உலகப் புகழ்பெற்றார். அவரை வெறும் கோமாளி என்று சொல்லி விட முடியுமா?

> **“வால்மீகி ராமாயணத்தைப் பார்த்துத்தானே கம்பரே தமிழில் எழுதினார்? கம்பருக்கு விழா எடுக்கும் போது கமலஹாசனை ஏன் கன்ஸிடர் பண்ணக் கூடாது?”**

கல்கி : ஒரு நடிகன் என்கிற எல்லையைத் தாண்டி, தீவிர படைப்பாளியாக உங்களை அடையாளம் காட்டிக் கொள்கிறீர்கள். அதே சமயம், சடாரென்று டவுட்ஃபயரைத் தழுவி அவ்வை சண்முகியாகத் தமிழில் எடுத்து, அதையே இந்தியிலும் ரீ-மேக் செய்கிறீர்கள். ஒரு நல்ல படைப்பாளிக்கு 'காப்பி' எப்படி பெருமை சேர்க்கும்?

கமல் : It is called reverse engineering. இன்று இந்தியா முழுவதும் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் தவறே இல்லை. வால்மீகி ராமாயணத்தைப் பார்த்துத்தானே கம்பரே தமிழில் எழுதினார்? கம்பருக்கு விழா எடுக்கும் போது கமலஹாசனை ஏன் கன்ஸிடர் பண்ணக் கூடாது? வால்மீகியைப் பார்த்துத் தான் கம்பர் எழுதினார் என்றாலும் அது வேறு, இது வேறு இல்லையா? அது போல்தான் இதுவும். தப்பில்லை. இந்தக் கருத்தும் என் னுடைய ஒரிஜினல் கருத்து இல்லை. டைரக டர் ஏ. ஜெகன்னாதன் சொன்னதைத் தான் நான் சொல்கிறேன். நான் மிகவும் ரசித்த விஷயங்களை என் படங்களில் பிரதிபலிக்கச் செய்வதில் எனக்கு அவமானமில்லை.

கல்கி : உங்களின் ஒவ்வொரு படம் தொடங்கும்போதும் – தொடங்கிய கொஞ்ச நாளில் டைரக்டருக்கும் உங்களுக்கும் தகராறு என்று செய்தி வந்து விடுகிறது. உங்களால் ஏன் இயக்குநர்களுடன் ஒத்துப் போக முடிய வில்லை?

கமல் : ஒரு திருத்தம். இயக்குநர் அல்லாத வருடன்தான் என்னால் ஒத்துப்போக முடிய இல்லை. இயக்குநர்களோடு எனக்கு சுலபமாக ஸிங்கரனைஸ் ஆகும்! உதாரணத்துக்கு பாலசந்தர், மணிரத்னம், ஷங்கர், இன்னும் பலர்

கல்கி : தமிழுக்கு முதல் முறையாக தேசிய விருது வாங்கித் தந்தவர் டைரக்டர் சேது மாதவன். அவர் இயக்குநரில்லையா? நம்மவர் படத்தில் அவருடனேயே உங்களுக்குத் தகராறு என்று....



கமல் : (இடைமறித்து) தகராறு என்று செய்தி பரப்பப்பட்டதே தவிர, தகராறு இல்லை! சேதுமாதவனுடன் இன்றைக்கும் எனக்கு நல்ல உறவு இருக்கிறது; பேசிக் கொண்டுதான் இருக்கிறேன். அந்தப் படத்தைப் பொறுத்தவரை அப்படியொரு வதந்தியைப் பரப்பியது தயாரிப்பாளர்கள்தாம்!

கல்கி : தேவர் மகனிலும் பரதனுக்கு நீங்கள் இடையூறு செய்ததாகவும் நீங்களே படப் பிடிப்பை நடத்தியதாகவும் சொன்னார்கள்?

கமல் : பரதன் என் நண்பர். தேவர் மகனில் நான் அவருக்கு உதவினேன் என்பது உண்மை. அதற்கு வேறு ஒரு காரணம். அதை வெளியே சொல்ல முடியாது. பரதன்தான் இயக்கினார். நானும் கொஞ்சம் செய்தேன். நீங்கள் ஒவ்வொரு படமாகக் குறிப்பிட்டுக் கேட்கலாம்.



நான் மொத்தமாகச் சொல்கிறேன். முதலில இயக்குநர்கள் என்னிடம் ஆலோசனை கேட்பார்கள். சொல்வேன். பின் என்னையே ரகசியமாக செய்து தரச் சொல்வார்கள். அதையும் செய்வேன். எப்படியோ அது வெளியே 'லீக்' ஆகிவிடும். உடனே 'டைரக்டருக்கும் கமலுக்கும் தகராறு. கமலே டைரக்ட் பண்ணுகிறார்' என்று செய்தி வந்து விடும். இதுதான் நடக்கிறது. இதுதான் நிஜம். நல்ல இயக்குநர்களுடன் எப்போதும் நான் ஒத்துப் போகிறவன்தான். அதற்கு முன்பே உதாரணங்களும் சொன்னேன்.

கல்கி : திரைப்பட இயக்கம் சம்பந்தமாக இயக்குநர்களே உங்களிடம் ஆலோசனை கேட்கிறார்கள் என்கிறீர்கள். இந்த கான்ட்ராவர்ஸிகளைத் தவிர்ப்பதற்காகவாவது நீங்களே உங்கள் படங்களை இயக்கிக் கொள்ளலாமே? எதற்கு டைரக்ஷனுக்கென்று ஒரு ஆளைப் போடுகிறீர்கள்?

கமல் : அது ஒரு சௌகர்யம் சார்! கவலைகளை அவர்கள் தலையில் இறக்கி விட்டு, நாம் வேறு ஏதாவது உருப்படியாக யோசிக்கலாமே? எனக்கு கார் ஓட்டத் தெரியும்தான். அதற்காக டிரைவர் இல்லாமல் இல்லையே? நான் ஏன் கார் ஓட்ட வேண்டும்? தெரியும் என்பதாலேயே செய்ய வேண்டும் என்று நினைப்பது சரியல்ல என்று கருதுகிறேன்.

கல்கி : அப்படியொன்றும் நீங்கள் கவலைகளை டைரக்டர் தலையில் இறக்கி விட்டு, சும்மா இருப்பதாகத் தெரியவில்லையே? ஒவ்வொரு படத்திலும் அந்தந்த டைரக்டரின் ஸ்டைல் தெரிவதற்குப் பதில் உங்கள் ஸ்டைல் தானே முழுக்கத் தெரிகிறது?

கமல் : அது... அவர்களையும் மீறி வருகிற விஷயம்.

கல்கி : உங்கள் நடிப்பை மட்டும் குறிப்பிடவில்லை. உதாரணம் சொன்னால் வருத்தப்பட மாட்டீர்களே?

> **“ இயக்குநர் அல்லாதவருடன்தான் என்னால் ஒத்துப்போக முடிவதில்லை. இயக்குநர்களோடு எனக்கு சுலபமாக ஸிங்கரனைஸ் ஆகும்! ”**

கமல் : மாட்டேன், சொல்லுங்கள்.

கல்கி : டைரக்டர் சந்தான பாரதியின் ஸ்டைல் என்ன என்பது எல்லோரும் அறிந்தது. ஆனால் மகாநதி, குணா இவற்றைப் பார்க்கும் போது ஒரு ஃப்ரேமில் கூட அவர் தெரியவில்லையே? முழுக்க முழுக்க அவர் பெயரில் நீங்கள் எடுத்தது போலல்லவா உள்ளது?

கமல் : இல்லை இல்லை.. சந்தான பாரதி விஷயம் வேறு. பாரதி வேறு, நான் வேறு அல்ல. ராஜபார்வை எடுத்தபோது என்கூட உட்கார்ந்து திரைக்கதை எழுதியவர் அவர். பிறகு நிறைய படங்கள் அவர் வெளியாருக்காக டைரக்ட் செய்தாலும் என் எல்லாப் படங்களின் டிஸ்கஷனிலும் இருப்பார்! சொன்னால் நம்ப மாட்டீர்கள். நான் டைரக்ட் செய்யும் மருதநாயகத்துக்கு அவர் உதவி இயக்குநராக இருக்கிறார் தெரியுமா? எந்த டைரக்டருக்கு இந்த மனசு வரும்? நாங்கள் ஒருவருக்குள் ஒருவராக இருப்பவர்கள். ஆகவே என் படங்களை அவர் இயக்கும்போது அதில் என் பாதிப்பு இருக்கவே செய்யும். இதை அவரே ஒப்புக் கொள்வார். இன்னொரு விஷயம், மகாநதியின் கதை என்னுடையது. நீங்கள் அப்படிப் பாருங்களேன்! என் கதைக்கு நானே திரைக்கதை எழுதும்போது யார் டைரக்ட் செய்தாலும் என் ஸ்டைலின் பாதிப்பு வரத்தானே செய்யும்?

கல்கி : டைரக்டர்கள் என்றில்லை. எத்தனை முதல்தரமான கலைஞர்களாக இருந்தாலும் உங்கள் படங்களில் பங்குபெறும்போது மட்டும் அடையாளம் தெரியாமல் போய் விடுகிறபடி உங்கள் டாமினேஷன்தானே பிரகாசமாகத் தெரிகிறது? ஏன் அப்படி?

(மீதி அடுத்த வாரம்)

மேலட்டை வண்ணப்படம், படங்கள்:
பிரவீண்குமார்

■ ஜெயஸ்ரீ ராஜ்

மூவாயிரம் ரூபாய்க்கு கெமிக்கல் டிகிரி!

மீண்டும் கைர்நார்

மும்பை உயர்நீதி மன்றம் பழைய டெபுடி முனிசிபல் கமிஷனர் கைர்நார் மீதிருந்த சஸ்பென்ஷன் ஆர்டரை ரத்து செய்து, அவருக்கு மீண்டும் நாற்காலியை அளித்திருக்கிறது. BMCயில் தலைவிரித்தாடிய ஊழலை எதிர்த்து தைரியமாகக் குரல் கொடுத்தவரின் குரல்வளையை ஒரேடியாக நெறிக்கத்தான் பார்த்தார்கள். ஆனால் முடியவில்லை!

"நான் ஓய மாட்டேன். உலகத்தின் மிகப் பெரிய லஞ்சக் களஞ்சியங்களில் BMCயும் ஒன்று; அதனால் பழைய பதவி மீது எனக்கு மோகமில்லை! இப்போது செய்து வரும் சமூக சேவையே சந்தோஷமாக இருக்கிறது" என்றார் கைர்நார். ஆனால் தீர்ப்பை எதிர்த்து BMC மீண்டும் அப்பீல் செய்யப் போகிறதாம். இப்படி நீதி இன்னும் மூச்சு விட்டுக் கொண்டிருந்தால், அரசு ஊழியர்களுக்கெல்லாம் குளிர் விட்டுப் போய்விடாதா என்ற கவலை ஒருபுறம்! சரத்பவார் அரசுக்கு நேர்ந்த கதி, இந்த அரசுக்கும் நேர்ந்துவிடுமோ என்ற பயம் மறுபுறம்!



• கைர்னார்

மீண்டோர் மாண்டால்?

சமூகக் கலவரங்களில் காணாமல் போனவர்களுக்கு நஷ்டஈடு உண்டா இல்லையா என்ற பெரும் பிரச்னை இப்போது மராத்திய அரசை அலைக்கழிக்கிறது. ஐந்து வருடங்கள் ஓடியும், மும்பைக் கலவரங்களில் தொலைந்துபோன 165 முகங்களுக்கு இன்னு வரை அட்ரசில்லை! 'இவர்கள் திரும்பிவிட்டால பணத்தைத் திருப்பி விடுவோம்' என்று ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கி, தலா இரண்டு லட்சம் வீதம்,



• பால் தாக்கரே



''காப்பில, அதிகமா நுரையோட சாப்பிடறது எனக்குப் பிடிக்கும்னு, என் மனைவிகிட்டே சொன்னது தப்பாப் போச்சு''

''ஏன், என்ன ஆச்சு?''


''இப்போ காப்பில தினம் 'ஷாம்பு' வாசனை வருது...''

- ராதா வாசுதேவன்

இவர்கள் குடும்பத்துக்கு அரசு ஒதுக்க வேண்டியது 32 கோடிகள்! ஒருவர் காணாமல் போனால், ஏழு வருடம்வரை அவர் திரும்பவில்லை என்றால்தான் அவர் 'மாண்டவர்' லிஸ்டில் சேர்க்கப்பட்டு, நஷ்டஈடு பெறத் தகுதியானவராகின்றாராம். அந்த அடிப்படையில் அரசு, இன்னும் இரண்டு வருடங்களுக்கு காற்று வாங்கலாம். ஆனால் தொலைந்தவர்கள் குடும்பங்கள் பல, காற்றுப் போன பலூனாய் வறுமையில் வாடுகின்றன. இந்நிலை நீடித்தால் நஷ்டஈடைப் பெறுவதற்கு யாருமே இல்லாமல் போய்விடுவார்களோ என்ற அவலம். ஒருசமயம் அதுதான் அரசின் இலக்கோ?

(போ)பா (போ)பா ப்ளாக்ஷீப்

தாவூத் இப்ராஹிம் குழுவைச் சார்ந்த புக்கிகள் மூலம், இந்திய கிரிக்கெட் அணியினர் லஞ்சம் வாங்கியிருப்பதை ஒரு மும்பை போலீஸ் அதிகாரி உறுதிப்படுத்தியிருக்கிறார். பிப்ரவரி 16, 1995 அன்று, நேப்பியரில் நியூஜிலாந்து அணியை எதிர்த்து இந்தியர்கள் ஆடியபோது, தாவூதின் அடியாள் ஸௌத்தியா, நாலு சீனியர் இந்திய ஆட்டக்காரர்களுடன், டெலிஃபோனில் தலா 20 லட்சம் - தோற்பதற்கு பேரம் பேசியதை, தான் காதால் கேட்டதாக (போலீஸ் டெலிஃபோனில்தான்) சத்தியம் செய்கிறார். அந்த மாட்சில் ஸௌத்தியாவும் சகாக்களும் 43 கோடிகள் பெட்டிங்கில் சம்பாதித்தனராம். அப்போதே, கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் வைஸ் பிரசிடெண்டான வெங்கட்ராவ், இந்திய அணியில் நான்கு 'ப்ளாக் ஷீப்கள்' இருந்ததாகக் குறிப்பிட்டும் யாரும் கண்டு கொள்ளவில்லையாம். ''முன்பெல்லாம் விடிகாலை 3.30 மணிக்கே அலாரம் வைத்து, எழுந்து, இந்தியக் குழுவின் ஆட்டத்தை ரசிப்பேன்; இப் போதெல்லாம் கிரிக்கெட்டே வெறுத்து விட்டது'' என்கிறார் பெயர் சொல்ல விரும்பாத இந்த போலீஸ் அதிகாரி. இந்த நிலைக்கு இந்தியர்கள் அனைவரும் தள்ளப்படுமுன் கிரிக்கெட் போர்டு விழித்தெழுந்தால் சரி!



'வீட்டு'ப் பற்று

சாதாரணமாக அரசியல்வாதிகளுக்கு (போலி) சாமியார்கள் சென்டிமென்ட் இருக்கும்! ஆனால் பால்தாக்கரேவுக்கு 'வீட்டு' சென்டிமென்ட்! பாந்த்ராவில் அவர் வசிக்கும் 'மாதோஸ்ரீ'யை விட்டு, எங்கேயாவது மலபார் ஹில்ஸ் பகுதியில் பத்திரமாகக் குடியேறச் சொல்லி, காவல்துறை கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்சியும், அடாவடியாக மறுத்து வருகிறார். மாதோஸ்ரீயைச் சுற்றி அடுக்கு மாடிக் கட்டடங்கள்; எக்கச்சக்க நெரிசல், வாகனங்கள், இத்யாதி 'செக்யூரிட்டி'க்கு பெருந்த தலைவலியாக உள்ளன. ஆனாலும் இந்த 'அசையா' சொத்தை விட்டு மனிதர் 'அசைய' மறுக்கிறார். தீவிரவாதிகளின் ஹிட் லிஸ்ட்டிலுள்ள தாக்கரேவுக்கு இந்த 'வீடு' விஷயம் 'வீடு பேற்றை'த் தேடித் தந்து விடக் கூடாதே என்பதுதான் மற்றவர்களின் கவலை!

மருத்துவ ரகசியம்

Bums என்றால் தெரியுமா? சீ கெட்ட வார்த்தை என்று முகம் சுளிக்காதீர்கள்; MD(AC), CCH, MB,SH, FRS, MTR, CGO, Bums... இவை எல்லாம் மருத்துவப் படிப்புக்கு வழங்கப்பட்டிருக்கும் பட்டங்கள்! வழங்கியவர்கள் பிஹார், உ.பி, ம.பி, ராஜஸ்தான், மே. வங்காளம் போன்ற இடங்களிலுள்ள ஊர் பேர் தெரியாத பல்கலைக் கழகங்கள். இவற்றுக்கு அர்த்தம் என்ன என்பது, வழங்கியவர்களும், பெற்றவர்களும் அறியாத ரகசியம். மூவாயிரம் ரூபாயில் ஒரு வருட கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில், மெடிகல் டிகிரி கிடைக்கிறதென்றால் கசக்கிறதா? இவற்றை வைத்துக் கொண்டு பிராக்டீஸ் பண்ணிக் கொண்டிருக்கும் 'டாக்டர்'களின் எண்ணிக்கை எக்கச்சக்கம்! 'தாணா' பகுதியில் மட்டும், மொத்த டாக்டர்களுள் இப்படிப்பட்ட போலிகள் 25%க்கு மேலிருக்குமாம்! மெடிகல் கவுன்சிலும், முனிசிபல் கார்ப்பொரேஷனும் முழி முழி என்று முழிக்கின்றன. காவல்துறைக்குத் தலை சுற்றுகிறது. விட்டால் இவர்களுக்கும் மருத்துவம் பார்த்து விடுவார்கள் இந்த 'Bums' பட்டதாரிகள்!


பாயப் போகிறது பெட்ரோல்

ஜி.எஸ்.எஸ்.

சென்னை-திருச்சி-மதுரை நகரங்களில், நிலத் தடியில் நிறுவப்படவிருக்கும் ராட்சதக் குழாய்களின் மூலமாக பெட்ரோல் பாயப்போகிறது.

இப்போது நமக்கு பெட்ரோல், டீசல் போன்றவை எப் படிக் கிடைக்கின்றன?

நகரங்களுக்கு கப்பலில் வந்திறங்கும் கச்சா எண் ணெய் (க்ரூட் ஆயில்) அருகில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்துக்கு அனுப்பப்படுகிறது. அங்கேதான் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், க்ரீஸ் இப்படிப் பல்வேறு பெட்ரோலியப் பொருட் கள் பிரிக்கப்படுகின்றன.



பெரும்பாலும் சுத்திகரிப்பு நிலை யத்துக்கு அருகிலேயே அமைந் துள்ள பெட்ரோலிய நிறுவனங் களுக்கு பெட்ரோல் டீசல் ஆகியவை, குழாயின் மூலம் அனுப்பப்படுகின்றன. (இப்போது இந்தியாவின் மூன்று ஜாம்பவான் பெட்ரோலிய நிறுவனங் கள்- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம், இந்துஸ் தான் பெட்ரோலியம்).

இந்த நிறுவனங்களி லிருந்து பல்வேறு பெட்ரோல் பங்க்குகளுக்கு லாரி மூலம் இவை அனுப்பப்படுகின்றன. இந்தக் கடைசிக் கட்டத்தில்தான் நவீன தொழில்நுட்பம் புதிதாக அறிமுகமாகவிருக்கிறது!

மேலே குறிப்பிட்ட மூன்று ஜாம்ப வான்களும் சேர்ந்து 'பெட்ரோநெட் இந்தியா' என்ற நிறுவனத்தைத் துவங்கியுள்ளன. இந்தப் புது நிறுவனம், ஐந்து முக்கிய 'பெட்ரோல் பாதை' களை உடனடியாக உருவாக்கத் தீர்மானித் திருக்கிறது. கொச்சி-கரூர், பெங் களூர்-மங்களூர், சென்னை - திருச்சி - மதுரை, வாடிநார்-கண்ட்லா, பீனா-ஜான்சி-கான்பூர் இந்தப் பாதைகளில் மொத்தம் சுமார் 1700 கிலோ மீட்டர் தூரத்துக்கு நிலத்தடி பைப்புகள் நிறுவ இருக்கிறார்கள். இன்னும் நான்கு மாதங் களில் இந்த வேலை தொடங்கிவிடுமாம். இதற்கான மொத்த முதலீடு 2400 கோடி ரூபாய்.

இவ்வளவு செலவழித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்று வதில் என்ன லாபம்? அதிக அளவில் பெட்ரோல் மற்றும் டீசலை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு வேகமாக அனுப்ப முடியும் என்பது முதல் நன்மை.

போக்குவரத்து செலவு மொத்தமாகக் குறைந்து விடுவதால் (லாரி, ரயில் ஆகியவற்றுக்குக் கட்டணம் செலுத்த வேண் டாமே) பெட்ரோலின் விலை கூட கணிசமாகக் குறைய வாய்ப்புண்டு என்று கூட ஆசை காட்டுகிறார்கள்!

இந்தியாவில் 1964லிலேயே கௌஹாத்தி-சிலிகுரி ஆகிய இடங்களுக்கிடையே பெட்ரோல் நிலத்தடி பைப்புகள் மூலமாக செல்லும் திட்டத்தை அறிமுகப் படுத்தி விட்டார்கள். ஆனால் பரந்த அளவில் நாட்டின் பல் வேறு பகுதிகளில் இப்படியொரு திட்டத்தை அறிமுகப்படுத்துவது இதுவே முதல் முறை.

தமிழில் :
ரா.கி. ரங்கராஜன்

தனக்கும் தன் கணவனுக்கும் நடுவே இன்னொரு பெண் இருக்கிறாள்! அதுவும் எட்டு மாத காலமாக!

எண்ண எண்ணப் பேஜுக்குத் தலை சுழன்றது.

'அவள் எப்படிப்பட்டவள்?' என்று அவள் கேட்டதற்கு, பல நிமிடம் கழித்துப் பிராட் மெதுவே பதில் சொன்னான் :

"அவள்... ஸ்டிபானி... வித்தியாசமான பெண். உன்னைப் போல இல்லை... அதாவது, ரொம்பவும் சுதந்திர உணர்வு கொண்டவள். பிறத்தியார் பேச்சைக் கேட்காமல் தானாகவே எதுவும் செய்கிறவள். லாஸ் ஏஞ்சல்ஸைச் சேர்ந்தவள். ஸ்டான்ஃபோர்டுக்குப் போவதாக வந்தவள் இந்த ஊரிலேயே தங்கி விட்டாள். இருபத்தாறு வயதாகிறது. அவள்... அவள்... நாங்கள் நிறையப் பேசிக் கொண்டிருப்போம். பல விஷயங்களில் எனக்கும் அவளுக்கும் கருத்து ஒற்றுமை உண்டு... இந்த உறவு கூடாது, தப்பு, நிறுத்தி விட வேண்டும் என்று அடிக்கடி என்னை நானே கண்டித்துக் கொள்கிறேன். ஆனால் முடியவில்லை..."

தீனமான பார்வையுடன் அவளைப் பார்த்தான் பிராட். வேறொரு சமயமாக இருந்தால் அவன் மீது பேஜுக்குப் பரிதாபம் ஏற்பட்டிருக்கும். இப்போது அவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவளை வெட்டிக் கொலை செய்து கொண்டிருந்தது. அந்தப் பெண் அழகாக இருப்பாளா, செக்ஸியாக இருப்பாளா, அவன் மீது அவளுக்கு நிஜமான காதலா அல்லது வெறும் மோகமா - இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகள் அவள் நாக்கு நுனியில் எழுந்து நின்றன. ஆனால் எப்படிக் கேட்பாள்? கேட்டு, அவன் சொல்லும் பதில்களை எப்படித் தாங்கிக் கொள்வாள்?

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

"சரி, இப்போது அவளை...

11:29

என்னை... என்ன செய்வதாக உத்தேசம்? ஒருவழியாய் என்னை விட்டு விட்டுப் போய் விடப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"அப்படியெல்லாம் பேசாதே, பேஜ்," என்றான் பிராட். "எனக்கு எதுவுமே தெரியவில்லை. இந்த நிலைமை இப்படியே நீடிக்க முடியாது என்பது மட்டும் தெரிகிறது. மற்றபடி ஒரே குழப்பமாக இருக்கிறேன்," என்றவன் தன் முடியைக் கைகளால் அளைந்து கொண்டு, "பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது," என்றான்.



பேஜுக்கு அவனிடம் அனுதாபம் பிறக்கவில்லை.

"இவ்வளவு விபரீதங்கள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறபோது நான் பாட்டுக்கு




முட்டாள்தனமாக இருந்து வந்திருக்கிறேன்!" என்றாள். அவனால் அவளை வெறித்துப் பார்க்க மட்டுமே முடிந்தது. எதையும் நம்ப முடியவில்லை. எல்லாம் கற்பனைக்கே எட்டாத பயங்கரமாக இருந்தன. என்னென்ன அச்சப்பட்டானோ, என்னென்ன பீதி கொண்டிருந்தானோ, அதெல்லாம் உண்மையிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே அவளுடைய கண்மணி ஆலிஸன் செத்துக் கொண்டிருக்கிறாள். இங்கே கணவன் பிராட் எவளோ ஒருத்தி பின்னால் சுற்றிக் கொண்டிருக்கிறான்!

"கடவுளே! ஏன் இதெல்லாம்...?! நம் வாழ்க்கை ஏன் இப்படிச் சின்னாபின்னமாகச் சீர்குலைய வேண்டும்? நீங்கள்பாட்டுக்கு வெளியூர் போவதும் கால்ஃப் விளையாடுவதுமாக இருந்திருக்கிறீர்கள். நான் இங்கே பைத்தியக்காரி மாதிரி வீட்டைப் பார்த்துக் கொள்வதும் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப் போவதும் அழைத்து வருவதுமாக இருந்திருக்கிறேன். நீங்கள் ஒரு திசையிலும் நான் ஒரு திசையிலும் பிரிந்து போய்க் கொண்டிருப்பதை நான் கவனிக்காமலே இருந்து விட்டேன்..."

தான் எந்த இடத்தில் என்ன தப்புச் செய்தோம் என்பது அவளுக்குப் புரியவில்லை. புரிந்து கொள்ள முடியாமல் நிலைமை கிடுகிடுவென்று மோசமாக வளர்ந்து விட்டது.

"உன் மேல் தப்பில்லை," என்றான் பிராட். அவன் குழம்பியிருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது. "உன் தப்பாகவும் இருக்கலாம். அல்லது நம் இருவர் தப்பாகவும் இருக்கலாம். இப்படி விட்டிருக்கக் கூடாதுதான்... விட்டு விட்



மூலம் : டேனியல் ஸ்டீல்

16

டோம் போலிருக்கிறது. அற்பமான விஷயங்களில் கவனம் செலுத்தி முக்கியமானதைக் கோட்டை விட்டு விட்டோமோ என்னவோ. எனக்குத் தெரியவில்லை..." என்றான்.

ஆம். அவனுக்குத் தெரியவில்லைதான். தெரியாததால்தான் எட்டு மாதமாக இந்த நிலைமை. அதனால்தான் பேஜை விட்டு விட்டுப் போகவுமில்லை. அவளிடம் உண்மையைச் சொல்லவுமில்லை.

நேரடியாக அவனைப் பார்த்து பேஜ் கேட்டாள் : "இனிமேலாவது அவளைப் பார்ப்பதை நிறுத்திக் கொள்வீர்களா?"

அவன் நீண்ட நேரம் தயங்கியபின் அது இயலாத காரியம் என்று தலையை அசைத்தான்.

அவள் இருதயம் இரண்டாகப் பிளந்தது. அப்படியானால் என் நிலைமை? நீங்கள் தொடர்ந்து அந்தக் கவர்ச்சிக் கன்னியுடன் கூத்தடித்துக் கொண்டு இருப்பீர்கள்? நான் பாட்டுக்கு அதைப் பார்க்காத மாதிரி இருக்க வேண்டும்? அப்படித்தானே?" என்ற போது அவளுக்குத் தலைகால் புரியாமல் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கையால் அவனை நாலு அறை விட வேண்டும்போல ஆத்திரம் பொங்கியது. கையால் முடியாவிட்டாலும் வாயால் அறையத் தோன்றியது.

அவளுடைய ஆத்திரம் பிராடுக்குப் புரிந்தது. இந்த எட்டு மாத காலமாக எத்தனையோ முறை அவன் தன்னைத்தானே நொந்து கொண்டிருக்கிறான். பேஜ் அவனிடம், பிரியமாக, அன்பாக, அந்தரங்கமாகப் பழகும்போதெல்லாம் அவனுக்கு மனச்சாட்சி உறுத்தி வந்திருக்கிறது. குற்ற உணர்வு அவனைக் குத்தியெடுத்திருக்கிறது. என்றாலும் கூட அவனால் ஸ்டிபானியைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இரண்டு பேரில் எவளையும் அவனால் விட இயலவில்லை. இரண்டு பேரிடமும் தனக்கு ஒரே மாதிரியான காதல் என்று அவன் தனக்கே சமாதானம் சொல்லிக் கொண்டான். உண்மை அதுவல்ல. அவன் பேஜை நேசித்தான். மதித்தான். குழந்தைகளுக்கு அன்பான தாயாகவும், தனக்கு அன்பான மனைவியாகவும் அவள் இருப்பதை அவன் உணர்ந்தான். அபாரமான சிநேகிதி. அருமையான நிர்வாகி. மனைவி என்பவள் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று ஓர் ஆண் விரும்புவானோ அப்படியெல்லாம் இருப்பவள். ஆனால் ஸ்டிபானியைப் போல அவள் எண்ணத்திலும் இதயத்திலும் கனல் மூட்டக்கூடிய சக்தி இவளிடம் கிடையாது. என்ன செய்தாலும் என்ன சொன்னாலும் அந்த உண்மை உண்மைதான்.

"அடுத்தபடி நான் என்ன செய்ய வேண்டும் என்று எண்ணியிருக்கிறீர்கள்? தொலைந்து ஒழிய வேண்டுமா? இடைஞ்சல் ஒழிந்தது என்று நீங்கள் இரண்டு பேரும் ஆனந்தமாக இருக்கும்படி விட்டு விட்டு, ஒதுங்கிக் கொள்ளச் சொல்கிறீர்களா?"

அப்படிக் கேட்கும்போதே அவளுக்குள் ஒரு கலவரம் மூண்டது. நான் குடும்பத்தை விட்டு வெளியேற வேண்டுமென்பது இவர் விருப்பமோ? அல்லது, எல்லாம்தான் தெரிந்து விட்டதே, இனி என்ன என்று தானே வெளியேறத் திட்டமிட்டிருக்கிறாரோ? குழந்தை ஆண்டி? அவள் கதி?

ஆலிஸனின் கதி?

எதிர்காலத்தைக் குறித்து எண்ணும்போதே கண்ணீர் பொங்கிக் கொண்டு வந்தது.

"நான் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?" என்றாள். உள்ளத்தைப் போலவே அவள் குரலும் சிதைந்து போயிருந்து.

"ஒன்றும் எதிர்பார்க்கவில்லை, பேஜ். ஆலிஸன்தான் இப்போது முக்கியம். அவள் பிழைத்து எழுந்து வரட்டும் முதலில். மற்றதெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். எல்லாப் பிரச்னைகளையும் ஒரே சமயத்தில் தீர்க்க முடியாது."

யதார்த்தக் கண்ணோட்டத்துடன்தான் அவன் பேசினான். ஆனால் பகுத்தறிந்து பொறுமையுடன் கேட்கக்கூடிய மனநிலையில் அவள் இல்லை. "அப்புறம்? அதற்குப் பிறகு? ஆலிஸன் வீட்டுக்கு வந்தவுடன் அல்லது அவளைப் புதைத்தவுடன் நீங்கள் அந்தப் பெண்ணிடம் போய் விடுவீர்கள். இல்லையா?" என்றாள். கசப்பு ஒரு பக்கமும் பயம் ஒரு பக்கமும் அவள் உள்ளத்தை வதைத்தன.

பித்துப் பிடித்தவள் போல அவள் சித்திரவதைப்படுவது அவனுக்குத் தெரிந்தது. ஆயினும் அவளைச் சமாதானப்படுத்தவோ ஆறுதல் கூறவோ அவன் முன்வரவில்லை. முன்வர முடியவில்லை. ஏனெனில் அவனே சித்திரவதையை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

பேஜை விவாகரத்து செய்வதற்கு அவன் தயாராயில்லை. ஸ்டிபானியும் அவனை வற்புறுத்தவில்லை. காலம் கனியும் வரையில் காத்திருக்க அவள் சித்தமாக இருந்தாள். பிராட்தான் அவள் மீதுள்ள மோகம் காரணமாக ஏதாவது வழி கண்டாக வேண்டும் என்று துடித்தான். குற்ற உணர்வுடன் ஒரு பொய் வாழ்க்கை வாழ அவனுக்குப் பிடிக்கவில்லை.

"பேஜ், நான் சொல்வதைக் கேள். எதையும் இந்த நிமிடமே முடிவு பண்ணக்கூடிய நிலைமையில் நாம் இல்லை. கொஞ்சம் பொறு. ஆலிஸன் குணமாகி வரும்வரையில் – குறைந்த



இதுக்கு கமெண்ட் அடிச்சா வம்புப்பா!

பட்சம் அவள் அபாய கட்டத்தைத் தாண்டுகிற வரையில் நாம் இப்படியே இருக்கலாம்..." என்று அவன் கூறி முடிப்பதற்குள் பேஜ் சீறினாள்.

"அதற்கப்புறம்? அதற்கப்புறம் என்ன என்றுதான் கேட்கிறேன்."

"தெரியவில்லை, பேஜ். நிஜமாகத் தெரியவில்லை."

"தெரிந்ததும் சொல்லுங்கள்," என்று விருட்டென எழுந்து கொண்டாள். ஒரு நிமிடம் அவனை வெறித்துப் பார்த்துவிட்டு, வெளியேறிச் சமையலறைக்குச் சென்றாள். ஆண்டிக்காகப் பிஸ்ஸா தயாரித்து, அவனைக் கூப்பிட்டுச் சாப்பிடச் சொன்னாள்.

'ஏம்மா என்னவோ போல் இருக்கிறே?' என்றான் குழந்தை.

"ஒன்றுமில்லை. ஆலி ரொம்ப மோசமாய் இருக்கிறாள் இல்லையா? அந்தக் கவலை," என்று கூறி அவனை அணைத்துக் கொண்டு சிறிது நேரம் அவன் படுக்கையில் படுத்திருந்தாள். பிறகு தன் படுக்கையறைக்குச் சென்று பொத்தென்று விழுந்தாள். தூங்க முயன்றாள். முடியவில்லை. தலை சுழன்று கொண்டே இருந்தது. எவ்வளவு பயங்கரங்கள்! எவ்வளவு வேதனைகள்! எவ்வளவு கேள்விகள்! ஆலிஸனைப் பற்றி, பிராடைப் பற்றி, தங்கள் இல்லற வாழ்க்கையைப் பற்றி, வாழ்வைப் பற்றி, சாவைப் பற்றி...

கதவு திறக்கும் ஓசை கேட்டது. பிராட் உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு கிளாஸ் இருந்தது.

"எதுவும் சாப்பிடாமல் படுத்து விட்டாய் போலிருக்கிறதே? ஏதாவது கொண்டு வந்து தரட்டுமா?" என்றான் அவன்.

"எனக்குப் பசியில்லை," என்றாள் அவள் வெறுப்புடன். "நான் ஆஸ்பத்திரிக்குப் போகிறேன். ஆலி எப்படி இருக்கிறாள் என்று பார்க்க வேண்டும்."

"இப்போது அவளைப் பார்க்க அனுமதிக்க மாட்டார்கள்."

"பரவாயில்லை."

பிராடுக்குச் சட்டென நினைவு வந்தது. "ஆண்டி காலையில் ஸ்கூலுக்குப் போக வேண்டுமே? அதற்குள் நீ வந்து விடுவாயா?"

இயலாதென்று அவள் தலையசைத்தாள். "அவனை நீங்கள் தயார் பண்ணி ஸ்கூலில் கொண்டு போய் விட்டுவிட்டு வாருங்கள். அதற்கு நான் தேவையில்லையே?" என்றாள். பார்க்கப் போனால் அது ஒன்றுக்குத்தான் நாம் இங்கே தேவைப்படுகிறோம் என்று எண்ணிக் கொண்டாள். குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதுதான் நமக்கு வேலை என்று ஆகிவிட்டது!

"சரி, நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றான் பிராட். அவன் குரலில் வருத்தம் தொனித்தது. "ஆண்டியை நான் பார்த்துக் கொள்வேன்... ஆனால் மற்ற விஷயங்கள்... நீ இல்லாமல் எப்படி..."

"மற்ற விஷயங்களா? அப்படியொன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே?" அவனுக்கும் தனக்கும் சம்பந்தமில்லாத மாதிரி அவள் பேசினாள்.

"பேஜ்... நான்... நான்... ஐ லவ் யூ, பேஜ்," என்றான் அவன் திடீரென்று.

"அடடே! அப்படியா பிராட்?" என்றாள் அவள். அவளுடைய வேதனை எத்தனை ஆழமானது என்பது அவள் குரலில் தெரிந்தது. "என் மீது உங்களுக்குக் காதல் என்றா சொல்கிறீர்கள்? என்னை நேசிப்பதாகவா சொல்கிறீர்கள்? ஹூம்! நான் ரொம்பக் காலமாக அப்படி நினைத்துத்தான் என்னை நானே ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறேன். ஏன், நீங்கள் கூட ஒருவேளை அப்படி நினைத்து உங்களை ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறீர்களோ என்னவோ. ஆனால் நம் இரண்டு பேருக்கும் இப்போது உண்மை நிலைமை புரிந்து விட்டது. இது வும் நல்லதுக்குத்தான்."

அப்படிச் சொன்னாளே தவிர, உண்மை நிலை என்னவென்று புரிந்ததில் அவள் உள்ளத்தில் காயம்தான் ஏற்பட்டிருந்தது. மனத்தில் ரணம்தான் உண்டாகியிருந்தது.

"ஸாரி பேஜ்," என்றான் பிராட் மெதுவாக. ஆனால் அவளை நெருங்கி வரவில்லை. தனக்கும் அவளுக்குமிடையே மலையளவு பிளவு ஏற்பட்டு விட்டதை அவன் உணர்ந்தான்.

"ஸாரி... ஸாரிதான்... எனக்கும் வருத்தம்தான்," என்று சொல்லிவிட்டு எழுந்து கொண்டவள், அவனை ஒருமுறை நேருக்கு நேராகப் பார்த்தாள். மேற்கொண்டு ஒரு வார்த்தையும் பேசாமல் குளியலறைக்குச் சென்றாள். கதவைச் சாத்திக் கொண்டு தண்ணீர்த் தொட்டியில் அமர்ந்து, குழாயைத் திருகினாள். தண்ணீர் கொட்டியது. முகத்தில் கண்ணீரும் கொட்டியது. நேற்று அழுதது மகளுக்காக. இன்று கணவனுக்காக. இரண்டு பேருக்காகவும் பேஜ் அழுதாள்.

(தொடரும்



" 'ஓராண்டு சிறை வாழ்க்கை'-ங்கிற உங்க சுயசரிதையில பெரும்பாலும் டாக்டர், நர்ஸ்... இவுங்களைப் பற்றியே எழுதியிருக்கீங்களே?"

"360-நாள்தான் ஆஸ்பத்திரிலதானே இருந்தேன்...! அதனால தான்...!"

- சீர்காழி வி. ரேவதி



துக்கம்

ரிஷபன்

"யாராவது ஒருத்தர் வந்திருக்கலாம்" என்றாள் பூரணி. அழுகை ஓய்ந்த பிறகு.

எதிரே நாங்கள் உட்கார்ந்திருந்தோம்.

நானும் என் மகளும். பூரணியின் மடியில் என் பேரன் அசோக். கைகளில் முறுக்குத் தீனி.

பால் வாங்க சண்முகம் வெளியே போனான். காலைப் பால் மிச்சம் இருந்ததில் காப்பித் தண்ணி கலந்ததில்

தொண்டை நனைந்தது. அழுகை விட்டு இப்போது பேச்சு.

பூரணியின் தலைமுடி கோடாலிமுடிச்சாய் முடியப்பட்டிருந்தது. நெற்றியில் திருநீறு. அது என்னவோ முகம் சட்டென்று அதன் வசீகரம் இழந்து அசட்டுக் களை தட்டி விடுகிறது. முன்பு பார்த்த பூரணி இல்லை.

"எந்திரிடா... அத்தை மடியில ஒக்காந்து என்ன தொவையல்?"

வடிவு அதட்டினாள்.

''அட... இவன் ஒக்காந்தா நான் தேஞ்சுருவேன் பாரு. விடு வியா..."

என் மனக் கஷ்டம் அதிகரித்துக் கொண்டே

போனது, தப்புத்தான். வராமல் போனது. தகவல் என்னவோ உடனே வந்து விட்டது. ஆறு மணி நேரப் பயணம். இருந்தால் என்ன? ஃபோன் இருக்கிறது. தகவல் சொன்னால் காத் திருப்பார்கள். பத்தாம் நாள் காரியத்துக்கு மட் டும் வந்து பூரணி இப்போது குறைசொல்கிற மாதிரி நேர்ந்திருக்காது.

"எல்லாரும் வந்திட்டாங்க. எடுக்கவே வுடாம அழுகை. சொல்லிச் சொல்லி அழுதாங்க."

பூரணிக்கு மீண்டும் கண்ணீர் பூத்தது.

"ஏதோ எஞ்சோகம்னு தோணலே... அண் ணாச்சி. ஊரே கலங்கி நின்னப்ப... நீங்க வரலி யேன்னு... ஒங்க முகம் பார்த்து தெம்பு வந்திருக்கும்..."

குறைசொல்வது போல் இல்லாமல் ஒரு ஏக்கம் போலப் புலம்பினாள்.

எழுந்திருந்து ஓடிப் போக வழியின்றி எனக்கு நானே போட்டுக் கொண்ட கட்டுக்குள் ஒடுங்கியிருந்தேன்.

"வடிவும் மாப்பிள்ளையும் வருவாங்கன்னு நினைச்சோம்."

இம்முறை மகள் வடிவின் மீது வார்த்தைப் பாய்ச்சல். என் போல அவள் பதறவில்லை.

"எப்ப சொந்த பிசினஸ்"ன்னு அவரு ஆரம் பிச்சாரோ... அவரு வீட்டுக்கு வரப்பதான் கணக்கு. எந்த நேரமும் அலைச்சல். அப்ப நான் மட்டுந்தான்... இவனை இழுத்துகிட்டு தனியா வந்திருக்கணும்... அவரு கோணம் ஒங்களுக்கே தெரியும். வீட்டைப் பூட்டிகிட்டு எங்கே போனேன்னு ரப்சர் பண்ணுவாரு. இதுவே அவரு இருந்திருந்தா கதையே வேற. கார் வச்சு கிட்டு வந்திருவாரு" என்றாள் பாதிப் பெரு மையுடன்.

என்னால் இதுபோல் சாமர்த்தியமாய் பேச வராது. நிச்சயம் என் மீதுதான் தப்பு என்று உள்ளுக்குள் குமைவேன்.

சண்முகம் பால் சொம்புடன் உள்ளே வந்தான்.

"காயப் போடுரா... நல்ல காப்பியா குடிக்கத் தரணும்.."

"எதுக்கு... இப்பத்தானே குடிச்சோம்."

"அய்ய... காலைப் பால்... ருசி இல்லாம அதையும் ஒரு கணக்குக்கு குடிச்சாச்சு. புதுப் பால்ல நல்ல காப்பியா குடிக்கலாம்."

பூரணியின் குரலில் அழுத்தம் தெரிந்தது.

அசோக் எழுந்து பூனைக் குட்டியைத் துரத்திக் கொண்டு ஓடினான்.

"சரியனா வாலு.. எப்பவும் ஓடணும். கால்ல சக்கரம் கட்டி விட்டாப்ல அப்படியே அவங்க அப்பாருதான்" என்றாள் வடிவு.

பூரணி என்னைப் பார்ப்பது புரிந்தது.

"அண்ணாச்சி... பேசாமயே இருக்கீங்க..."

வடிவு திடீரென்று எழுந்து பின்கட்டு பக்கம் போனாள்.

"என்ன சொல்றது... எம்மேல பிசகு. தகவல் கேட்டு ரொம்பத் துடிச்சுப் போயிட்டேன். ஆனா வரமுடியாம என்னென்னவோ பிரச்னை."

என் குரல் பிசிறியது.

"மூர்த்தி கூடத்தானே இப்ப தங்கி யிருக்கீங்க..."

"ஆமா..." என் தலை ஆடியது.

"அவனுக்கு வரன் எதுவும் பார்க்கறீங் களா..."

"ம்..."

"அவரு இருந்தப்ப.. சொல்லிக்கிட்டே இருந் தாரு. மூர்த்தி அப்படியே உங்க வேலு அண் ணாச்சி போல முன்னுக்கு வரணும்னு ஒரு வெறி... திடம்... நீங்க பிடிவாதமா நம்ம ஊரை விட்டுப் போயி... நாலு காசு பார்த்ததை பெருமையா சொல்லுவாரு."

பூரணிக்கு மீண்டும் கண்ணீர் துளிர்த்தது.

அவள் சொல்ல வந்தது புரிந்தது. மகள் வனஜாவை மூர்த்திக்கு சம்பந்தம் பேச முனைகிறாள்.

வடிவு கிளம்பும்போதே எச்சரித்திருந்தாள்.

'அப்பா... நீங்க பாட்டுக்கு வாக்கு கொடுத் துராதீங்க. அம்மா போன பிறகு ஒங்க புத்தியே தறி கெட்டுப் போச்சு. யாராச்சும் அழுதா.. கூட சேர்ந்து அழுவறீங்க. மனுசங்க காரியம் ஆவ ணும்னா என்ன வேணா செய்வாங்க. மூர்த் திக்கு என் வீட்டுக்காரரோட தங்கச்சியப் பார்க் கலாம்னு சொல்லிக்கிட்டு இருக்காரு. அவனுக் கும் அவளை புடிச்சுப் போச்சு. துக்கம் கேட்கப் போனோமா... வந்தமான்னு இருக்கணும்..."

"வடிவு... புள்ளைய கூட்டிக்கிட்டு வா..."

பூரணி கூவினாள்.

காப்பி மணத்தது. அசோக்கிற்கு பால். வடிவு அசோக்குடன் வந்தாள்.

"சண்முகம்... புள்ளை கையில பணங் கொடுரா. துணி எடுத்து வச்சிருந்தா தரலாம்."

"எதுக்கு அத்தை..."

"நீ கம்மாயிரு. மொத தடவை வருது. துக்கமும் சந்தோஷமும் பெரியவங்க கூட.. புள்ளைங்க மனசுல எப்பவும் சிரிக்கணும்..."

நூறு ரூபாய்த்தாளை சட்டைப் பையில் சொருகினாள்.

"நல்ல முடிவா சொல்லுங்க அண்ணாச்சி. போனவரு ஆத்மா குளிரணும். பூமியைப் பார்த்துக்கிட்டு நிப்பேன்னு சொல்லுவாரு."

ஒரு சொட்டு உதிராமல் ததும்பியது பூரணிக்கு.

சொல்லிக் கொள்ளாமல் கிளம்ப வேண் டும் என்ற விதி அந்தச் சமயம் நன்றாகவே உதவியது எனக்கு. தெருவில் இறங்கியபோது துக்கத்துக்கு வராததை விட மோசமாய் உணர்ந்தது மனசு.

■ தில்லியிலிருந்து : ரமாமணி சுந்தர்

சுதந்திரப் பொன்விழா கொண்(தி)டாட்டங்கள்!



• மணிசங்கர ஐயர்



• லதா மங்கேஷ்கர்



• பீம்சென் ஜோஷி

இந்தியா, சாவகாசமாக சோம்பல் முறித்தவாறு, விழித்துக் கொண்டிருக்கிறது. எதற்கு? சுதந்தரத்தின் பொன்விழாவைக் கொண்டாடத் தொடங்குவதற்கு!

ஆனால், நம்மை ஆண்ட இங்கிலாந்து நாட்டில், கடந்த ஓராண்டு காலமாகவே இந்திய நாட்டின் சுதந்தரப் பொன்விழாவைக் கொண்டாடும் விதத்தில், தொலைக்காட்சியில் வேலை தொடங்கி விட்டார்கள். இந்தியாவின் சரித்திரத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகி வருகின்றன!

"நாடு சுதந்தரம் அடைந்து நாற்பத்தி ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்த உடன், பொன் விழாக் கொண்டாட்டங்களைத் துவங்கி, 1997 ஆகஸ்ட் 15ம் தேதியன்று, நாம் கொண்டாட்டங்களின் உச்சகட்டத்தை தொட்டிருக்க வேண்டும்!" என்று கூறுகிறார், முன்னாள் மயிலாடுதுறை காங்கிரஸ் எம்.பி. மணி சங்கர அய்யர்.

அநேகமாக எல்லா நாடுகளும் அப்படித்தான் செய்கின்றன. ஆனால், மத்திய கலாசாரத் துறை, துணைச் செயலர் பாணியாவோ, "மற்ற நாடுகள் எப்பொழுது வேண்டுமானாலும் கொண்டாடட்டும், நமது நாட்டில் ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியடைந்த பிறகு கொண்டாட்டங்களைத் துவங்குவது தான் மரபு!" என்று, மெத்தனமாக இருந்து விட்டதைப் பூசி மெழுகி, சப்பைபக்கட்டு கட்டுகிறார்!

"நரசிம்மராவ் பிரதமராக இருந்த காலத்திலேயே பொன்விழாவிற்கான திட்டங்களைத் தீட்டியிருக்க வேண்டும்" என்று கருதும் மணி சங்கர அய்யர், காலதாமதத்திற்கு காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் ஆட்சியுமே காரணம் என்று குற்றம் சாட்டுகிறார்.

தற்பொழுது, இந்திய அரசு, பொன் விழாக் கொண்டாட்டங்கள், 1997 ஆகஸ்ட் 15ம் தேதியிலிருந்து ஆரம்பித்தது, 1998 ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி வரையில் தொடரும் என்று அறிவித்துள்ளது. மத்திய அரசு இன்னும் எத்தனை நாட்கள் தாக்குப்பிடிக்கும் என்ற குழப்பமான அரசியல் சூழ்நிலை ஓரளவிற்கு உற்சாகத்தைக் கெடுத்தாலும், ஒரு வழியாக பொன் விழாக் கொண்டாட்டங்கள் இப்பொழுது சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன!

சுதந்தரப் பொன்விழாவிற்காக, மத்திய அரசின் கலாசாரத் துறை, எண்பத்தெட்டு அலுவலர்கள் கொண்ட பிரத்யேக காரியாலயம் ஒன்றை அமைத்துள்ளது. இந்தக் காரியாலயம், ஜெயின் கமிஷன், அயோத்தியா கமிஷன் போன்ற அலுவலகங்கள் குடி கொண்டுள்ள, தில்லி விஞ்ஞான் பவன் இணைப்பிலிருந்து இயங்குகிறது. பொன் விழா பணிகளுக்கென்று, மத்திய அரசு 51 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கியுள்ளது!

எந்த ஒரு அரசாங்க வைபவமும், கமிட்டிகள் நியமிக்காமல் நடத்தப்பட மாட்டாது என்பது அனைவரும் அறிந்த விஷயம். இந்த சுதந்தரப் பொன் விழா, இதற்கு

நகைக்க வைத்தார்; நகை வென்றார்!

கல்கி - பாலு ஜுவல்லர்ஸ் இணைந்து நடத்திய பன்னிரெண்டு வார ஜோக் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்த ஆயிரக்கணக்கான நகைச்சுவைச் சக்கரவர்த்திகளுக்கு முதலில் நன்றி.

இந்தப் பன்னிரெண்டு வார நகைச்சுவை ரேஸில் அதிகமுறை ஜெயித்தவர் வே. செந்தில் குமார். (கோரணாம்பட்டி போஸ்ட், கொட்கணாபுரம் வழி, சங்ககிரி தாலுகா சேலம் - 637 102.) வாசகர்களுக்கு ஏழுமுறை வயிற்றுவலி வரவழைத்த இந்த வித்தகருக்கு வாழ்த்துக்கள்!

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கவிருக்கும் ரூபாய் ஐம்பதாயிரம் நகைப் பரிசை இவர் என்ன செய்யப் போகிறார்? எப்போது பரிசளிப்பு விழா? யார் வழங்கப் போகிறார்கள்?

விவரங்கள் விரைவில்!

— ஆசிரியர்

விதிவிலக்கல்ல.

சென்ற ஆண்டு அக்டோபர் மாதம், பிரதம மந்திரியின் தலைமையில், தேசிய கமிட்டி (National Committee) ஒன்று நிறுவப்பட்டது. பொன்விழாக் கொண்டாட்டங்களைப் பற்றிய பொதுவான அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்குவது இந்த கமிட்டியின் வேலை.

இதைத் தொடர்ந்து உள்துறை அமைச்சரின் தலைமையில் கேபினட் கமிட்டி ஒன்றும், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரின் தலைமையில் Implementation Committee ஒன்றும் நிறுவப்பட்டன. இவற்றைத் தவிர ஓராண்டு காலத்தில் என்னென்ன நிகழ்ச்சிகளை நடத்தலாம் என்பதைத் தீர்மானிப்பதற்கென்று, பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரபலங்களைக் கூட்டமைப்பாளர்களாகக் கொண்ட, பத்து ஆலோசனைக் குழுக்கள் வேறு நியமிக்கப்பட்டுள்ளன.

இத்தனை மத்திய கமிட்டிகள் போதாதென்று, மாநில அளவிலும், பொன்விழா கொண்டாட்டங்களுக்காக கமிட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளன. இதில் வேடிக்கை என்னவென்றால், தேசிய கமிட்டியும், கேபினட் கமிட்டியும் இதுவரையில் ஒரே ஒரு முறைதான் கூடியுள்ளன!

ஐக்கிய முன்னணி அரசு எப்பொழுது கவிழ்ந்து விடுமோ என்ற அபாயகரமான நிலையில் பல்வேறு கட்சிகளின் தலைவர்களை உறுப்பினராகக் கொண்ட, இந்த கமிட்டிகளைக் கூட்டுவது என்பது சற்று தர்மசங்கடமான காரியம்தான்!


ஆக, சுதந்தரம் அடைந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாட, கிட்டத்தட்ட ஐம்பது கமிட்டிகள் வரையில் நியமிக்கப்பட்டுள்ளன. இத்தனை கமிட்டிகளும், அலுவலர்களும் ஒன்று சேர்ந்து இது வரையில் என்ன சாதித்துள்ளார்கள்?

இந்திய நாட்டின் சுதந்தரப் பொன்விழா ஆண்டை பிரதிபலிக்கும் விதத்தில் சின்னம் ஒன்று ஜூன் மாதத்தில் பத்திரிகையாளர் கூட்டத்தில் வெளியிடப்பட்டது. நமது தேசியக் கொடியை அடிப்படையாக வைத்து வரையப்பட்டுள்ள இந்தச் சின்னம், எல்லா பொன்விழா கொண்டாட்டங்களிலும், நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்படும். தூர்தர்ஷன் சானல்களிலும், ரயில்வே பிளாட்பாரம், பஸ் நிறுத்தங்கள் போன்ற பொது இடங்களிலும் பொன்விழா ஆண்டு முடிவடையும் வரையில், இந்த 'லோகோ' காட்சியளிக்கும்.


ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு முன்னோட்டமாக பம்பாய் ஆகஸ்ட் கிராந்தி மைதானத்தில், ஆகஸ்ட் 9ம் தேதியன்று, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும், திருமதி அருணா ஆஸஃப் அலி கொடியேற்றிய நிகழ்ச்சியையும் நடத்திக் (நடித்துக்) காட்டுவதாக திட்டமிடப்பட்டுள்ளது. அதே தினத்தில் தில்லியில் ராஜபத் வீதியில், மக்கள் அனைவரும் பங்கு கொள்ளும், மாபெரும் ஊர்வலம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருக்கும் ஆகஸ்ட் 14ம் தேதி இரவு தில்லி மாநகரம் விழாக் கோலம் பூண இருக்கிறது. நள்ளிரவில் பாராளுமன்றத்தின் மத்திய ஹாலில், குடியரசுத் தலைவரின் தலைமையில் நடக்க இருக்கும் சிறப்பு நிகழ்ச்சியில், பிரபல பாடகர்கள் பண்டிட் பீம்சென் ஜோஷியும், லதா மங்கேஷ்கரும் தேசபக்திப் பாடல்களைப் பாடி மக்களின் தேசிய உணர்வைத் தூண்டுவார்கள். அன்று இரவு தில்லியின் பிரதான வீதிகள், சரித்திர காலச் சின்னங்கள், முக்கியமான கட்டடங்கள் எல்லாவற்றிலும், தில்லி அரசு விளக்கலங்காரம் செய்ய இருக்கிறது. தில்லி முழுவதும் அன்று இரவு ஜகஜோதியாக காட்சியளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'ஜே ஜே' என்று கொண்டாடப்படும் இந்த சுதந்தரப் பொன் விழா கோலாகலங்கள், ஜெ வீட்டு கல்யாணத்துடன் போட்டி போடாமல் இருந்தால் சரிதான்!









வட்டமேஜை

இனி சந்தேகம் இல்லை!

✉ இவ்வாரத் தலையங்கம் மிகவும் அருமை. கருணாநிதி பத்திரிகைகளை சாதி அடிப்படையில் சாடியிருப்பதை அழகாக இடித்துக் காட்டியுள்ளீர்கள். பத்திரிகைகள் ஆதரவால்தான் இவர் மீண்டும் முதல்வரானார். இதை மறந்துவிடக் கூடாது. பத்திரிகைகள் கூறும் தவறைக் களைய முயற்சி செய்வதே முதல்வருக்கு அழகு.

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ 'தி.மு.க ஊர்வலத்தில் ஜெ-சசி நீதி மன்றக் காட்சி தேவைதானா? அநாகரீகம் இல்லை..?' என்ற கேள்விக்கு, 'கருணாநிதியை நீதிபதியாகச் சித்திரித்ததுதான் அநாகரீம் என்று சமநீதியாக பதில் தந்து என் போன்ற, 'கல்கியை' சந்தேகக் கண்களோடு பார்த்தவர்களின் தலையில் 'நறுக்' என்று குட்டி 'கல்கி' நடுநிலை வார இதழ்தான் என்பதை அழுத்தமாக நிரூபித்து விட்டீர்களே! சபாஷ்!

ஸ்ரீவில்லிபுத்தூர், என். சங்கரதாஸ்.

✉ பெற்றோர் முதல், ஆசிரியை வரை மழலைகளின் மனதறிந்து செயல்பட்டால் மகிழ்ச்சிதான் மலரும் என்பதை விளக்கும் வகையில், சரியான தருணத்தில், வெளிவந்த 'பள்ளி செல்லும் குழந்தைகளைச் சமாளிப்பது எப்படி?' கட்டுரைக்கு ஒரு சபாஷ்!

நெய்வேலி -3, உ. சந்திரமாலா.

✉ சிவாஜி விருதுகளுக்கு அப்பாற்பட்ட கலைஞர் என்று வியட்நாம்வீடு சுந்தரம் கூறுவது முற்றிலும் உண்மையே.

சென்னை - 1, கே.ஆர். உதயகுமார்.

✉ தேவதை, கல்கியிடமே விருது வாங்கி விட்டதே! அதிர்ஷ்ட தேவதை!

சென்னை - 14, அய்யாறு வாசுதேவன்.

✉ சாம்பார் ருசிக்காகவே சரவணபவனை மொய்க்கும் சைவ ஈக்கள் அதிகம்! இதில் நீங்கள் 'ஸ்டாலின் அந்த சாம்பாரை இரண்டு முறை கேட்டுச் சாப்பிடார்' என்று வேறு குறிப்பிட்டு விட்டீர்களா? இனிமேல் மதிய சாப்பாட்டுக்கு அங்கே சீட் ரிசர்வ் செய்தாலொழிய இடம் கிடைக்கப் போவதில்லை!

நாகப்பட்டிணம், நாகை சந்திரா.

✉ மீனா, ரம்பா, சிம்ரான், மந்த்ராக்களை 'கருத்தம்மா ராஜஸ்ரீ' திரையுலகில் ஆரோக்கியமாய் வென்று முன்னுக்குவர அருணாச்சலத்தை வேண்டிக் கொண்டேன். (அட, எங்க ஊர் சாமிங்க!)


திருவண்ணாமலை, சீதாமகன்.

✉ எஸ்.கே.கணேசனின் நாய்வால் சிறுகதை நல்ல நகைச்சுவை உணர்வுடன் எழுதப் பட்டிருந்தது.

நெய்வேலி, க. சுந்தர்.

✉ கண் இழந்தும் தளராமல் தன்னம்பிக்கையுடன் முயன்று கொண்டிருக்கும் உஷா விஷயத்தில் கண் இருந்தும் குருடனாக செயல்பட்டுவரும் அரசாங்கத்தை நினைக்கையில் வேதனையே மிஞ்சுகிறது!

சென்னை - 52, செங்குன்றம் கே. ரமேஷ்ராமன்.







உடையுத் காத்தயா? சாத்தயா?

குமுறல்

●● போக்குவரத்துக் கழகங்களில் இருந்த ஜாதி, மற்றும் பெயர்களை நீக்கி, 'தமிழ்நாடு அரசு பேருந்து' என்று பெயர் மாற்றம் செய்த அரசின் புதிய முயற்சியை வாழ்த்தி வரவேற்கிறேன். அதே சமயத்தில் குடந்தையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு கோட்டத்தை ஒதுக்கியதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏன், திருச்சிக்கு என்ன குறை? தமிழகத்தின் மூன்றாவது பெரிய நகரம் திருச்சி. எல்லா ஊர்களுக்கும் மையமாக அமைந்துள்ளது.

கல்லுக்குழி, ஜே. சந்திரசேகரன்.

●● தமிழ்நாட்டில் மக்கள் தொகையை விட ஸ்பீட் பிரேக்கர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. ஸ்பீட் பிரேக்கர் எவ்வளவு உயரத்தில் அமைக்க வேண்டுமென நெடுஞ்சாலைத் துறை கட்டுப்பாடு விதிப்பதில்லையோ! பல இடங்களில் இமயமலையில் ஏறி இறங்கின உணர்வு. பல சாலைகளில் அதிகப்படியான ஸ்பீட் பிரேக்கர்கள். அதனால் உயிர் காக்க உதவுபவை உயிர்பலிக்கே கூட சில சமயம் காரணமாகின்றன. நெடுஞ்சாலைத் துறை இதனை சீர்செய்யுமா?

அந்தணப்பேட்டை, அண்ணா அன்பழகன்.

●● மதுரையிலிருந்து புறப்படும் வைகை எக்ஸ்பிரஸில் சென்னை சென்று வந்தேன். பகலில் பயணம் செய்ததால் வெளிப்புறக் காட்சிகளை ரசிக்க முடிந்தது. ஆனால் ஸ்டேஷன்களைக் கடக்கும்போது மனச்சங்கடத்தை ஏற்படுத்தியது. பெரும்பாலான ஸ்டேஷன்கள் கிட்டத்தட்ட பாழடைந்த நிலையில் காட்சியளித்தன. சரிவரப் பராமரிக்கப்படாமலேயே இருக்கின்றன. ரயில்வேக்கு சொந்தமான இடங்களில் எருக்கு, முள் செடிகள் மண்டிக் கிடக்கின்றன. கட்டட இடிபாடுகள், கற்கள், மண்மேடுகள் அகற்றப்படாமலிருக்கின்றன. வேலிகள் முறிந்தும் முறியாமலுமிருக்கின்றன. சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் சொத்துக்களை பாதுகாத்துப் பராமரிக்கவும் எல்லா ஸ்டேஷன்களும் நல்ல நிலையில் காட்சி தரவும் நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரை, ரங்கசாமி.

அம்பேத்கர் Vs அருண்ஷோரி

Worshipping false Gods: Ambedkar, and the facts which have been erased என்ற நீண்ட தலைப்பில் பிரபல பத்திரிகையாளர் அருண்ஷோரி ஒரு சர்ச்சைக்குரிய புத்தகம் எழுதியிருக்கிறார். இதில் அருண்ஷோரி, அம்பேத்கர் மீது இரண்டு முக்கியமான விமர்சனங்களை வைத்திருக்கிறார்.

1. அம்பேத்கர் இந்தியா சுதந்தரம் அடைவதை விரும்பவில்லை. இந்தியாவின் சுதந்தரப் போராட்டத்தை அவர் முழுமனதாக ஆதரிக்கவில்லை.

2. இந்தியாவின் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிதாமகர் அம்பேத்கர் அல்ல!

இந்த இரண்டு கருத்துக்களுக்கும் ஆதாரமாக அம்பேத்கரின் எழுத்துக்களிலிருந்தே பல பக்கங்களில் மேற்கோள் காட்டியிருக்கிறார் அருண்ஷோரி. ஒரு மேற்கோள் நம்மை மிகவும் வியப்பில் ஆழ்த்துகிறது : 'அரசியல் நிர்ணயச் சட்டத்தை நான் எரித்து விட விரும்புகிறேன்' என்றாராம் அம்பேத்கர்!

சில வரலாற்றுச் சம்பவங்களையும் சுட்டிக் காட்டுகிறார் அருண்ஷோரி.



• அம்பேத்கர்

உதா: வார்தாவில் நடந்த காங்கிரஸ் கட்சி கமிட்டியில் 14.7.1942 அன்று 'வெள்ளையனே வெளியேறு' திட்டத்தைச் செயல்படுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது நடந்து ஆறு நாட்கள் கழித்து அத்திட்டத்தை ஒடுக்குவதற்காக வைஸ்ராய் எக்ஸிகியூட்டிவ் கௌன்சில் அமைக்கப்பட்டது. அதில் டாக்டர் அம்பேத்கரும் ஒருவராக இருந்து பிரிட்டிஷ் அரசுக்கு உதவினார் என்கிறார் அருண்ஷோரி.

எல்லாம் சரி. அம்பேத்கர் இதையெல்லாம் ஏன் செய்தார் என்றால், தலித் மக்களின் மேம்பாட்டிற்கு பிரிட்டிஷ் அரசு தான் உகந்தது என்று அவர் நம்பியது தான் காரணம் என்கிறார்கள் சில அரசியல் நிபுணர்கள்!

இதை அருண்ஷோரி எப்படி எதிர்கொள்வார் என்று தெரியவில்லை!

— காத்தவராயன்

கோயில் இடத்தில் தடாலடியாகத் த.மா.கா. கொடி!


■ கௌசல்யா

"சுதந்தரதினப் பொன்விழா ஆண்டின் போது இப்படி நடக்கலாமா?" என்று திருவல்லிக்கேணி இளைஞர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். விவகாரம் இதுதான்:

பார்த்தசாரதி கோயிலின் வெளி மண்டபத்தை ஒட்டி ஒரு கொடி பீடமும், அதன் மேல் இரும்புக்கொடிக் கம்பமும் இருந்தது. அந்தப் பகுதி இளைஞர்கள் சுதந்தர தினம், குடியரசு தினம் மற்றும் காந்தி ஜெயந்தி ஆகிய மூன்று தினங்களில் மட்டும்தான் அங்கு தேசியக் கொடி ஏற்றுவார்கள். மற்றபடி கொடிக் கம்பத்தில் வேறெந்தக் கொடியும் பறக்காது. ஆனால் சென்ற வாரம் த.மா.கா வினர் அந்தப் பழைய பீடத்தை இடித்து விட்டு, புதிதாக பீடம் எழுப்பி, ஜெயந்தி நடராஜனை வைத்து த.மா.கா கொடியை ஏற்றியிருக்கிறார்கள். இது தான் இளைஞர்களின் கோபத்துக்குக் காரணம்.



"அந்தக் கொடிக் கம்பத்துக்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு. 1930ல் தமிழ்நாடு காங்கிரஸுக்கு சத்திய மூர்த்தி தலைவரான பிறகு, 'பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குப் பணியவே கூடாது' என்ற தொடர் போராட்டத்தின் ஒரு பகுதியாக தேசியக் கொடி வணக்க நாள் கொண்டாட முடிவு செய்தார். அப்போது சத்தியமூர்த்தி தேரடித் தெருவில் குடியிருந்தார். அங்கிருந்து தொண்டர்களுடன் தேசியப் பாடல்களைப் பாடிக்கொண்டு இந்தக் கொடிக் கம்பம் இருக்கும் இடத்தருகே வந்தார். ஆனால் கொடியேற்றும் நிகழ்ச்சிக்குத் தடை போட்டிருந்த போலீஸ், கொடிக் கம்பமாக வைக்கப்பட்டிருந்த சவுக்குக் கொம்பைப் பிடுங்கி எறிந்துவிட்டது. அது மட்டுமல்லாமல் சத்தியமூர்த்தியையும், தொண்டர்களையும் கைது செய்தது. அந்த வருடம் கொடியேற்ற முடியாததால் அடுத்த வருடமே அங்கு கொடியேற்றினார் சத்தியமூர்த்தி.



• பறக்கிறது த.மா.கா. கொடி!

அதற்கப்புறம் சுதந்தரம் பெறும்வரை காங்கிரஸார் ராட்டைக் கொடி பறந்து கொண்டிருந்தது. அதன் பின்னர் தேசியக் கொடி ஏற்றப்பட்டு வந்தது" என்று சொன்னார் திருவல்லிக்கேணியின் பூர்வ குடிப் பிரமுகர் ஒருவர்.

த.மா.கா.வினரோ அந்த வாதங்களை நம்பத் தயாராக இல்லை. "சத்தியமூர்த்திக்கும் இந்தக் கொடிக் கம்பத்துக்கும் சம்பந்தமே கிடையாது. 1947, ஆகஸ்ட் 15ல், நள்ளிரவு, டெல்லியில் தேசியக் கொடி ஏற்றப்பட்டபோது இங்கேயும் அதே சமயத்தில் இப்போதிருக்கும் இடத்தில் கொடியேற்றி வைத்தவர் காமராஜ். அந்தப் பீடம் 15.8.47 அன்று லோக்கல் இளைஞர் காங்கிரஸால் நிறுவப்பட்டது. சுதந்தரம், குடியரசு மற்றும் காந்தி ஜெயந்தி நாட்களைத் தவிர மற்ற தினங்களில் அங்கு காங்கிரஸ் கொடிதான் பறக்கும். (இப்போது தமிழ்நாட்டில் காங்கிரஸ் என்றால் த.மா.கா.தானே!) அந்த இடத்தில் பல காங்கிரஸ் தலைவர்கள் கொடியேற்றி வைத்திருக்கிறார்கள். இங்குள்ள அ.தி.மு.க.வினரும், பா.ஜ.க.வினரும் இந்த விஷயத்தைப் பெரிதாக்க நினைக்கிறார்கள். ஏனென்றால் இங்கு இருக்கும் அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர் கோயில் நிலத்தை ஆக்ரமித்துக் கடைகள் கட்டியிருக்கிறார். அதை இடிக்க வேண்டும் என்று மாநகராட்சி சொல்லி விட்டது. அந்தக் கோபத்தில் இது போன்ற விஷயங்களை ஊதிப் பெரிதாக்கப் பார்க்கிறார்கள்" என்று நம்மிடம் சொன்னார் 89-வது வட்ட த.மா.கா. கவுன்ஸிலரான நாகராஜன்.

"கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்சிக் கொடி ஏற்ற அனுமதித்தது எப்படி?" என்று கோயில் தரப்பில் கேட்டபோது, "இங்கு கட்சிக் கொடி பறந்ததே கிடையாது. த.மா.கா.வினர் கொடிக்கம்பத்தின் பீடத்தைச் சரி செய்தபோது, வருகிற பொன்விழா சுதந்தர தினக் கொண்டாட்டத்துக்காகத்தான் அப்படிச் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த 17-ம் தேதி கட்சிக் கொடியேற்றப் போகிறார்கள் என்று தெரிந்ததுமே நாங்கள் உடனடியாகக் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றோம். அவர்கள் 'புகாரெல்லாம் எதற்கு? பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி விட்டார்கள். ஆனாலும் த.மா.கா.வினர் கேட்கவில்லை. நிலைமை சரியாகாவிட்டால் நாங்கள் இதுபற்றி மூப்பனாரிடமே புகார் தரப் போகிறோம்!" என்றார்கள்.

"இது போன்ற அடாவடிகளுக்கெல்லாம் மூப்பனார் உடந்தையாக இருக்கமாட்டார் என்பதே எங்கள் நம்பிக்கையும்!" என்றார்கள், திருவல்லிக்கேணிவாசிகளும்.

படங்கள்: **சௌந்தர்ராஜன்**

நமது ஆரோக்கியம் நம் கையில்

இயற்கை காந்த சிகிச்சை

நம் முன்னோர்கள் இயற்கை வாழ்வு வாழ்ந்து வியாதி இல்லாமல் நல்ல திடகாத்திரமாக, நீண்ட காலம் வாழ்ந்தார்கள். தற்பொழுது சுற்றுபுறசூழல் கேட்டினாலும் நல்ல குடிநீர் கிடைக்காததாலும் மரங்கள் அழிவினால் நல்ல காற்று கிடைக்காததாலும் வியாதிகள் அதிகமாகி அவஸ்தைபடுகிறோம்.

இதை தவிர்க்க இயற்கை உணவு உண்டு வந்தால் ஆரோக்கியத்துடன் வாழலாம். இயற்கை உணவு என்பது பச்சை காய்கறி சாலட், மூலிகைகள் ஆவன. அத்துடன் இயற்கை முறையான **காந்த சிகிச்சை** மேற்கொண்டால் வியாதிகள் குணமாகி நல்ல ஆரோக்கியத்துடன் வாழலாம்.

நாம் தூங்கி எழுந்தவுடன் இரண்டு கைகளையும் தேய்த்துக் கொள்வதை பார்த்திருப்பீர்கள். இரண்டு உள்ளங்கைகளிலும் இரண்டு உள்ளங்கால்களிலும் நம் தேகத்திலுள்ள எல்லா இரத்தக் குழாய்களும் முடிவடைகிறது. கைகளை தேய்த்துக் கொள்வதால் இரத்த ஓட்டம் சுறுசுறுப்படைகிறது. வாக்கிங் போவதும் அதற்காகவே.

இதே அறிவியல் அடிப்படையில் அமைந்த நவீன, எளிய மருந்தற்ற பாதுகாப்பான முற்றிலும் உயர்ந்த **காந்த சிகிச்சை** முறையினால் நம் உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும் காந்தம் படும்போது இரத்தத்தில் உள்ள இரும்பு சத்தினால் கவரப்பட்டு இரத்த ஓட்டம் சரிவர நடைபெற செய்கிறது இரத்தத்தில் படிந்துள்ள மாசுக்களையும் நீக்குகிறது.

இந்த காந்த சிகிச்சைக்கு வியாதியின் தீவிர தன்மையை பொறுத்து ரூ.1100/- முதல் ரூ.1500/- வரை செலவாகும்.

இந்த காந்த சிகிச்சையினால் பக்க விளைவுகள் கிடையாது. நமக்கு நாமே நம் வீட்டிலேயே ஓய்வு நேரத்தில் செய்து கொள்ளலாம். எல்லா வியாதிகளையும் குணமாக்கிக் கொள்ளலாம்.

நம் தேகம் பஞ்சபூத சேர்க்கையால் உண்டானது. அதற்கு பஞ்சபூத சத்துக்கள் அடங்கிய மூலிகை காயகல்ப்ப மருந்து உட்கொண்டால் தேகம் வியாதிகள் வராமல் சிரஞ்சீவி தன்மை பெறும், வியாதிகளையும் சீக்கிரம் குணப்படுத்தும்.

காயகல்ப்பம் 30 நாள் மருந்து
பஸ்பங்கள் சேர்ந்து காப்ஸீலில் } ரூ.200

மேற்கொண்டு இலவச ஆலோசனை பெற கீழ்கண்ட விலாசதாரரை அணுகவும். தபால் போக்குவரத்து கிடையாது.

Dr.M.V.SUBRAMANIAN, R.I.M.P., D.Mag.
Magneto - Therapy Consultant
6, 33rd Street, Ashoknagar, Madras - 83.
(Behind Mosque) Ph. 4897523

■ கோபால்ஷேகர்

கவலையா?

"கவலையில்லாமல் இருப்பது என்றால் என்ன? மகிழ்ச்சியாக இருப்பது. எனவே கவலையை விரட்ட வேண்டு மானால் அதற்கு மிக எளிமையான வழி மகிழ்ச்சியோடு இருப்பதுதான்" இப்படி தன் நண்பன் கூறியதும் ராம்பிரகாஷுக்கு மிகவும் எரிச்சல்.

நோய் வாய்ப்பட்ட தந்தை, கல்லூரியிலோ நினைத்த கோர்ஸ் கிடைக்கவில்லை, பட்டப் படிப்பை




முடித்த பிறகு நீண்டு கொண்டே போன வேலை தேடும் படலம், ஒரு வழியாய் கிடைத்த வேலை தொழிலாளர் பிரச்னை காரணமாக நிலைத்திருக்குமா என்ற சந்தேகம். இப்படியொரு நிலையில் ராம்பிரகாஷால் எப்படிக் கவலைப் படாமல் இருக்க முடியும்? போதாக்குறைக்கு நண்பன் வேறு அச்சுபிச்சென்று ஆலோசனை செய்கிறான். மகிழ்ச்சியாய் இருந்தால் கவலை போய் விடுமாம்.

ஆனால் விவரமானவர்களுக்குத் தெரியும் அந்த நண்பன் கூறியதில் உள்ள அடிப்படை உண்மை. "கவலைப்படக்கூடாது" என்ற எதிர்மறை எண்ணத்தைவிட, "மகிழ்ச்சியாக இருப்பேன்" என்ற பாஸிடிவ் எண்ணம்தான் உதவும்!

மேற்கூறிய சூழலில் வேலை பற்றிய பிரச்னை இல்லை என்றால் ராம்பிரகாஷுக்குக் கவலை தீர்ந்துவிடும் என்பது நிச்சயமா? பெரும்பாலும் தீர்ந்துவிடாது. "வேறு சிறந்த வேலை கிடைத்திருக்கக் கூடாதோ" என்றோ, "கல்லூரியில் மட்டும் நான் விரும்பிய கோர்ஸே எனக்குக் கிடைத்திருந்தால்" என்றோ வேறொரு கவலைக்குத் தாவுவதுதான் மனித மனம்.

மகிழ்ச்சி என்பது சௌகரியமல்ல. இரண்டு நாட்களில் தூக்கு மேடை ஏறவிருக்கும் கைதிக்கு பங்களாவும், ஏ.சி., காரும் கொடுத்தால் அவன் மகிழ்ச்சியாக இருப்பானா? பின் மகிழ்ச்சியாக இருக்க என்ன வழி? இதோ சில அறிஞர்கள் அவ்வப்போது தந்த வைட்டமின்களும், டானிக்குகளும். உங்களுக்கு எதெது ஒத்து வருகிறதோ அதையெல்லாம் கடைபிடித்து பயன்பெறுவது உங்கள் சாமர்த்தியம்!


- வாழ்க்கையில் லட்சியம் இருக்கலாம். அதை அடைய வேண்டுமென்ற எதிர்பார்ப்புகளும் இருக்கலாம். ஆனால் நிறைய விஷயங்களில் நிறைய



எதிர்பார்க்காதீர்கள். எது நிறைவேறவில்லை என்றாலும் மனத்தில் சோர்வு ஏற்படும்.

- அலுவலகத்தில் நுழைந்தவுடன் டிபன் பாக்ஸைக் கீழே வைக்கும் போதே, வீட்டுக் கவலைகளையும், பிரச்னைகளையும் மறந்து விடுங்கள். அதே போல் வீட்டுக்குள் நுழைந்தவுடன் செருப்பைக் கழற்றும் போதே அலுவலகப் பிரச்னைகளையும் கழற்றிவிடுங்கள்.

- நகைச்சுவை மிகுந்த ஒரு புத்தகத்தைப் படியுங்கள். அல்லது சிரிப்பூட்டும் ஓர் ஒலிநாடாவைக் கேளுங்கள்.



போயே போச்!

- பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட பின்னணியில்தான் பலருக்கும் மூட் அவுட்டாகிறதாம். வீட்டில் குறிப்பிட்ட அறை, பூங்கா, குறிப்பிட்ட உறவினரின் வீடு - இப்படி எந்த இடத்தில் இருக்கும் போது கவலை பெரும் பாரமாக உங்களை அழுத்துகிறது என்பதை யோசித்துப் பாருங்கள். அந்த இடத்தை முடிந்தவரை தவிர்த்துவிடுங்கள்.

- குறிப்பிட்ட ஏதாவதொரு பிரச்னை கவலையைத் தருகிறது என்றால், அந்தப் பிரச்னையால் அதிகபட்சம் என்ன பாதிப்பு நேர்ந்துவிடும் என்பதைக் கலங்காமல் யோசித்து, அந்த சூழ்நிலைக்கு மனதைத் தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு இந்த பாதிப்பைத் தவிர்க்க அல்லது குறைக்க என்ன செய்யலாம் என்று யோசியுங்கள். இப்போது தெளிவாக யோசிக்க முடியும்.

- இன்னொருவருடனான உறவுச் சிக்கல் என்றால், உங்கள் மீது தவறு உண்டா என்பதை நிதானமாக யோசியுங்கள். ஆம் என்று தோன்றினால் தவறை ஒத்துக் கொண்டு மன்னிப்புக் கேளுங்கள். பிரச்னை தீர்ந்துவிடும்.

- சைக்கிள், ஸ்கூட்டர், கார் என்று ஒவ்வொன்றுக்காகவும் அடுத்தடுத்து ஆசைப்பட்டானாம் ஒருவன். காரில் செல்லும்போது மரத்தில் மோதி இரு கால்களையும் இழந்து விட்டான். "எனக்கு மட்டும் இரண்டு கால்கள் இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று பெருமூச்சு விட்டபடி மீதி வாழ்க்கையைக் கழித்தானாம். ஒரு குறிக்கோளை அடைய முழு தம் பிடித்து உழைக்க வேண்டும்; போட்டியாளர்களை வீழ்த்த வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் சரியான அடுத்த வாய்ப்பு வரும்வரை மனம் தளராமல் "உனக்கும் கீழே உள்ளவர் கோடி. நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு" என்பதை எண்ணி, தற்போதைய வாழ்வின் சிறப்புகளை பட்டியலிட்டு அமைதி கொள்ளலாம்.

- மற்றவர்களுக்கு சிறு சிறு உதவிகள் செய்வது, குறும்பான ஐடியா எதையாவது செயல்படுத்துவது, ஒரு குட்டித் தூக்கம் - இவற்றில் ஒன்று கூட உங்கள் கவலையை மறையச் செய்யலாம்!

வெளிச்சத்தின் விலாசம்

16

அசிரிய மன்னன் நெபுகாத்நெசாரின் படைத் தலைவனான ஒலோபெரின், கண்ணுக்கெட்டிய நாடுகளையெல்லாம் தனது கால்களில் விழ வைத்துக் கொண்டிருந்தான். ஒலோபெரினின் படைகள் இதோ அருகில் வந்துவிட்டன என்று அறிந்து, அடைக்கலம் கொடுங்கள் என்று அழுது புலம்புகிற மக்களையும் ஒலோபெரின் அழித்தான். நெபுகாத்நெசாரை மட்டுமே கடவுளாக வழிபட வேண்டுமென்கிற அரச கட்டளையைத்தான் ஒலோபெரின் செயல்படுத்தினான். ஆகவே சரணடைகிற நாடுகளாக இருந்தாலும், சண்டைக்கு நிற்கிற நாடுகளாக இருந்தாலும் கோயில், குளங்களை அழிப்பதை அவன் குறிக்கோளாகக் கொண்டான்.

தன்னை எதிர்த்து நிற்பதற்கு எவரும் இல்லை என்பதை உறுதி செய்த நிலையில் ஒலோபெரின் கவனம் யூதேயா நாட்டில் வாழ்ந்த இஸ்ராயேலர்கள் மீது விழுந்தது. இஸ்ராயேலர்களோ, ஒலோபெரின் இரக்கம் என்முனை அளவுகூட இல்லாத அரக்கன் என்பதை ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தார்கள். ஆகவே அடுத்ததாக அவன் தங்களை நாற்புறமும் வளைத்து நிற்கிறான் என்று கேள்விப்பட்டதும் அவர்கள் அஞ்சி நடுங்கினர்.

பிறகு ஆண்டவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, 'மனிதன் காற்றைச் சுவாசிப்பதால் வாழ்வதில்லை; நம்பிக்கையைச் சுவாசிப்பதால் வாழ்கிறான்' என்றபடி ஒலோபெரின் நடத்தி வந்த அசீரியப் படைகளை எதிர்த்துப் போரிடுவது என்கிற முடிவிற்கு இஸ்ராயேலர்கள் வந்தார்கள். மலைப் பாதைகளை மூடி விட்டார்கள்; மலை உச்சிகளில் அரண்களை அமைத்து விட்டார்கள்; சம வெளியில் வழித்தடைகளை அமைத்து விட்டார்கள், இஸ்ராயேலர்கள் என்று கேள்விப்பட்டதும் ஒலோபெரினுக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லாமல் போனது. இருப்பினும் எல்லா இனத்தாரும் தனக்கு அடிபணிந்தபோது, தன்னை ஒரு ஆளாகக் கூடக் கருதாத இஸ்ராயேலர்கள் யார், எங்கிருந்து வந்தவர்கள், எப்படிப்பட்டவர்கள் என்று அறிந்து கொள்ளுவதில்



ஆர்வம் காட்டினான்.

அப்போது அம்மோனியர் என்ற இனத்தாரின் தலைவரான அக்கியோர் பேசினார்.

"விண்ணகத் தந்தையான ஒரே இறைவனை வழிபடுகிறவர்கள் இவர்கள். கடவுள் அவர்களுக்கு அமைத்துக் கொடுத்த வழிமுறைகளிலிருந்து மாறி நடக்கும்போதெல்லாம் இவர்கள் தோல்வி அடைவார்கள்; ஆனால், இப்போதோ மனம் திருந்தி நல்வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆகவே, தலைவர் பெருமானே! இம்மக்களிடத்தில் தவறுகள் தென்பட்டால் இவர்களை அடிமை கொள்வது எளிது; இவர்களைக் கடவுளின் பாதைகளில் நேர்மையான வழிகளில் நடக்கிறவர்களாக இருந்தால் இவர்களை அடிமை கொள்ளுவது அவ்வளவு எளிதல்ல. ஆகவே இவர்களின் இறைவனின் பாதுகாப்பைக் கடந்து ஒருபோதும் நம்மால் வெற்றி பெற இயலாது; ஆகவே இவர்களை இப்படியே விட்டு விடுவதுதான் எளிது" என்றார்.

அக்கியோர் சத்தியத்திற்குச் சாட்சியம் சொன்ன சரித்திரத் தலைவர். படைத் தலைவனுக்குப் பிடித்த மாதிரி பாகாய்ப் பேசத் தெரியா விட்டால் சிரமம் வந்து சேருவது இயற்கை தானே! அக்கியோரைத் துரோகி என்றான் நெபுகாத் நெசாரின் படைத்தலைவன். நெபுகாத் நெசார் ஒருவர்தானே கடவுள்!

கழுத்தை நெரித்த கனகாம்பரம்!





''சோப்பு போட்டுப் பார்த்தேன், மனுஷன் மசியலே.''
''அப்புறம்...?''
''தோய்ச்சி எடுத்துட்டேன்!''
– வலங்கைமான் நூர்தீன்

இஸ்ராயேலர்களைக் காப்பதற்கு வேறொரு கடவுள் விண்வெளியிலிருந்தா வர இயலும்? அக்கியோர் தனது வாள் வலியை அவமானப்படுத்துகிறார் என்பதுதான் ஒலோபெரினின் திண்ணமான எண்ணம். ஆகவே "இஸ்ராயேலர்களுக்காகப் பரிந்து பேசிய அக்கியோரை இஸ்ராயேலர்களிடமே கொண்டு சென்று விட்டு விடுங்கள். இஸ்ராயேலர்கள் அழிகிறபோது இவரும் சேர்ந்து அழியட்டும்" என்று உத்தரவிட்டான் ஒலோபெரன்.

அக்கியோரைப் பிடித்து பெத்தூலியா என்கிற நகரத்தின் வெளிப்புறத்துச் சமவெளியில் கட்டிப் போட்டு விட்டு வந்தார்கள் நெபுகாத் நெசாரின் படை வீரர்கள். இதை அறிந்த இஸ்ராயேலர்கள் அக்கியோரைக் கட்டுகளை அவிழ்த்து நகரப் பெரியோர்கள் முன் அவரை நிறுத்தினர். அவரோ, ஒலோபெரினின் அவையில் நடந்ததை ஒன்றும் ஒழியாமல் எடுத்துரைத்தார். அதைக் கேட்டு இஸ்ராயேலர்கள் அஞ்சி நடுங்கினாலும் ஆண்டவரை நோக்கித் தங்கள் குரலை உயர்த்தினார்கள். ஒலோபெரின், பெத்தூலியா மீது தனது முற்றுகையைத் தொடங்கினான். இரண்டாம் நாள் நடைபெற்ற குதிரைப் படைகளின் அணிவகுப்பைப் பார்த்தே இஸ்ராயேலர்கள் குலை நடுங்கினர். நகரத்தைத் தாக்குவதற்காக ஒலோபெரின் தயாரானபோது படை வீரர்கள் அவனிடம் வந்து "வழக்கமாக நாடு பிடிக்கும் நமது திட்டம் இங்கே பலன் தராது போகலாம்; காரணம் இஸ்ராயேல் மக்கள் ஈட்டிகளை அல்ல; இந்த மலை உச்சிகளையே நம்பி இருக்கின்றனர். நீரூற்றுகளை அடைத்துவிட்டால் தாகத்திலேயே இறந்து விடுவார்கள். தாகத்தாலேயே அழிந்தொழியத் தக்கவர்களைத் தாக்கி ஏன் தகர்க்க வேண்டும்? நீர் உமது கூடாரத்திலேயே இரும்; மற்றவற்றை நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்றார்கள்.



← சர்ஃப் போட்டா?
வீல் போட்டா?

படை வீரர்களும், பொதுமக்களும் சொன்ன வண்ணமே எல்லாம் நடைபெற வேண்டுமென்று ஒலோபெரின் ஆணையிட்டான்.

தங்களது சமவெளியில் பகைவர்கள் பாசறைகள் அமைத்து, நீரூற்றுகளை அடைத்துக் கொண்டதைப் பார்த்து இஸ்ராயேலர்கள் அழுது புலம்பினார்கள். அப்போது மூப்பர்களாக இருந்த பெரியோர்களின் அவையின் முன்னே அனைவரும் கூடி அழுதனர். அப்போது, அப்பெரியோர்கள் "நமது பாவங்களும், பழிச் செயல்களும் நமக்கு எதிராக நிற்கின்றன. நமது பகையாளிகளிடம் நம்மைக் கையளிக்க வேண்டுமென்று கர்த்தர் தீர்மானித்து விட்டதாய்த்தான் தோன்றுகிறது. நமது நாடு நகரங்களை அசீரியர்கள் அழிப்பதற்கு விட்டுவிட்டு, நாம் அடிமைகளாகி உயிர் பிழைத்திருப்பதே உத்தமம்" என்று பேசினார்கள். அப்போது கூட்டத்திலிருந்து ஊசியா என்பவர் பேசினார். "இன்னும் ஐந்து நாட்கள் பொறுத்திருப்போம்; அதற்குள் ஆண்டவருடைய உதவி நமக்குக் கிடைக்காவிட்டால் இப்பெரியோர்கள் சொன்னபடியே நாம் அசீரியப் படைகளின் அடிமைகளாகி விடுவோம்" என்றார். எல்லோரும் தற்காலிகமாக ஆறுதல் பெற்று கலைந்து போனார்கள். எனினும் தங்கள் இறைவனை நோக்கி ஒரே குரலில் வேண்டுவதை அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை.

அக்காலத்தில் தனது இனத்தாருக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை எல்லா இஸ்ராயேல் பெண்களையும் போலவே யூதித்து என்பவளும் கேள்விப்பட்டாள். இவளோ கைம்பெண். தனது இனத்து மக்களுக்கு நேரப் போகிறவைகளை நினைத்து யூதித்து வெகுவாகக் கலங்கினாள். உடனே தனது பணிப் பெண்ணை அனுப்பி நகரத்தின் மூப்பர்களான ஊசியா, காபிரி, கார்மி ஆகியோரை வரவழைத்தாள். அவர்கள் வந்து சேர்ந்ததும் யூதித்து தனது பலத்தையெல்லாம் ஒன்றுகூட்டி ஓங்கிய குரலில் பேசினாள். "இன்று மக்களிடம் நீங்கள் கூறிய சொற்கள் முறையற்றவை. ஆண்டவர் தம் மனத்தை மாற்றி, குறித்த நாளுக்குள் உதவி அளிக்காவிடில் இந்த நகரை நம் எதிரிகளிடம் ஒப்படைக்கப் போவதாக உறுதி கூறி கடவுளின் மீது ஆணையிட்டிருக்கிறீர்கள். இன்று கடவுளைச் சோதிக்க நீங்கள் யார்? மனிதர் நடுவே கடவுளுக்கு மேலாக உங்களையே உயர்த்திக் கொள்ள நீங்கள் யார்? இப்போது எல்லாம் வல்ல ஆண்டவரை நீங்கள் சோதிக்கிறீர்கள். ஆகவே நீங்கள் எதையும் என்றுமே அறிந்து கொள்ளப் போவதில்லை; மனித மனம் நினைப்பதையே


அறிய முடியாத நீங்கள், கடவுளை அவரின் போக்கை எவ்வாறு அறிந்து கொள்ள இயலும்? நம்மைப் பாதுகாக்கவோ, நமது பகைவர்களை அழித்துவிடவோ எப்போதும் நமது ஆண்டவர் ஆற்றல் படைத்தவர். கடவுளின் திட்டங்களுக்கு நிபந்தனை விதிக்காதீர்கள். நமது சகோதரர்களின் உயிர்களும், இறைவனது தேவாலயமும் நமது பாதுகாப்பிலேயே உள்ளன. நம் மூதாதைகளான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைச் சோதித்தது போல அவர் நம்மையும் சோதிக்கிறார்'' என்றாள்.

அதற்கு ஊசியா, யூதித்திடம் "நீ சொன்னதெல்லாம் உண்மை. உன் சொற்களை மறுத்துப் பேசுவார் எவரும் இல்லை. உனது ஞானம் இன்றுதானா முதன்முறையாக வெளிப்படுகிறது? நீ நல்ல உள்ளம் கொண்டவள். நீ இறைவனிடம் கையேந்தினால் நமது நாட்டின் நீர்நிலைகள் நிரம்பும்; ஆண்டவர் நமது மக்களின் தாகத்தைப் போக்குவார்" என்றார்.

அதற்கு யூதித்து "நான் சொல்லுவதைக் கேளுங்கள். மூப்பர்களே! நீங்கள் இன்று இரவு நகர வாயில் அருகே வந்து நில்லுங்கள். வாயிலைக் கடந்து நானும் எனது பணிப்பெண்ணும் வெளியேறப் போகிறோம். எங்கே போகிறோம் எதற்காகப் போகிறோம் என்று மாத்திரம் கேட்க வேண்டாம். பகைவர்களிடம் நகரைக் கையாளிக்கப் போவதாக நீங்கள் குறிப்பிட்ட நாளுக்குள்ளாக ஆண்டவர் நம் மக்களை விடுவிப்பார்; வேறு ஒன்றும் இப்போது கேட்காதீர்கள்'' என்றார். அதற்கு ஊசியாவும் மூப்பர்களும் "நலமே சென்று வா'' என்று அவளையும், பணிப் பெண்ணையும் வழியனுப்பி வைத்தார்கள்.

யூதித்து தமது கைம்பெண் கோலத்தைத் துறந்தாள். தமது பட்டாடைகளில் தோன்றினாள். ஆரண்ய அழகெல்லாம் ஒன்று திரண்டது போன்ற அவளது அழகைக் கண்டவர்கள் ஆண்டவரைப் புகழ்ந்தார்கள். மூப்பர்களும், நகரின் பெரியோர்களும் பார்த்திருக்கவே அன்று இரவு யூதித்தும் அவரது பணிப்பெண்ணும் அந்த நகர வாயிலை விட்டு வெளியேறினார்கள்.

யூதித்தும், அவளது பணிப்பெண்ணும் சமவெளியைக் கடந்து காட்டுப் பகுதிக்கு வந்த போதே ஓலோபெரினின் படைகள் அவர்களைச் சுற்றி வளைத்தன. 'நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?'' என்கிற கேள்விகளுக்கே இடமில்லாமல் யூதித்து, 'நான் ஒரு எபிரேயப் பெண்; எங்கள் மக்கள் உங்களது படைத்தலைவரான ஓலோபெரின் வாளுக்கு இரையாக்கப் போகிறார்கள் என்பதை நான் அறிவேன்.



''நான் உட்கார்ந்த நாற்காலியில வேற யாருமே உட்கார முடியாதுன்னு சவால் விட்டிருக்காரே?''

''ஆமா... பதவி துறக்க நேர்ந்தா அந்த நாற்காலியை உடைக்க அடுப்புல வச்சிட்டு வாராம்!''

– சீக்காழி வி. ரேவதி



சே! செயல்வீரர்னா இப்படில்ல இருக்கணும்!

சரணடைந்து விட வேண்டும்; சமாதானம் பேச வேண்டும் என்று எவ்வளவோ எடுத்துச் சொன்ன பிறகும் என் மக்கள் கேட்டார்களில்லை. ஆகவே உங்களது படைத் தலைவரான ஓலோபெரினைச் சந்தித்து உண்மை நிலையை அவருக்கு உணர்த்த வேண்டும். மட்டுமின்றி உங்கள் வீரர்களில் ஒருவர்கூட உயிரிழக்காமல் யூதேயா முழுவதையும் எப்படி, எந்த வழியில் அடிமையாக்குவது என்கிற வழியையும் நானே காட்டப் போகிறேன்'' என்றாள். அந்த வீரர்கள் யூதித்தையும், பணிப்பெண்ணையும் ஓலேபேரினின் கூடாரத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வானத்து நிலவு வழி தவறி வந்து விட்டதைப் போல அமைந்திருந்த யூதித்தைப் பார்த்து ஓலேபெரின் உறைந்தே போனான். யூதித்து படைத்தலைவனிடம் துணிச்சலாகப் பேசினாள். ''நான் உமது கூடாரத்திற்கு வெளியே ஒரு பக்கத்தில் தங்கிக் கொள்ளுவேன்; இரவில் மாத்திரம் இறைவனைப் பிரார்த்திக்க சமவெளிக்குப் போவேன்; நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேளும்; அக்கியோர் உமது ஆட்சி மன்றத்தில் சொன்னதில் உண்மை இருக்கிறது. எம் தலைவரே! மேலும் கேளும்; இஸ்ராயேல் மக்கள் பாவம் செய்தால் ஒழிய தோற்கடிக்கப்பட மாட்டார்கள். ஆனால் தங்களது வருவாயில் பத்தில் ஒரு பங்கினைக் கடவுளுக்குக் காணிக்கையாகத் தர வேண்டும் என்கிற திருச்சட்டத்தைக்கூட மீறி விட்டார்கள். ஆகவே, எம் தலைவரே! அவசரப்பட வேண்டாம். ஒவ்வொரு இரவிலும் பள்ளத்தாக்கில் நின்று இறைவனிடம் வேண்டுவேன்.

இஸ்ராயேலர்கள் பாவம் செய்கிறபோது அவர் எனக்கு அறிவிப்பார்" என்றாள். அதற்கு ஓலே பெரினும் அவனது பணியாளர்களும் "உலகத்தின் ஒருமுனை முதல் மறுமுனைவரை உன்னைப் போல அழகும், ஞானமும் வாய்க்கப் பெற்றவள் இல்லவே இல்லை" என்றார்கள்.

அன்று இரவு முதல் யூதித்து பள்ளத்தாக்கிற்குப் போவதும் வருவதுமாக இருந்தாள்.

நாலாவது நாள் ஓலோபெரின் தமது பணியாளிடம் யூதித்தைத் தனியாகத் தன்னைச் சந்திக்குமாறும் தனது ஆசைக்கு இணங்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். அதற்கென்ன ஓலோபெரின் மஞ்சத்தில் இடம் கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே படைத் தலைவனின் சமூகத்திற்கு யூதித்தும், பணிப்பெண்ணும் புறப்பட்டார்கள். ஓலேபெரின் தன் சதையைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டான். யூதித்து இவ்வளவு விரைவாக தனது இச்சைக்கு இணங்குவாள் என்று அவன் நினைக்கவே இல்லை.

ஓலேபெரின் அந்த அழகு தேவதையைத் திராட்சை இரசத்திலேயே குளிப்பாட்டினான். அவளிடம் தன்னையே இழந்தான். மட்டு மீறிக் குடித்தான். பொழுது சாய்ந்தபோது பணியாளர்கள் ஒவ்வொருவராக வெளியேறினார்கள். யூதித்து பணிப்பெண்ணையும் வெளியே காத்திருக்குமாறு அனுப்பினாள். மயங்கிக் கிடந்த ஓலேபெரினின் கண்களுக்கு யூதித்து ஆயிரம் பெண்களின் ஆனந்த அணிவகுப்பாகத் தெரிந்தாள். யூதித்து என்றுமில்லாத துணிவை வரவழைத்துக் கொண்டாள். படுக்கையின் மேல் பாகத்தில் தொங்கிய ஓலோபெரினின் வாளை எடுத்தாள். வலிமையையெல்லாம் ஒன்று சேர்த்து இருமுறை அவனது தலையை வாளால் வெட்டித் துண்டித்தாள். பிறகு அவனது தலையற்ற முண்டத்தைக் கீழே தள்ளி விட்டாள்.

எவரும் அறியாமல் ஓலோபெரினின் தலையை ஒரு பையில் வைத்து எடுத்துக் கொண்டு யூதித்தும் அவளது தோழியும் கூடாரத்தைக் கடந்து சமவெளிக்குச் சென்றார்கள். இரவுக் காவலர்கள்கூட இவ்விருவரையும் சந்தேகிக்கவில்லை. காரணம் இரவு நேரங்களில் இப்படித்தான் சமவெளிக்குச் சென்று இருவரும் கடவுளிடம் கையேந்துவார்கள்.

காலையானதும் இஸ்ராயேலர்கள் மலையிலிருந்து பகைவர்களை விரட்ட மிகுந்த உற்சாகத்தோடு இறங்கினார்கள். அசீரியப் படைகளுக்கும் மற்றவர்களுக்கும் இஸ்ராயேலர்களின் நடவடிக்கை ஆச்சரியமாக இருந்தது. அசீரியப் படைகள் ஒன்று சேர்ந்தன. "நம் தலைவரை எழுப்புங்கள்" என்று அவர்கள் கூக்குரலிட்டனர். ஒருவன் உள்ளே சென்று கூடாரத்தின் கதவைத் தட்டினான். ஓலோபெரின் யூதித்தோடு உறங்குகிறான் என்று நினைத்தார்கள். மறுமொழி ஒன்றும் வராததால் கதவைத் தள்ளி எட்டிப் பார்த்தான். அவன் கண்ட காட்சி இரத்தத்தை உறைய வைப்பதாக இருந்தது. ஓலோபெரினின் உயிரற்ற உடல் குப்புற விழுந்து கிடந்தது. யூதித்தை எங்கெங்கோ தேடினார்கள். எங்குமே அவள் காணப்படவில்லை. கூடாரம் முழுவதும் சோகம் படர்ந்தது; அச்சம் ஆட்சி நடத்த ஆரம்பித்தது. தலைவனின் தலையை எபிரேயப் பெண் கொய்து விட்டாள் என்று அறிந்ததும் அசீரியப் படைகள் திக்கித் திணறின. ஆளுக்கொரு திசையில் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடின. இஸ்ராயேல் மக்கள் எளிதாக வெற்றி பெற்றார்கள். தன்னந்தனியளாகத் தங்களைக் காப்பாற்றிய யூதித்தைத் தலைமுறைகள்தோறும் அவர்கள் போற்றினார்கள்.

(தொடரும்)



"நாளைக்கு நம்ம வெட்டிங் டே. என்ன செய்யலாம்?"

"நமக்கு கல்யாணம் பண்ணி வெச்ச தரகரை உதைச்சிட்டு வரலாம்!"

– கொங்கணாபும்
வே. செந்தில்

உத்தமமான காரியம்! →



கல்கி கன்ஸல்டன்ஸி

■ வி. கோபாலன்

செய்வாரா சிதம்பரம்?

"ஆயில் பூல் கணக்கை நேராக்க வேண்டுமானால் பெட்ரோலிய பொருட்களின் விலையை உயர்த்துவது தவிர வேறு வழியில்லை. 'வந்தே மாதரம்' என்று விலை உயர்வுக்குத் தயாராகுங்கள்...''- சில வாரங்களுக்கு முன் இவ்வாறு எழுதியிருந்தேன்.

மத்திய அரசு விலையை ஏற்றுகிற வழியைக் காணோம். இடதுசாரி கட்சிகள் மட்டுமின்றி காங்கிரஸும் விலை உயர்வை எதிர்ப்பதால் ஐ.மு. அரசு அந்த முடிவை எடுக்கவே இல்லை. ஆனால், கடந்த சில தினங்களாக, இந்த ஆயில் பூல் கணக்கு சிக்கலைத் தீர்க்க அனைத்துக் கட்சிகளும் ஏற்கும் ஒரு ஃபார்முலா உருவாகியுள்ளதாகச் செய்தி அடிபடுகிறது.

அது என்ன ஃபார்முலா...? அரசாங்கம் ஆயில் பூலுக்குத் தர வேண்டிய தொகை 19,000 கோடி ரூபாய். இந்தக் கடனுக்கு முழுப் பொறுப்பு ஏற்று கடன் பத்திரங்களையும் பாண்டுகளையும் சம்பந்தப்பட்ட எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கும். பணத்துக்குப் பதிலாகப் பத்திரங்கள்! எண்ணெய் கம்பெனிகள் இந்தப் பத்திரங்களைச் 'சந்தையில்' விற்று 'காசாக்கிக் கொள்ளலாம். பத்திரங்களுக்கு வழங்கப்படும் வட்டி விகிதம் மற்றும் அதன் கால வரம்பு இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

மிகச் சிக்கலான பிரச்னையை மிகச் சுலபமாகத் தீர்த்துவிட்டது போல் ஒரு தோற்றத்தை அளிக்கும் இந்த முடிவு சரியானதல்ல என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்து. இதன் விளைவுகள் குறித்து யோசனையின்றி, தாற்காலிகமாகத் தப்பித்தால் போதும் என்று செயல்படுகிறது ஐ.மு. அரசு.

19,000 கோடி ரூபாய் கடனை அரசாங்கத்தின் தலையில் தூக்கி வைக்கும்போது என்னாகிறது...? அந்தச் சுமை அப்படியே மக்களின் தோள்களுக்கு அல்லவா மாற்றப்படுகிறது? இப்போது பெட்ரோலும் டீசலும் உபயோகப்படுத்தும் குறிப்பிட்டசாராருக்காக எதிர்கால சந்ததியினரை, இந்தக் கடன் சுமைகளை ஏற்கச் சொல்வது என்ன நியாயம்?

ஆனால், நித்திய கண்டம் பூர்ண ஆயுள் என்று அவதியுறும் மத்திய அரசாங்கம், நியாய அநியாயங்களை எடை போட்டுப் பார்க்கக்கூடிய நிலையிலா இருக்கிறது?!



மற்றொரு கவலைதரும் செய்தியும் சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. கடந்த மூன்று மாதங்களில் (காலாண்டு), அரசாங்கம் எதிர்பார்த்த அளவு வருவாய் இல்லை. குறைவாகவே வசூலாகி இருக்கிறது. குறிப்பாக சுங்க வரி மற்றும் தீர்வை வசூல் மிக மந்தமாக இருந்திருக்கிறது. இதே போக்கு அடுத்த ஒன்பது மாதங்களுக்கும் நீடித்தால் நிதியமைச்சர் என்ன எதிர்பார்ப்புகளுடன் திட்டமிட்டு வரவு செலவுக் கணக்கை அமைத்தாரோ... அது அப்படியே தவிடுபொடியாகி விடப் போகிறது.

தனியார் நிறுவனங்கள் வழக்கமாக அரையாண்டு நிதி அறிக்கையை வெளியிடுவதுண்டு. மத்திய அரசும் அதே போல் செப்டெம்பர் மத்தியில் நிதிநிலைமையை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் எதிர்காலத்தை எப்படிச் சமாளிப்பது என திட்டமிட வேண்டும். சிதம்பரம் செய்வாரா...?

எங்கள் விற்பனையில்

தாமாகவே பூஜிக்க, வழிபட

வ.எண்.	பெயர்	விலை

விநாயகரை துதிக்க தேவையான புத்தகங்கள்

25.	வினைகள் தீர்க்க விநாயகர் அகவல், கவசம், கார்ய ஸித்தி மாலை	2.50
26.	விக்னங்கள் அகல விநாயக சதுர்த்தி பூஜை, கணபதி அதர்வசீர்ஷ உபநிஷத்	3.50
120.	ஸங்கடங்கள் நீங்கி மகிழ்ச்சியுடன் வாழ ஸங்கட ஹர சதுர்த்தி வ்ரத பூஜை	5.00
40.	துன்பம் தீர்க்க லகு கணபதி ஹோமம்	2.00

தினஸரி வழிபடவும், குறிப்பாக விநாயகர் சதுர்த்தி அன்று வழிபடவும் பூஜிக்கவும் உகந்த கேஸட்டுகள்

விநாயகர் சதுர்த்தி விரத பூஜை ஸமஸ்–தமிழ் குறிப்பு	GCT 6009	36.00
விநாயகர் சதுர்த்தி விரத பூஜை ஸமஸ்–கன்னடா	GCT 6010	36.00
விநாயகர் சதுர்த்தி விரத பூஜை ஸமஸ்–தெலுங்கு	GCT 6011	36.00
விநாயகர் அகவல் போற்றி பாடல்கள்	GCT 323	33.00
விநாயகர் கவசம் போற்றி பாடல்கள்	GCT 316	36.00
ஸ்ரீ கணபதி ஸகஸ்ரநாமம் Vol. I	GCT 142	36.00
ஸ்ரீ கணபதி ஸகஸ்ரநாமம் Vol. II	GCT 143	36.00


தபால் செலவு 18.00

பூஜைக்குகந்த சக்தி வாய்ந்த கணபதி யந்திரம் 3 x 3 – ரூ. 15.00 4 x 4 – ரூ. 25.00
5 x 5 – ரூ. 40.00 6 x 6 – ரூ. 15.00

கோகுலாஷ்டமிக்கு கண்ணனை வழிபட உகந்த புத்தகங்கள்

88.	கீத கோவிந்தம் அஷ்டபதி	4.50
	ஸ்ரீமத் பாகவத மஹாபுராணம் – (இரண்டு பாகமும் சேர்த்து)	75.00
22.	விஷ்ணு ஸகஸ்ரநாம ஸ்தோத்ரம் (தமிழ்) ஆபதுத்தாரக ஸ்தோத்ரம், த்வாதச நாம பஞ்சரம், பஞ்சாயுத ஸ்தோத்ரம், முகுந்தாஷ்டகம், ஸுதர்ஸன மஹா மந்த்ரம், ஸுதர்சன காயத்ரி, விஷ்ணு ஸகஸ்ர நாமாவளிகளுடன்.	7.50
159.	விஷ்ணு ஸகஸ்ரநாம ஸ்தோத்ரம் (ஸமஸ்)	7.50
106.	விஷ்ணு ஸகஸ்ரநாமம் மினி (ஸந்தான கோபால க்ருஷ்ண மஹா மந்த்ரம், மஹா லக்ஷ்மி அஷ்டோத்ர சத நாமாவளி)	4.00
19.	நாராயணீயம், ராஸக்கிடை, குருவாயூரப்பன் பஞ்சரத்னம், கேசாதி பாத வர்ணனம், ஹனுமான் சாலீஸா(உரையுடன்), க்ருஷ்ணாஷ்டகம் ஸ்ரீ ருக்மணி பத்ரீகா ஸ்லோகங்கள்	2.50
42.	ஸ்ரீ நாராயணீயம் ஸம்ஸ்–தமிழ் உரையுடன் முதல்பாகம்	38.00
42A.	ஸ்ரீ நாராயணீயம் ஸம்ஸ்–தமிழ் உரையுடன் இரண்டாம் பாகம்	40.00
153.	நாராயணீயம் தமிழ் மூலம் மட்டும்	20.00
149.	நாராயணீயம் (மலையாளம்)	50.00

தில்லி நியூஸ்:



• ராகுல் சூர்யா - சர்மா ஓவியம் அருகில்

தி.மு.க.

அத்வானி ரதயாத்திரை முடிந்து தில்லி வரும் போது - அதாவது செவ்வாய் 15-ஆம் தேதி - அவரை குருகேஷத்திராவுக்கே சென்று வரவேற்புக் கொடுக்க விரைந்திருக்கிறார், தில்லி மாநகர முதலமைச்சர் சாகிப் சிங் வர்மா. எங்கே மதன்லால் குரானா தம்மை முந்திக் கொண்டு அத்வானியைச் சந்தித்து விடுவாரோ என்று வர்மாவுக்குப் பயம்! ஏனென்றால் தில்லி முதல்வரை மாற்றுவது பற்றிய பேச்சு பரபரப்பாக அடிபடுகிறது, பா.ஜ.க. வட்டாரங்களில். குரானா பழையபடி முதல்வராக வரத் துடிக்கிறார். சாகிப் சிங் வர்மாவுக்கு அதுதான் கவலை!

● ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மாவை இரண்டு ஓவியங்களாக வரைந்த சஞ்சய் பட்டாசார்யாவை விட, இப்போது அவரது உருவப் படத்தை வரைந்திருக்கும் ராகுல் சூர்யா என்ற இளைஞர் மீது, சர்மாவுக்கு ஏக அன்பு. அத்தனை தத்ரூபமாக வரைந்திருக்கிறார் ராகுல். சஞ்சய் பட்டாச்சார்யா வரைந்த ஓவியங்கள் இரண்டில், ஒன்று ராஷ்டிரபதி பவனிலேயே இருக்கிறது. இன்னொன்று ராஜ்யசபாவில் இருக்கிறது. ராகுல் வரைந்த சர்மாவின் ஓவியம் எங்கு இடம்பெறுமோ? அவர் புதிதாகக் குடிபுகப் போகும் இல்லத்திலேயே கூட இருக்கலாமாம்.

● ஏற்கெனவே குஜ்ரால் மீது தி.மு.க. அமைச்சர்களுக்குக் கோபம் - த.மா.கா. அமைச்சர்களை மட்டுமே அவர் கலந்தாலோசிக்கிறார் என்று! அதிலும்

குறிப்பாக நிதியமைச்சர் சிதம்பரத்துக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதுதான் அவர்களின் உறுத்தல். இப்போது பெட்ரோலிய இணை அமைச்சர் டி.ஆர். பாலுவுக்குக் கொடுத்திருந்த முழு அதிகாரத்தைக் குறைக்கிற வகையில், அவருக்கு மேலே ஜானேஷ்வர் மிஸ்ராவைக் கொண்டு வந்து காபினெட் அமைச்சராகப் போட்டு விட்டதில் கொஞ்சம் கூடவே மனக்கசப்பு. டி.ஆர். பாலுவுக்குத் தனி அறை கூட ஒதுக்கப்படவில்லை; அதனால் அவர் வீட்டிலிருந்தபடியே கோப்புகளைப் பார்க்கிறார். இந்தக் கோபங்களெல்லாம் சேர்ந்துதான் அறிக்கையாக வெளிவந்திருக்கிறது என்று தில்லியில் பேச்சு!

● தெலுங்கு தேச எம்.பி. ஜெயப்பிரதாவைச் சூழ்ந்து கொள்ளும் பெண்கள், இளைஞர்கள் எல்லாம், ஆந்திரப் பிரதேசத்தில் மறுபடி மதுவிலக்கைக் கொண்டு வரும்படி கேட்கிறார்கள். முதல்வர் சந்திரபாபு நாயுடு இப்போதுதான் மதுவிலக்கை எடுத்தார்! இனி ஜெயப்பிரதா சொல்லியா கேட்கப் போகிறார்!

அறிக்கைக்கு என்ன காரணம்?

● ஜனாதிபதி தேர்தலில் வோட்டுப் போட சீதாராம் கேசரி வந்தபோது, தேவே கௌடா அமைச்சரவையில் இருந்த குஜ்ரால் அமைச்சரவையில் சேர்க்காமல் விட்ட - தேவேந்திர பிரசாத் யாதவ் அவரிடம் ஏதோ சொல்ல ஓடோடி வந்தார். "எனக்கு எல்லாம் தெரியும்.. தெரியும்.. நீங்கள் போங்கள்!" என்று கேசரி விரட்டி விட்டார். தேவேந்திர பிரசாத் யாதவ் என்ன சொல்ல வந்தார்? கேசரியிடம் முறையிட்டு, எப்படியாவது மறுபடி குஜ்ரால் அமைச்சரவையில் சேர்க்க உதவத்தான் அப்படி அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தாராம்!

● தி.மு.க. தலைவர் கருணாநிதி அதிருப்தியுடன் அறிக்கை விட்டு, அமைச்சரவையிலிருந்து தி.மு.க விலகும் என்று மிரட்டியதில் தேவேகௌடாவுக்கு ஏக சந்தோஷம். "என்னுடைய ஆட்சிக் காலத்தில் எல்லோரையும் திருப்தியாக வைத்திருந்தேன். ஐ.மு.வில் எல்லாரும் சந்தோஷமாக இருந்தார்கள்" என்று குஜ்ராலை மட்டம் தட்டிப் பத்திரிகையாளர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்.



● வி. ரெங்கநாதன், சென்னை – 49


? ஜெயலலிதாவை வீழ்த்துவது சனி என்கிறாரே நடிகை லதா?

! வீழ்த்திவிட்ட பிறகு இது என்ன தேவையற்ற அலட்டல்!

● எஸ். அருள்மொழி, காட்டூர்.

? லாலுவை ஆதரிக்கும் கலைஞர்...?

! லாலுவை அவர் ஆதரிக்கவில்லை. ராஜினாமா தான் கோருகிறார். ஆனால் ரா.ஜ.த. மத்திய அரசுக்கு அளிக்கும் ஆதரவை ஏற்க வேண்டும் என்கிறார். இது பரவாயில்லை. லாலுவின் நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கு பெறாமல் இப்போது அவர் பதவியில் தொடர மறைமுக ஆதரவு அளித்த பீஹார் சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களின் செயல் தான் கேவலம்! வேஷம்!



• நடிப்பும் நிஜமும்

● கே. ராஜபாலு, சேலம்-1

? ஆசிய கோப்பையையாவது இந்திய கிரிக்கெட் அணி கைப்பற்றுமா?

! அதைப் பற்றி என்னங்க.. ஆட்டத்தைப் பாருங்க. திங்கட்கிழமை (14/7) மாலை ஐந்து மணிக்கு ஆபீஸ் விட்டுக் கிளம்பி அவசரம் அவசரமாக வந்து டீ.வி. முன்னால் உட்கார்ந்தால் அடடா, அந்தக் கடைசி அரை மணி நேரம்...! பாகிஸ்தான் வெற்றியின் விளிம்பில் இருக்க, அதை ஸ்ரீலங்கா பின்னுக்குத் தள்ளி முன்னேறிய முனைப்பு... எவ்ளோ த்ரில்..!

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? ஜெயலலிதாவை சந்திக்க சந்திரலேகா விரும்பினால் எந்த முகத்துடன் செல்வார்...?

! பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்ட முகத் தோடுதான்!

இந்த ஆட்சி

● ச.ஆ. கேசவன், இனாம் மணியாச்சி.

? நல்ல அரசியல்வாதிகளைப் பத்திரிகைகள் ஊக்கப்படுத்த வேண்டுமென மூப்பனார் கூறியுள்ளது பற்றி...?

! 'நல்ல அரசியல்வாதிகளை' என்பதைவிட 'அரசியல்வாதிகளின் நல்ல செயல்களை' என்று கூறியிருக்கலாம். ஏனெனில் எந்த அரசியல்வாதியும் எப்போதுமே நல்லவராய் இருப்பதில்லையே!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும் என்று காஞ்சி சங்கராச்சார்யார் கூறியிருப்பது சரியா?

! தேவையில்லாத பேச்சு! ராமர் இருக்கும் இடமெல்லாம் அயோத்தி என்பதை சங்கராச்சார்யார் எடுத்துச் சொல்லாவிட்டால் யார் தான் சொல்வார்கள்...?

● பீ. நடராஜன், அன்னூர்.

? சச்சின் டெண்டுல்கர், ஜெய சூர்யா, சையத் அன்வர் – இவர்களில் யாருடைய ஆட்டத்தை மிகவும் ரசித்துப் பார்ப்பீர்கள்?

! சந்தேகமேயில்லை.. ஜெய சூர்யாதான்! அவரது ஆட்டம் ஆக்ரோஷமான கவிதை; காதலியின் எதிர்பாராத முத்தம். நமுத்துப் போகாத ஆயிரம் வாலா சரம்!

● தேவந்தி துரைராஜ், ஆதியூர்.

? முந்தைய ஆட்சிக் காலத்தைவிட இந்தக் காலம் கலைஞருக்குச் சோதனையாக இருப்பதேன்?

! அவருடைய முந்தைய ஆட்சிக்காலத்தில் சோதனைகள் குறைவு என்று யார் சொன்னது...? இதைவிட அதிகமான சோதனைகளைக் கடந்த காலத்தில் சந்தித்திருக்கிறார் மு.க.

● ப. இராம் முருகன், சென்னை – 81

கலைஞருக்குச் சோதனையாய் இருப்பதேன்...?

? தமிழக அமைச்சர் ஜீ பிடித்ததைக் காட்டுமிராண்டித்தனம் என்று முதல்வர் வர்ணித்ததாலேயே தஞ்சை கோயிலில் தீ விபத்து ஏற்பட்டு பலர் பலியாயினர் என்கிறாரே பா.ஜ.க. லட்சுமணன்...?

! உண்மையில், காட்டுமிராண்டித்தனமான statement இதுதான்!

● ஜீ. ஜெயராமன், கூத்தலூர்.

? இந்த கம்ப்யூட்டர் யுகத்தில் கதைகள் சொல்வது கோமாளித்தனம் என்று சிலர் சொல்கிறார்களே...?

! அந்த கம்ப்யூட்டர் மூலமே எத்தனையோ பேர் நாடகம், கதை, கவிதை படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அந்தச் சிலருக்குத் தெரியாது போலிருக்கு!

● நா. துரைமுருகன், செய்யாறு.

? காங்கிரஸில் பத்து சதவிகிதத்தினர்தான் ஊழல் செய்தவர்கள் என கேசரி கூறியுள்ளாரே...?

! "காங்கிரஸில் மிஞ்சியிருப்பதே அந்த பத்து பர்சென்ட் ஊழல் பேர்வழிகள்தான்... மற்றவர்களெல்லாம் அந்தக் கட்சியை விட்டுப் போய் விட்டார்கள்" என்று ஒரிந்து பத்திரிகையில் முதல் பக்க 'கார்டூன் கமெண்ட்' படித்த நினைவு.

● காதர்ஸ், நாகூர். ☐

? ஆண்டவன் அனுக்கிரஹம் இருந்தால் 'பெரியார்' வேஷத்தில் நடிப்பேன் என சிவாஜி கணேசன் கூறியுள்ளது முரண்பாடாய் இருக்கிறதே...?

! இதிலே என்னங்க முரண்பாடு...? பெரியார் வேஷத்தில் நடிப்பேன் என்றுதான் சொல்கிறாரே தவிர, பெரியார் கொள்கைகளை ஏற்பேன் என்று அவர் சொல்லவில்லையே!



• இவரன்றி யார்...?



• சதவிகிதக் கணக்கு!



• சாந்த முகத்துடன்...

● கே.வி. சூர்யா, நல்லத்துக்குடி

? சினிமா, அரசியல், பத்திரிகை மூன்றும் இல்லாவிட்டால் ஒரு நாடு எப்படி இருக்கும்...?

! 'போர்' அடிக்கும்!



• ஊக்கம் கோரி...



• சோதனையா...?

● செங்குன்றம் கே. ரமேஷ்ராமன், சென்னை - 52.

? யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளும் பழமொழிக்கு இன்றைய அரசியல் உதாரணம்...?

! வைகோ! (சுசுவாமியை யானை என்றே கருத முடியாது!)

● அ. இளம்பரிதி, ஆதமங்கலம்.

? இந்தியாவில் கம்யூனிஸ்டுகளின் வளர்ச்சி பற்றித் தங்கள் கருத்து என்ன...?

! மற்ற கட்சிக்காரர்கள் தங்களை 'வெறுத்துக்' கொண்ட அளவுக்கு நிச்சயம் இந்திய கம்யூனிஸ்டுகள் (மார்க்ஸிஸ்டுகளும்தான்) தங்களை 'வளர்த்துக்' கொள்ளவில்லை என்பது பெருமைக் குரிய உண்மைதான்.

● அ.சுகுமார், காட்டுக்காளுர்.

? தேசத் தலைவர்கள் பெயரை நீக்கும் அதிகாரத்தை கருணாநிதிக்குக் கொடுத்தது யார்...?' என்று ஜெ வினா எழுப்புவது பற்றி..?

! சந்தேகமென்ன, 'ஜெ'தான்! அவர் தவறு மேல் தவறு புரிந்திராவிட்டால் தி.மு.க. ஆட்சியே வந்திருக்க முடியாதே...!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? சுறுசுறுப்புக்கும் அவசரத்துக்கும் என்ன வேறுபாடு...?


! சிந்தனை + வேகம் = சுறுசுறுப்பு
வேகம் - சிந்தனை = அவசரம்.

☐ ரூ. 50 பரிசு பெறுபவர்:
ஏ. காதர்,
13, மணவரா வடக்கு வீதி,
நாகூர் — 611 002.

• 'ஈவியாமே...?!'



• யானை போல்





சூர்யவம்சம்

நிஜமாகவே ஒரு டீசன்ட்டான, கட்டுக்கோப்பான கதை. உறுத்தாத வசனம். நாட்டாமைக்குப் பிறகு சரத்குமாருக்குக் கை கொடுத்திருக்கும் இந்தப் படத்திலும் அவருக்கு இரட்டை வேடம்.

'உதவாக்கரை' என்று மூத்த சரத் திட்ட, அவரது மகனான இளைய சரத்தும், தேவயானியும் வாழ்க்கையில் உயர்ந்து 'உதவும் கரைகள்' ஆவதுதான் கதையின் மைய நாலிழை.

மூத்த சரத் கெட்-அப் பொருத்தம். பேரனின் 'ஃப்ரெண்ட்'டாகப் பாலமமைத்துக் கொள்ளும் காட்சிகளில் வெளிப்படுத்தும் நெகிழ்ச்சியும் ஓ.கே. ஆனால் கம்பீரத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பாததாலோ என்னவோ, அனுதாபத்தை அள்ளிக் கொள்ள வேண்டிய இடங்களில்கூட மூத்த சரத்திடம் இறுகிய முகபாவங்கள்.

படத்தில் அங்கங்கே பணமா பாசமா, பச்சைவிளக்கு, கௌரவம், அண்ணாமலை கதைகளின் நெடி. அவ்வளவு ஏன்? கணவனும், மனைவியும் முறையே புடைவை, வேட்டியை ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர் வாங்கி, சாப்பாட்டுக்கே தாளம் போடும்போது ஓ.ஹென்ரியின் கதைகூடத் தெரிகிறது!

தேவயானியிடம் வெகு இயல்பான நடிப்பு - கலெக்டர் ஆவதற்கு முன். கல்யாண வீட்டில் சரத்தை அலட்சியம் செய்யும் ப்ரியாராமனை மூக்கறுக்கும்போது தேவயானி காட்சியமைப்பாலும், நொந்து போய் சரத்திடம் உதவி கேட்டு வரும் காட்சியில் ப்ரியா தன் முக பாவங்களாலும் மின்னுகிறார்கள்.

ராஜ்குமார் இசையில் 'ரோசாப் பூ' பாடல் பலமுறை படத்தில் இடம் பெறுவதாலும், பல இனிமையான இளையராஜாவின் ட்யூன்களை நினைவுபடுத்துவதாலும், மனத்தில் பதிகிறது. மற்றபடி 'என்னடி முனியம்மா', 'ஒத்த ரூபா தாரேன்' வரிசையில் 'சலக்கு சலக்கு' பாட்டும் இடம் பெற்று தென்னகப் பேருந்து நிலைய டீக்கடைகளின் விருப்பப் பாடலாகியிருக்கிறது!


க்ளைமாக்ஸில் மருத்துவமனையில் சாகப் பிழைக்கக் கிடந்த மூத்த சரத், டக்கென்று சரியான சமயத்தில் மகனைக் காப்பாற்ற வருவது வாதிக் ஒட்டை.

பின்பாதியில் டெம்போ மட்டும் போதிய அளவு இருந்திருந்தால் 'சூப்பர் குட் பிலிம்' என்று சொல்வதில் ஆட்சேபணை இருந்திருக்காது.

— ஜி

பரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு)
ஆண்டுச் சந்தா : ரூ. 1200/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 600/- (வெளிநாடு - விமானத் தபால்)

எல்லாமே எளிதாக,
மிக வசதியாக
மாறிவரும்போது,
உங்கள்
கியாஸ் ஸ்டவ்
மட்டும்
அப்படியே
இருக்க வேண்டுமா?



கியாஸ் அடுப்பைப் பற்ற வைக்கப் படும் பாடு இனி மேல் உங்களுக்கு இருக்காது. ஏனெனில் உங்களுக்கு உதவ வந்துள்ளது - ஸ்பார்க்கி - இந்தியாவின் முதலாவது ஆன்-ஸ்டவ் கியாஸ் இக்னைட்டர். இதை உங்களுக்கு வழங்குவது, கேப்ஸன்ஸ் குரூப் - LPG அடிப்படையிலான சாதனங்களுக்கு முன்னோடியாக, 20 வருட அனுபவம் கொண்டவர்கள் ஆயிற்றே !

ஸ்பார்க்கி - நீண்ட காலம் உங்களுக்கு உதவும் துணை :

- **பயன்படுத்துவது எளிது :** ஸ்பார்க்கி பயன்படுத்துவதன் மூலம், ஒரே அசைவில் - இடது அல்லது வலது - உங்கள் கியாஸ் ஸ்டவ் பர்னரைப் பற்ற வைக்கலாம்.
- **எந்த ஒரு LPG ஸ்டவ் அடுப்பிலும் பொருத்தலாம் :** ஸ்பார்க்கி கியாஸ் இக்னைட்டரை, பழையதோ அல்லது புதியதோ, எந்த ஒரு கியாஸ் ஸ்டவ் அடுப்பிலும் எளிதில் பொருத்தலாம்.
- **முற்றிலும் பாதுகாப்பானது :** ஸ்பார்க்கி பயன்படுத்துவது பாதுகாப்பானது. ஏனென்றால் ஸ்டவ் அடுப்பின் எந்த பாகங்களிலும் எதுவும் செய்யப்படுவதில்லை.
- **சிக்கனம் மற்றும் நீண்ட கால உழைப்பு :** நீண்ட கால அடிப்படையில் ஸ்பார்க்கி மிகவும் சிக்கனமானது. கியாஸ் சேமிப்பும் நிச்சயம்.
- **பொருத்துவது எளிது :** உங்கள் ஸ்டவ் அடுப்பின் முன்பகுதியில் சிறு துளைகளைப் போட்டு, ஸ்பார்க்கி சாதனத்தை 30 நிமிடங்களில் பொருத்திவிடலாம்.

கேப்ஸன்ஸ் அறிமுகப்படுத்துகிறது



Direct marketing franchise / dealers / agents solicited.

ஸ்பார்க்கி
ஆன்-ஸ்டவ் கியாஸ் இக்னைட்டர்

SPARKY
GAS STOVE IGNITOR

KABSONS DETECT
DETECTIVE DEVICES PRIVATE LIMITED
7-1-214/1/A, Dharam Karan Road, Ameerpet,
Hyderabad - 500 016. A.P. Ph : 291713, 290487

MEMBER KABSONS GROUP

விரல் நுனியிலே வியக்க வைக்கும் வசதி

FCB • ULKA 50154

PH.NOS.OF AUTHORISED DISTRIBUTORS: MADRAS: 5352828 / 5350434 • 4817660 • 6384537 / 6385267. VELLORE: 24119, CHENGALPATTU: 26555, COIMBATORE: 441195, ERODE: 213642 / 223667, DHARAMPURI: 60716, VILLUPURAM : 22796, NAGERCOIL:31664.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4362/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

